கல்கி



KALKI 20-10-1957 30 நயா பைசா



தளதளக்கும் ஈனோ வயிற்றுக் கோளாறுகளிலிருந்து எட்டே விநாடிகளில் நிவாரணமளிக்கிறது!

அஜீர்ணம், நெஞ்செரிச்சல், அல்லது வாயுப் பொருமல் இவைகளில் எதையும் ஈனோ நிவர்த்திக்கிறது!

ஒரு கிளாஸ் தளதளக்கும் ஈனோ ப்ரூட் ஸால்ட் சாப்பிட்டால் எட்டே விநாடிகளில் வயிற்றுக் கோளாறுகள் சீராகின்றன. மிதமாக பேதி ஏற்படவிரும்பினால் வெறும் வயிற்றில் சிறிது பெரிய 'டோஸ்' ஈனோ அருந்தினால் போதும். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் ஈனோ வைத்திருங்கள்.



இப்பொழுது மோசடியைத் தடுக்கும் புதிய பாட்டிலில் விற்கப் படுகிறது

(3 அளவுகளில் கிடைக்கும்)

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

அமித அமிலங்களை அடக்கும் தளதளக்கும் பானம்


'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்

குரூப் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஜான்ஸன் அண்ட்
ஜான்ஸன்
அழகான குழந்தைகளுக்கு
அற்புதமான பவுடர்
Johnson's
BABY
POWDER
Johnson & Johnson
இலவச புத்தகம்
ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது தமிழ் பிரதியில் எது வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதவும்.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், பி.ஓ. பாக்ஸ் 1970, டிபார்ட்மெண்ட் 38-O பம்பாய்



மலர் 17 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற | ஹேவிளம்பி
இதழ் 12 | தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | ஐப்பசி 4

கீழத்தூவல் விசாரணை!

கீழத்தூவல் கிராமத்திலே நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தை விசாரித்த ஸ்ரீ வேங்கடேசுவரனின் அறிக்கை சென்ற வாரம் வெளியாகியது.

அந்த அறிக்கையைப் பார்த்த பொதுமக்கள் "இப்படித்தான் இருக்கும்! எதிர்பார்த்தாற் போலவே இருக்கிறதே!" என்று பேசிக் கொண்டனர்.

இந்த அறிக்கை பொதுமக்களை வியப்படையவும் செய்தது. ஸ்ரீ வேங்கடேசுவரன் அறிக்கை பத்திரிகைகளில் வெளியானதே பொதுமக்களின் வியப்புக்குக் காரணம்.

இந்த நிர்வாக அதிகாரியின் அறிக்கை வெளியிடப்படமாட்டாது என்றே பொது மக்கள் எண்ணியிருந்தனர்! அதைச் சர்க்கார் மட்டும் படித்துப் பிரயோசனப்படுத்திக் கொண்டு சரியான பகிரங்க நியாய விசாரணை நடத்த ஏற்பாடு செய்வார்கள் என்று நாமும் எண்ணி யிருந்தோம்.

ஸ்ரீ வேங்கடேசுவரன் விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, நமது மந்திரிகள் ஸ்ரீ சுப்பிரமணியமும், ஸ்ரீ பக்தவத்ஸலமும் அப்பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தனர். சாட்சியம் கூறியவர்களின் வாக்குமூலங்கள் எல்லாம் பத்திரிகைகளிலும் வெளிவந்து கொண்டிருந்தன!

மந்திரிகள் சென்னைக்குத் திரும்பியவுடன், பத்திரிகை நிருபர்கள், அவர்களைச் சந்தித்து "ஸ்ரீ வேங்கடேசுவரன் அறிக்கையை வெளியிடுவீர்களா?" என்று கேட்டனர். அதற்கு ஒரு மந்திரி, "வெளியிட்டாலும் வெளியிடுவோம், வெளியிடாமல் இருந்தாலும் இருப்போம்" என்றார். 'ஏன். இந்த வேங்கடேசுவரன் விசாரணை ஏற்படுத்தினோம்' என்று அங்கலாய்க்கும் தொனியிலும் பேசினார். ஆகவே, வேங்கடேசுவரன் அறிக்கை 'பிரசுரிக்கப்பட மாட்டாது' என்று பொதுமக்கள் தீர்மானித்தனர். வேங்கடேசுவரன் அவர்களின் முடிவு நிர்வாகத்துக்கு விரோதமாகவே இருக்கும் என்று எண்ணி வந்தார்கள்.

நிர்வாக பரம்பரை முறையை அறிந்தவர்கள் அறிக்கையில் 'போலீஸார் சுட்டது நியாயமே' என்றிருப்பதைக் கண்டு வியப்படையவில்லை.


சென்னை சர்க்கார் விரும்பிய முடிவு என்ன என்பதை அவர்களுடைய பல அறிக்கைகள் வியக்தமாக எடுத்துக் கூறிக் கொண்டிருந்தன.

மேலும் மத்திய சர்க்காரிலிருந்து வந்த ஸ்ரீ தத்தாரும் ஒரு அறிக்கை வெளியிட்டார். ராஜ்ய சர்க்காரின் கருத்துக்களை ஆமோதிப்பதே மத்திய சர்க்கார் தங்கள் கடமையாகக் கொண்டிருக்கின்றனர் என்பதைச் சந்தேகமற வெளிப்படுத்தி விட்டார்!

இந்நிலையில், ராஜ்ய சர்க்காரில் உயர்தர உத்தியோகஸ்தராக (ரெவினியு போர்டு மெம்பராக) இருக்கும் ஒருவரிடமிருந்து வெளியாகும் அறிக்கை மேற்கண்ட விதத்தில் தானே அமையும்?

தமிழ் மக்கள் ராஜ்ய சர்க்காரின் நிர்வாக அதிகாரி விசாரணை நடத்த வேண்டாம் என்றும், உயர்நீதி மன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தனர். ராஜ்ய சர்க்கார் அதற்குக் கண்டிப்பாக மறுத்தும் வந்தனர். நீதிமன்ற விசாரணை என்றாலே "முடியாது! முடியாது!" என்று சொல்லி வந்தனர்!

ஸ்ரீ வேங்கடேசுவரன் அறிக்கை வெளியான பிறகும் சிலர் நீதிமன்ற விசாரணை வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள்.



உண்மையை வெற்று அறிக்கைகளினுல் மூடி மறைத்துவிட முடியுமா?

வேங்கடேசுவரன் அறிக்கைக்குப் பிறகு அதிலும், 'ஸ்ரீ வேங்கடேசுவரன் அறிக்கையை அப்படியே ஒப்புக் கொள்ளுகிறும். போலீஸார் சுட்டது சரியே!' என்று சர்க்கார் ஆமோதிப்போடு வெளியான பிறகு நீதிமன்ற விசாரணையினுல் என்ன பயன் உண்டாகும்?

எந்த நீதிபதி, ஒரு ராஜ்ய சர்க்காரின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்து விட்டு அந்தச் சர்க்காருக்கு விரோதமாகத் தீர்ப்புக் கூற முடியும்? அத்தகைய தர்ம ராஜாவை இந்தக் காலத்தில் தேடிப் பிடிக்க முடியாது.

சாதாரணமாக, ஓடிக் கொண்டிருக்கும் ரயில் வண்டி, ஏதோ என்ஜின் கோளாறினுலோ, பாலக் கோளாறினுலோ, தடம் புரண்டு ரயில் கவிழ்ந்து சில உயிர்ச் சேதம் ஏற்பட்டு விட்டால் அதைக்கூட ஒரு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று சட்டம். "போலீஸார் சுட்டு யாரேனும் இறந்து விட்டால், சந்தர்ப்பம் எதுவாயினும் நீதிமுறை விசாரணை செய்துதான் தீருவோம்" என்று சமீபத்தில் இந்தியப் பிரதம மந்திரி உறுதி மொழியும் கூறினுர். அந்த உறுதி என்னவாயிற்றே, இப்போது தெரியவில்லை!

அரசியல் கட்சி பேதங்களும், வகுப்புவாதத்தின் அடிப்படையில் திட்டம் போட்டு நடத்திய தேர்தலில் பிறந்த துவேஷமும் நூறுக்கு மேற்பட்ட கிராமங்களை நாசமாக்கி, எண்ணற்ற மக்கள் வீடு வாசல் இழந்து தவிக்கச் செய்திருக்கின்றன. இதை விசாரித்து உண்மையை அறிய இந்த ராஜ்யத்தில் வழியில்லை!

ஹிந்திப் பிரச்னை

தென்னுட்டு மக்கள் இந்தி பேசவும் எழுதவும் தெரிந்து கொள்ளுவது, வியாபார நிமித்தமும் மற்றத் தொடர்புகள் காரணமாகவும் மிக அவசியம். இந்த விஷயத்தில் யாரும் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

தென்னுட்டு மக்கள் வடநாட்டு வியாபாரிகளிடம் நேரிடையாகத் தொடர்பு கொள்ளாமல் தரகர்கள் மூலமும் ஏஜெண்டுகள் மூலமும் வியாபாரம் நடத்துகின்றனர். இது எத்தனை நாட்கள் நடைபெற முடியும்? ஏஜெண்டுகளை வைத்தே எப்போதும் செய்ய முடியுமா? ஆகவே, தென்னுட்டவர்களுக்கு இந்தி தெரிந்திருக்க வேண்டியது மிக அவசியம்!

பின் ராஜாஜி ஏன் இந்தியை எதிர்க்கிறுர்? எவ்வளவு மட்டும் எதிர்க்கிறுர்?

மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்கும் கடிதப் போக்குவரத்தும், மற்ற விவகாரங்களும் நடைபெற வேண்டியிருக்கின்றன!

அப்படியே ஒரு ராஜ்யத்துக்கும் மற்றொரு ராஜ்யத்துக்கும் கடிதப் போக்குவரத்தும் விவகாரங்களும் நடக்கவேண்டும். உதாரணமாக வங்க நாட்டுச் சர்க்காரும் தமிழ் நாட்டுச் சர்க்காரும் கடிதங்கள் எழுதிக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இவை எந்த மொழியில் நடைபெற வேண்டும் என்பதுதான் கேள்வி!

இப்பொழுது ஆங்கிலத்தில் நடைபெற்று வருகிறது. இந்த முறை அப்படியே இருக்க வேண்டும் என்பது ராஜாஜியின் கருத்து.

மொத்தத்தில் ராஜாஜியின் கட்சி மத்திய அரசாங்க நிர்வாக பாஷையும் ராஜ்யாந்திர நிர்வாக பாஷையும் தற்போது நடந்து வருகிறபடியே ஆங்கிலமாக இருக்கவேண்டும் என்பதுதான்.

ஆனால் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் 1965 லிருந்து இந்தி ஆட்சி மொழியாக வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது!

ஆயினும் அது இதற்குத் தடையாகாது. அரசியல் நிர்ணயச் சட்டத்தைப் பல முறை மாற்றியிருக்கிறோம். தற்போதும் மாற்றிக் கொள்ளலாம் என்கிறார் ராஜாஜி.

ஆகவே ராஜாஜி ஆங்கிலத்துக்குப் பதிலாக மத்திய அரசாங்க மொழியாக இந்தி ஏற்கப்படுவதைத்தான் எதிர்க்கிறார்.

இந்தி மொழியினால் தமிழ் பாதிக்கப்படும் என்று அவர் சற்றும் நம்பவில்லை! அவருக்குத் தமிழின் சக்தியில் பூரண நம்பிக்கையுண்டு.

இந்தி படிக்க வேண்டும் என்று சொல்லி வந்தவர் இன்று வேண்டாம் என்கிறாரே என்று பலர் வியக்கிறார்கள். ஆனால் இந்த வாதத்துக்கு நல்ல சமாதானத்தைச் சென்ற வாரம் கிறிஸ்துவக் கல்லூரியில் பேசும்போது ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கினார்.

''என் மகனை, 'மழைச் சொக்காய் வாங்கிக் கொள். நீ போகும் ஊரில் மழை அதிகம்' என்றேன். ஆனால் அவன் கேட்கவில்லை. மழைச் சொக்காய் வாங்கிக் கொள்ளவில்லை. நான் சொன்னபடி அவன் செய்யவில்லை என்று மகனை மழையில் பிடித்துத்தள்ளலாமா?

''பாரதம், சுயராஜ்யம் பெறுவது திண்ணம் என்று அப்போதே நாங்கள் சிலர் கண்டோம். சுயராஜ்யம் வந்தால் நாட்டில் பெருந்தொகையாக உள்ள இந்தி பேசுவோர் ஆட்சிக்கு வருவார்கள். அவர்கள் இந்தியை ஆட்சி மொழியாக்க வற்புறுத்துவார்கள். அதற்கு இப்பொழுதிலிருந்தே தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்திப் பிரசாரம் செய்தோம்.

''ஆனால் நான் சொன்னபடி தமிழ் மக்கள் இந்தியைப் படிக்கவில்லை. பள்ளிக்கூடத்தில் இந்தி சொல்லித் தருவதை எதிர்த்தார்கள்! இப்போது ஏற்பட்டிருக்கும் சங்கடத்தை நான் முன்கூட்டியே அறிந்து எதிர்பார்த்தது என்னுடைய குற்றமா?'' என்று கேட்டார்!

அன்பின் காரணமாக அன்று இந்திப் பிரசாரம் செய்தார். இன்றும் அதே அன்பின் காரணமாக இந்தியை ஆட்சி மொழியாகச் செய்யாதீர்கள் என்கிறார்.

''இந்தியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள், இந்தியைக் கையாளுவதுபோல் எங்கள்



தமிழ் மக்கள், கையாள முடியாது. அதனால் பாரத நாட்டுச் சேவையில் தமிழ் மக்கள் பின்தங்கிவிட நேரும். அது அநீதியாகும்" என்கிறார். பாரதத்தின் ஐக்கியமே பாதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்கிறார்.

பாரததேசம் அடிமைப்பட்டிருந்த நாட்களில், அரசாங்க பாஷையான ஆங்கிலத்தைத் தாய்மொழியாகப் பெற்றவர்களை உயர்ந்த சாதியினர் என்று மக்கள் எண்ணினார்கள்.

இந்தியை அகில இந்திய அரசாங்க மொழியாகச் செய்து விட்டால் இந்தியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள் ஒரு உயர்ந்த சாதியினராக ஸ்தானம் பெறுவார்கள். இது பாரத நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல.

எந்தக் காரணமாயினும் சரி, நம் மொழிகளில் ஒன்றாகிவிட்ட ஆங்கிலத்தைப் புறக்கணிக்க வேண்டியதில்லை.

இந்தி தாய்மொழியாகக் கொண்டவரின் தொகை ஐந்தில் இரண்டு பாகங்கள். மற்ற ஐந்தில் மூன்று பாகங்கள் வேறு பாஷைகள் பேசி வருபவர்கள். ஆனால் இந்தியாவில் எந்தப் பாகத்திலும் சர்க்கார் உத்தியோகத்துக்குத் தகுதி பெற்றவர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் நல்ல பழக்கமடைந்தவர்கள். இதற்கு மாறாகப் பெரும்பாலான ராஜ்யங்களில் இந்தி பழக்கமே கிடையாது. புதிதாக ஏற்படுத்திக் கொள்வதற்கு மூன்று தலைமுறையாகும். அதற்கும் மிகச் சிரமப்பட வேண்டும். தற்போது படித்த மக்கள் பகுதியிலெல்லாம் ஆங்கிலத்தைக் கையாண்டு வருகிறார்கள். அது ஒரு பொதுச் சொத்து. அதை ஏன் இழந்துவிட வேண்டும்? இழந்துவிட்டு, ஒரு பிரதேசத்தாருக்கு மட்டும் அலாதி சௌகரியம் ஏற்படுத்துவது பட்சபாதமாகும்.

இந்தி மொழிக்காரர்களின் தாய்மொழிப் பற்று, மற்றவர்களுக்கு நஷ்டமாக்காமலிருக்க வேண்டும். அதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அதை நாம் செய்ய வேண்டும். தூங்கினோமானால் நஷ்டமடைவோம். இந்தி மொழிக்காரர்களின் வரம்பு மீறிய ஆர்வத்தை பண்டித ஜவாஹர்லால் நேரு வெறுக்கிறார். ஆனாலும் பலமான வெறிக்கூட்டம் அவரை நிர்ப்பந்தப்படுத்தி வருகிறது. நாம் சும்மா இருந்து விட்டால் நேர்மையுணர்ச்சியுள்ள நேருஜியால் கூட அதைச் சமாளிக்க முடியாது!

பாகிஸ்தான் பிரதமர் ராஜிநாமா

பாரத நாட்டிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து பத்து வருஷங்கள் ஆகின்றன. ஆனால் அங்கு இன்னும் நிலையான அரசாங்கம் உருவாவதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை. அங்கு கட்சிப் போட்டியும் பதவிப் பித்தும் திடீர் அரசியல் மாறுதல்களும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன. பத்து ஆண்டுகளுக்குள் பல மந்திரி சபைகள் மாறிவிட்டன. பாகிஸ்தானின் முதல் பிரதம மந்திரி சுட்டுக் கொல்லப்பட்டார். இரண்டாவது பிரதம மந்திரி வேலையிலிருந்து நீக்கப்பட்டார். மூன்றாவது, நாலாவது பிரதம மந்திரிகள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்யும்படி நேர்ந்தது. பொதுத் தேர்தல்கள் நடந்து பாகிஸ்தான் ஆசியாவிலேயே முக்கிய குடியரசாகத் திகழும் என்றும் கூறிவந்த பாகிஸ்தான் பிரதமர் சுஹ்ரவர்த்தியும், கடைசியில் மந்திரி சபையின் ஆதரவை இழந்து பதவியை ராஜிநாமா செய்யும்படி நேர்ந்து விட்டது.

இவ்விதம் பாகிஸ்தானில் ஏற்படும் திடீர் மந்திரி சபை மாறுதல்களுக்கும் அரசியல் குழப்பங்களுக்கும் அநேக காரணங்கள் உண்டு.

முக்கியமாக மேற்கு பாகிஸ்தானில் பஞ்சாபியர்கள் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றனர். கிழக்குப் பாகிஸ்தானில் வங்காளிகள் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றனர். வங்காள முஸ்லீம்களைப் பஞ்சாப் முஸ்லிம்கள் விரும்பவில்லை. பஞ்சாப் முஸ்லிம்களை வங்காள முஸ்லிம்கள் விரும்பவில்லை. மதத்தைத் தவிர இந்த இரு சாராரையும் இணைக்கக் கூடிய அம்சம் வேறு எதுவுமே இல்லை. பஞ்சாபியர்களுக்கும் வங்காளியர்களுக்கும் பாஷை வேறு, பழக்க வழக்கங்கள் வேறு; இதைத் தவிர ஒன்றுக்கொன்று வெகு தொலைவில் இருக்கின்றன. இதனாலேயே அவ்விரு பிரதேசங்களுக்கும் அன்னியோன்னிய பாவம் ஏற்பட முடியாமல் இருந்து வருகிறது. கிழக்கே பாகிஸ்தானுக்குப் பாஷை சுதந்திரமும், மேற்கு பாகிஸ்தானுக்கு உட்பட்ட அரசியல் சுதந்திரமும் ஏற்பட்டுவிடுமாயின், குழப்பமும் பகையும் தீருவதற்கு இடம் உண்டாகலாம்.

அது எப்படியாயினும் அண்டை நாட்டில் நிகழ்ந்துவரும் அரசியல் விபரீதங்களைக் கண்டு இந்திய மக்கள் மகிழ்ச்சி அடைவதற்கில்லை. அதற்கு மாறாக அத்தகைய சூழ்நிலை இந்தியாவையும் ஓரளவு பாதிக்கக்கூடும். பாகிஸ்தானில் அரசியல் குழப்பங்கள் மறைந்து நிரந்தரமான சர்க்கார் ஏற்பட்டால்தான் இந்தியா—பாகிஸ்தான் பிரச்னைகளும் நல்ல முறையில் தீருவதற்கு வழி பிறக்கும்.

செப்டம்பர் மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற

தேர்த் திருவிழா

என்னும் கதை அடுத்த இதழில் பிரசுரமாகிறது.

பரிசு பெற்றவர்: திரு க. பஞ்சாபகேசன், 14, சேஷபுரம், தென்னூர், திருச்சி.

அருள் வாக்கு

இந்தியா ஒரு ஏழை நாடு. ஆனால் முன்காலத்தில் ஏழைகள் சேர்ந்துதான் இப்பொழுது நாம் தென்னாடெங்கும் ஒவ்வொரு நகரிலும் கிராமத்திலும் காண்கிற பெரிய ஆலயங்களையும் கோபுரங்களையும் கட்டினார்கள். அந்தக் காலப் பொருளாதார அமைப்பு வேறு. ஜனங்களின் தேவை கொஞ்சம்தான். உபரி விளைபொருள்களைப் பொதுஜனங்களுக்கு ஆத்மிகத் துறையிலும் மற்ற வகைகளிலும் பயன்படக்கூடிய பிரும்மாண்ட கட்டடங்களை எழுப்பிய தொழிலாளருக்குக் கொடுத்து உதவினார்கள்.

இந்தக் காலத்திலோ சமூக சேவை என்பது வேறு மாதிரியாயிருக்கிறது. வறுமை, நோய், அறியாமை ஆகியவைகளை ஒழிக்கக் கூட்டுறவு அடிப்படையில் பள்ளிக்கூடங்கள் கட்டுகிறார்கள்; ஆஸ்பத்திரிகள் நிறுவுகிறார்கள்; பாங்குகள் ஏற்படுத்துகிறார்கள். இந்த மாதிரி சமூக சேவையினால் முழுப் பயனும் கிடைத்து விடுவதில்லை. பொய் பேசுதலையும் லஞ்ச ஊழல்களையும் கல்வியால் ஒழிக்க முடியவில்லை. இதற்கு மாறாக, நவீனக் கல்வி பெறாத மலைஜாதிப் பாமர மக்களிடம் அதிக நேர்மையும் நாணயமும் காணப்படுகின்றன. ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சிகிச்சை செய்து கொண்டு விடலாம் என்ற நம்பிக்கையானது மக்களைத் தாறுமாறாக நடக்கச் செய்து விடுகிறது. எத்தனையோ பாங்கிகள் ஏற்பட்டிருந்தும் வறுமையைத் துடைத்து விடவில்லை.

தேவைகளைப் பெருக்கிக் கொள்வதால், சதா அதிருப்தியில் உழல நேரிடுகிறது. எளிய வாழ்க்கையில்தான் உண்மையான சந்தோஷத்தைக் காண முடியும். நம் நாட்டில் சமுதாயக் கோவில்கள் பல இருக்கின்றன. ஆவுடையார் கோவிலை எடுத்துக் கொள்வோம். அங்கு ஏராளமான அரிசி சாதம் பொங்கிச் சுவாமிக்கு நைவேத்தியம் செய்தபின், அந்தச் சாதத்தை எல்லோருக்கும் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். அநேக கோவில்களில் சமுதாய வாழ்க்கை உணர்வு ஏற்படுத்துவதற்கென்றே விசேஷ விழாக்களும் தினங்களும் வைத்திருக்கிறார்கள். அந்தச் சமயங்களில் தேவையானவர்களுக்கு நிவேதனம் செய்த உணவு வழங்கப்படுகிறது.

உதவி பெற்றதற்கு நன்றி செலுத்துவது ஒரு சிறிய பண்பு. சர்க்காருக்கும் கார்ப்பரேஷனுக்கும் கொடுக்கப்படும் வரிகள் இது போன்றதே. அவை அளித்த சேவைகளுக்கு நன்றியளிப்பதாகத் தரப்படுவதாகும். இதேமாதிரி மக்களுக்கு நன்மைகள் நல்கும் புலப்படாத ஏஜன்சிகளும் இருக்கின்றன. வேதத்தில் விதிக்கப்பட்டபடி அந்த ஏஜன்சிகளுக்கு மக்கள் தமது நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

இப்படிச் செய்வதுதான் யக்ஞம் என்பது. இன்றைய சமுதாய அமைப்பில் பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், பாங்குகள் போன்ற சமூக சேவை ஸ்தாபனங்கள் அவசியமாயிருந்தாலும் பக்தியின்றி அவற்றின் நோக்கங்கள் ஈடேறா. ஆண்டவன் அருளில் அசையாத நம்பிக்கை வைத்துச் சகிப்புச் சக்தி பெறுவதே மாந்தர் துயர் தீர்க்கும் அருள் மருந்தாகும். பக்திதான் அந்தக் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளக்கூடிய சக்தியைத் தரவல்லது. அந்த பக்தியை வளர்க்கும் ஏஜன்சிகளே ஆலயங்கள்.

ஆலயங்களில் மூர்த்திகளுக்கு நிவேதனம், காணிக்கைகள் செலுத்துவது, எல்லாவற்றையும் படைத்த பரம்பொருளுக்கு, நன்றி செலுத்துவதற்கு அறிகுறியாகும். மனிதனால் ஒரு சிறு புல்லைக்கூடச் சிருஷ்டிக்க முடியாது. எனவே, நாம் உட்கொள்ளுவதை அல்லது அணிவதை முதலில் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்காமலிருப்பது நன்றியற்ற செய்கையாகும். சிறந்தனவற்றைத் தான் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். எல்லோருமே வீட்டில் பூஜைகள் செய்து ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க இயலாது. இப்படிப்பட்ட நிலையில் தான் ஆலயங்கள் அவசியமாகின்றன.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடிபீடம்.

அன்பார்ந்த நேயர்களுக்கு

இந்தக் கல்கி இதழ் அட்டையில் நேயர்கள் தீபதரிசனம் செய்திருப்பார்கள். கல்கி நேயர்களுக்கு எல்லாவித மங்களமும் உண்டாக வேண்டும் என்று இந்தத் தீபாவளித் திருநாளில் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம். தமிழ் நாட்டில் அமைதியும் அன்பும் ஏற்பட்டுத் தீபாவளியை எல்லாரும் குதூகலமாகக் கொண்டாடப் போகிறார்கள். தமிழ் நாட்டில் இந்த ஆண்டு தீபாவளிக் கொண்டாட்டம் தனிக் குதூகலத்துடன் விளங்கப் போகிறது. கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும், சித்திரப் படங்களும் இன்னும் பல விசேஷ அம்சங்களுடன் கல்கி தீபாவளி மலர் இணையற்றுத் திகழும்போது, தீபாவளிக் கொண்டாட்டத்துக்கு என்ன குறை?

*** *** ***

கல்கி தீபாவளி மலரில் மிக முக்கியமான அம்சம் எது என்று நேயர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அது மதிப்புக்குரிய நமது ராஜாஜி அவர்கள் எழுதியிருக்கும் நாடகம்தான். சுதந்திர இந்தியாவில் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அது விளக்கிக் காட்டுகிறது. ராஜாஜி அவர்கள் இதயத்தில் இந்த நாட்டு நலனும் நாட்டு மக்களின் நல்வாழ்வும் எவ்வளவு ஆழமாக இடம் பெற்றிருக்கின்றன என்பதற்கு 'பாற்கடல்' என்ற நாடகமே அத்தாட்சி.

இன்னொரு விசேஷ அம்சம். ஒரு மகாகவியின் கதையை இன்னொரு மகாகவி மொழிபெயர்த்திருக்கிறார். கவி ரவீந்திரரின் 'காணாமற்போன நகைகள்' என்ற கதையை மகாகவி பாரதியார் மொழிபெயர்த்திருக்கிறார். இந்தக் கதைப் பொருளின் மேன்மை, கதாநாயக கதாநாயகிகளின் குறை குணங்கள், தமிழ் மொழி பெயர்ப்பில் உள்ள சொல் நயம் ஆகிய இவைகள் இந்தக் கதையில் சிறப்பாக அமைந்துள்ளன.

"தீபாவளி" என்ற பாரதியாரின் கட்டுரை ஒன்றும் மலரில் வெளியாகிறது. இந்தக் காலத்தின் நிலையை அப்பொழுதே உணர்ந்து எழுதியிருக்கும் மகாகவியின் தீர்க்கதரிசனத்தை எண்ணி எண்ணி வியக்க வேண்டியிருக்கிறது.

மற்றப்படி தீபாவளி மலரிலே வெளியாகியிருக்கும் அருமையான விஷயங்களைப் போல் இதுவரையில் எந்த மலரிலும் வெளியாகவில்லை என்று கூறலாம். ரஸிகமணி டி. கே. சி. அவர்களைப் பற்றி மகராஜன் அவர்களும் ரஸிகமணியின் பேரன் தீப. நடராஜனும் எழுதியிருக்கும் கட்டுரைகள் ரஸிகமணி அவர்களை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றன. திரு க. சந்தானம், திரு எஸ். வி. கிருஷ்ணசாமி இவர்களின் கதைகள் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டமான சம்பவங்களை நகைச்சுவையுடனும் நாசூக்காகவும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இவர்களைத் தவிர இன்னும் பல எழுத்தாளர்கள், அதிலும் பிரசித்தி பெற்ற பல பெண் எழுத்தாளர்கள் எழுதிய இலக்கியக் கட்டுரைகள், நகைச்சுவைக் கட்டுரைகள், உள்ளத்தை உருக்கும் கதைகள், சிரிப்பு வருவிக்கும் கதைகள், நாடகங்கள், கவிதைகள் மலரை அலங்கரிக்கின்றன.

உலகப் புகழ் பெற்ற இருபது விஞ்ஞானிகளின் புகைப்படங்களும் அவர்களின் வாழ்க்கை வர்ணனைகளும் நேயர்கள் பார்த்தும் படித்தும் மகிழ வேண்டிய அம்சம். தெய்வலோகக் காட்சிகள், மேல்நாட்டு இலக்கியக் காட்சிகள், தமிழ்நாட்டு இலக்கியக் காட்சிகள், கிராமியக் காட்சிகள், பாரதியாரின் பாஞ்சாலி சபத சித்திரங்கள், சிற்ப சித்திரக்காட்சிகள், ஹாஸ்யச் சித்திரங்கள், மூவர்ணச் சித்திரங்கள், எல்லாம் மலருக்கு மணம் ஊட்டிக் கொண்டிருக்கின்றன. 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பது போல மலரின் அட்டைப் படத்தைப் பார்த்தால் அதையே பார்த்துக் கொண்டிருக்கலாம்.

மலரில் கலை மணம் கமழ்வதற்கு நமது ஓவியக் கலைஞர்கள் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். திருவாளர்கள் கனு தேசாய், மணியம், எஸ். ராஜம், ரத்தினம், வினு, சாமா, சிவா, விஜி, விஜயன், ரகி, சாகர், ரமணி, சுபா, ரதன், உகி, ஜமால் ஆகிய பதினாறு சித்திரக் கலைஞர்களின் சித்திரங்கள் மலரில் சுடர்விட்டு மின்னிப் பிரகாசிக்கின்றன.

கல்கி தீபாவளி மலரின் வெற்றிக்கு இரவு பகல் என்று பாராமல் பாடுபட்ட எல்லாருக்கும், எழுத்தாளர்கள், ஓவியர்கள், விளம்பரங்கள் வழங்கிய தொழில் அதிபர்கள் ஆகிய அனைவர்க்கும் நம்முடைய தீபாவளி வாழ்த்துக்கள்.

நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள். பெரிய அளவில் உயர்ந்த காகிதத்தில் மூன்றே ரூபாய் விலையில் மலரை வெளியிட்டிருக்கிறோம். பலவிதமான வசதிக் குறைவில் லட்சக்கணக்கான நேயர்களுக்கு வேண்டிய அளவு மலரை அச்சடிக்க முடியவில்லை. ஆகையால் பல நேயர்களுக்கு மலர் கிடைக்காமல் போகலாம். மலரைப் பெற்ற நேயர்கள் இதர நேயர்களுக்கும் மலரைக் கொடுத்து மகிழ்ச்சியடையக் கேட்டுக் கொள்கிறோம். வணக்கம். — ஆசிரியர்.

பிரயாணப் பண்புகள்

★

- சுத்தமா யிருப்பவனிடம்தான் கடவுள் தன்மை ஏற்படுகிறது. சுத்தமா யிருக்கப் பழகுங்கள். ரயில் வண்டிகளிலும், ஸ்டேஷன் பிளாட்பாரங்களிலும், மிகுந்துபோன உணவு, உண்ட இலைகள், பழத் தோல்கள் முதலியவற்றை எறிதல்; பிளாட்பாரங்களிலும் வண்டிகளிலும் தண்ணீரைக் கொட்டுதல் முதலியனவெல்லாம் தவிர்க்க வேண்டும். ஸ்டேஷன்களிலும், பிரயாணிகள் ரயில் பெட்டிகளிலுமுள்ள குப்பைத் தொட்டிகளில் அவைகளைப் போட வேண்டும்.

- பிளாட்பாரங்களில் சிறிதும் யோசனையின்றி எச்சில் துப்புவது சுகாதாரக்கேட்டை விளைவிக்கும். அது ஒழுக்கக் குறைவுங்கூட. தயவு செய்து எச்சில் தொட்டிகளிலேயே துப்புங்கள்.

- குளிர்ந்த சுத்தமான தண்ணீர் ஸ்டேஷன் பிளாட்பாரங்களில் பிரயாணிகள் குடிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. அதை வேறு காரியங்களுக்கு உபயோகிக்காதீர்கள்.


- நீங்கள் எதிர்ப்புறத்து ஆசனங்களில் காலை வைத்துக்கொண்டு மற்றப் பிரயாணிகளுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது. வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது ஒழுங்காக உட்கார வேண்டும்.


- கனமான சாமான்களை பிரேக்வானில் போட்டு விட்டு உங்களுக்கும் மற்றப் பிரயாணிகளுக்கும் நிறைய இடவசதி செய்து கொள்ளுங்கள்.

- மற்றொரு பிரயாணி விரும்பவில்லை யென்றால் ரயில் வண்டியில் புகை பிடிப்பது சட்ட விரோதமானது. ரயில் வண்டியின் ஜன்னல்கள் மூடி யிருக்கும்போதும், மற்றொரு பிரயாணி விரும்பாதபோதும், வண்டியில் ஜனக்கூட்டம் அதிகமா யிருக்கும்போதும் தயவுசெய்து புகை பிடிக்காதீர்கள்.

வெளியிடுவோர்

சென்ட்ரல் அண்டு வெஸ்டர்ன் ரயில்வேக்கள்






சிறந்த பாத அணிகளுக்கு



மிலு பாத அணிகளையே

எப்பொழுதும்

உபயோகியுங்கள்



- ★ நவீன மோஸ்தர்
- ★ சரியான அளவு
- ★ மிகச் சிறந்த தோல்
- ★ குறைந்த விலை

தயாரிப்பவர்கள்

அரசினர் பாத அணி நிலையம்

பெரம்பூர், சென்னை

சென்னை சர்க்காரின் கைத்தொழில், வியாபார இலாகாவின் ஒரு பிரிவு

தீப ஒளியை வணங்குவோம்!

ஆண்டுதோறும் வருகிற தீபாவளிதான்; என்றாலும் மக்களுக்கு அலுக்காத தீபாவளி.

ஆடவர்களும் பெண்மணிகளும் மங்கல நீராடி, புத்தாடை உடுத்தி, ஒளி மயமாக விளங்கும் ஆண்டவனைத் துதித்து மகிழும் புனிதத் திருநாள்!

குழந்தைகளின் குதூகலத்தைச் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் மத்தாப்புக்களையும் வெடிகளையும் கொளுத்திக் கொட்டம் அடிப்பதற்கு ஒரு எல்லையே இராது!

இப்படி எங்கும் குதூகலமும் தெய்வ பக்தியும் சேர்ந்து பொங்கும் திருநாள். நமது ஓவியக் கலைஞர்களுக்கும் வண்ண வண்ணச் சித்திரங்கள் வரையவும் உகந்த விஷயம் நல்கும் திருநாளாகும். இந்த இதழின் அட்டைச் சித்திரத்தைப் பாருங்கள்.

ஒளிமயமாக விளங்கும் ஈசனை வணங்க அவன் அளிக்கும் ஒளியை ஏற்றிக் கும்பிடுவது தவிர வேறு வழியில்லை.

வெல்லப் பிள்ளையாரைச் செய்து, அந்தப் பிள்ளையாரிலிருந்தே கொஞ்சம் வெல்லம் பிட்டுப் பிள்ளையாருக்கு நிவேதனம் செய்தாளாம்! இது வேடிக்கையாகச் சொல்வார்கள். ஆனால் இதில், பெரும் உண்மையே அடங்கியிருக்கிறது.

உள்ளும் வெளியும் — எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் எதிலும் நம்மிலும் அவனே பரிபூரணமாக நிறைந்திருக்கும் போது யாரை யார் வணங்குவது?

இப்படிப் பல கருத்துக்களைச் சிந்திக்கத் தூண்டும் அற்புதச் சித்திரங்களை வரைபவர் ஓவியக் கலைஞர் கனுதேசாய்!

தமிழ் மக்களுக்குக் கனுதேசாயின் சித்திரங்கள் மிக நன்றாக அறிமுகமானவை; அது மட்டுமல்ல! ஒவ்வொரு வருஷக் 'கல்கி' தீபாவளி மலரிலும் கனுதேசாயின் வண்ண ஓவியங்களை மிக ஆவலோடு எதிர்பார்ப்பது வழக்கமாகி விட்டது! இவ்வருஷமும் நாம் கனுதேசாயின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமையக்கூடிய பல வண்ண ஓவியங்களைத் தீபாவளி மலரில் தந்திருக்கிறோம்.

யார் இந்தக் கனுதேசாய்? இவர் ஒரு குஜராத்திக்காரர். பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் படித்த நாட்களிலிருந்து அவருக்குச் சித்திரக் கலையில் மிகுந்த ஆர்வம். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது அவர் தம் மாமா வீட்டில் தங்கியிருந்தாராம்! கல்லூரிப் பாடங்களை விட்டு விட்டுச் சித்திரங்கள் வரைந்து கொண்டிருக்கும் மருமகனைப் பார்த்து, "டேய்! நீ படித்து பி. ஏ. பாஸ் பண்ணவில்லை, சோற்றுக்குத் தெருவில் நிற்க வேண்டியதுதான்! சித்திரம் சோறு போடாது!" என்று மாமா கோபித்துக் கொள்வாராம்; ஆனால் இன்று அவருக்குச் சித்திரம் சோறு மட்டுமல்ல, மாளிகையையும், செல்வத்தையும், புகழையுமே தேடித் தந்திருக்கிறது.

ஆனால் கனுதேசாய், வெறும் சித்திரக்காரர் மட்டுமல்ல, தேசிய உணர்ச்சி கொண்டவர். உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம் செய்திருக்கிறார்! காந்திஜியின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார். ஆனால் கனுதேசாயின் சித்திரங்களைப்பற்றிக் காந்தி மகான் ஒரு விஷயம் குறிப்பிட்டார். "உன் சித்திரங்கள் நன்றாக இருக்கின்றன! ஆனால் அவை ஒவ்வொரு சாதாரணக் குடும்பஸ்தன் வீட்டிலும் நுழைய வேண்டும்!" என்றார். காந்திமகானின் இம்மொழிகளைக் கட்டளையாகக் கொண்டு அவருடைய கலை பாமர ரஞ்சகமாக விளங்க வேண்டும் என்று சினிமாத்துறையில் நுழைந்தார். பரத் மிலாப், ராம ராஜ்யம், மீரா, ஜனக் ஜனக் போன்ற பல படங்களில் சிறந்த கலை டைரக்டராகப் பணியாற்றி அப் படங்களுக்கும் தமக்கும் ஒரே சமயத்தில் புகழ் தேடிக்கொண்டார்!

சமீபத்தில் பம்பாயில் "பிலிம் பேர்" என்ற பத்திரிகை நடத்திய போட்டியில் பொதுமக்கள் சிறந்த கலை டைரக்டர் கனு தேசாய்தான் என்று தீர்ப்பளித்தனர்! இப்படிப் பிலிம்பேர் பத்திரிகை நடத்திய போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு மத்திய சர்க்கார் தொழில் மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய் பரிசுகளை வழங்கினார்.

கனு தேசாய் சித்திரக் கண்காட்சிகள் உலகம் முழுதிலும் பல நாடுகளில் நடைபெற்றிருக்கின்றன. பல அரிய பரிசுகளும் பாராட்டுரைகளும் பெற்றிருக்கிறார்.

இப்படி உலகப் பெரும் சைத்திரிகராக விளங்கும் கனுதேசாய் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் 'கல்கி' பத்திரிகையினிடம் விசேஷ அபிமானமும் பற்றும் கொண்டிருக்கிறார்! அவருடைய சித்திரங்களை வெளியிடுவதில் நாமும் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஓவியர் கனு தேசாய் அவர்கள் பிலிம்பேர் பத்திரிகை அளித்த பரிசுடன் காட்சி அளிக்கிறார்.



கி.ரா.கோபாலன் குடும்ப உதவி நிதி

ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டியதுதான். ஆனால் சில காரியங்கள் அவசரமாகவும் அவசியமாகவும் செய்யவேண்டி யிருக்கிறது. அதில் ஒன்றுதான் எழுத்தாளர் கி. ரா. கோபாலன் குடும்ப உதவி நிதி.

நல்ல காரியங்களுக்குக் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள், கொடுப்பதில் உள்ள மகிழ்ச்சியையும் இன்பத்தையும் கண்டவர்கள் எந்த நல்ல காரியத்துக்கும் கொடுப்பார்கள். கொடுப்பதினால் உண்டாகும் சிறப்பு இருக்கிறதே அது வேறு எதிலுமே கிடைக்காதது. இதைப் பற்றி நாலடியார் பாட்டில் சொல்லி யிருப்பதைக் கேளுங்கள் :

> கடப்பிடி கண்முரசம்
>   காதத்தோர் கேட்பர்
>
> இடித்து முழங்கியது
>   யோசனையோர் கேட்பர்
>
> அடுக்கிய மூவுலகும்
>   கேட்குமே, சான்று
>
> கொடுத்தார் எனப்படும்
>   சொல் !

இவ்விதம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நமது செந்தமிழ் நாட்டுப் பெரியார் ஒருவர் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அதாவது முரசொலியையும் இடி முழக்கத்தையும்விட அதிக தூரம் கேட்கக் கூடியது ஒன்று இருக்கிறது. இந்த உலகம் முழுவதும் பரவி மேலே வானுலகத்திலும் கீழே பாதாள உலகத்திலும் கூடச் சென்று கேட்கக் கூடிய சக்தி வாய்ந்தது ஒன்று இருக்கிறது. அது என்ன? ஒரு நல்ல காரியத்துக்கு நன்கொடைகொடுத்தார் என்னும் சொல் இருக்கிறதே, அதுதான் மூன்று உலகங்களிலும் சென்று கேட்குமாம்.

கொடுப்பதினால் ஏற்படும் சிறப்பை நமது முன்னோர்கள் எவ்வளவு அற்புதமாக உணர்ந்து அனுபவித்துச் சொல்லி யிருக்கிறார்கள் ?

கொடுப்பதுதான் சிறப்பான செயல். மூவுலகமும் புகழ் பரப்பக்கூடிய செயல்.

தமிழ் நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் தம்முடைய எழுத்தின் மூலம் தொண்டாற்றி வந்த திரு கி. ரா. கோபாலன் குடும்பத்துக்கு உதவி புரிவதைக் காட்டிலும் உயர்ந்த நன்கொடை வேறு என்ன இருக்கிறது? 'கொடுத்தார் எனப்படும் சொல்' இப்படிப்பட்ட நல்ல காரியத்துக்கு நன்கொடை அளித்தல்லவா பெற வேண்டும் !

சென்ற வாரம் வெளியான கி. ரா. கோபாலன் குடும்ப நிதிக்கு உதவியவர்களைப் பார்த்து இன்னும் சில அன்பர்கள் நன்கொடை அளித்திருக்கிறார்கள். அந்த நன்கொடைகளின் விவரத்தைக் கீழே காணலாம். இந்த உயர்ந்த நன்கொடைகளினால் பொருள் படைத்த பயனை அவர்கள் பெற்றார்கள் என்று சொல்லுவது சிறிதும் மிகையாகாது.

தமிழ் வளர்ச்சியில் ஆவல் உள்ள எல்லாருடைய பங்கும் இந்த நிதியில் சேர வேண்டும் என்று விரும்புகிறோம். உங்கள் நன்கொடையை இந்த உதவி நிதிக்கு அனுப்பி வையுங்கள். நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம் : திரு எம். பி. கல்யாணசுந்தரம், கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை.

திரு ஜெயமணி சுப்பிரமணியம், துணை ஆசிரியர், கல்கி, சென்னை	ரூ. 50
திரு கி. ராஜேந்திரன், துணை ஆசிரியர், கல்கி, சென்னை	ரூ. 50
திரு பகீரதன், கல்கி, சென்னை	ரூ. 25
திரு எஸ். வி. எஸ். துணை ஆசிரியர். கல்கி, சென்னை	ரூ. 25
திரு சிதம்பரம், பாரதி பதிப்பகம், தியாகராய நகரம், சென்னை	ரூ. 25
திரு வேங்கடராமன், மங்கள நூலகம், நுங்கம்பாக்கம், சென்னை	ரூ. 25
திரு ஸோமாஸ், உதவி ஆசிரியர், கல்கி, சென்னை	ரூ. 15
திரு வினு. ஓவியர், கல்கி	ரூ. 15
திரு பி. எஸ். மணி, உதவி ஆசிரியர். கல்கி, சென்னை	ரூ. 10
திரு சிவா, ஓவியர், கல்கி	ரூ. 10
திரு விஜயன், ஓவியர், கல்கி	ரூ. 10
திரு டி. எம். ராஜாபாதர், போர்மென், கல்கி, சென்னை	ரூ. 10
திரு ஸ்ரீஹரி, 'செல்வ கோடி' நுங்கம்பாக்கம், சென்னை	ரூ. 10
திரு சுந்தரமூர்த்தி, பைண்டர், கல்கி, சென்னை	ரூ. 10
ஒரு அன்பர்	ரூ. 5
திரு ஜாம்பவான், சென்னை	ரூ. 5
திரு வி. ஆர். கோபாலகிருஷ்ணன், "வியார்ஜி" பெரிய காஞ்சிபுரம்	ரூ. 5
திரு எம். என். ருக்மிணி, விஜயா ரைஸ்மில், மாண்டியா	ரூ. 5
திரு பி. ஆர். நடராஜன், உதவி போர்மென், கல்கி, சென்னை	ரூ. 3
திரு கே. சுந்தரராமன், புக்பைண்டிங் வொர்க், காளஹஸ்தி	ரூ. 2
திரு ஆர். ஆராவமுதன், புரசைவாக்கம், சென்னை	ரூ. 1
முன் வரவு	ரூ. 145
ஆக	ரூ. 461

தீய ஆஸ்த்மா
பிராங்கைட்டிஸ் சளி
நீங்கள் தூங்கும்போது இளகுகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத்திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இத்தாலிய, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றி சுலபமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

சிரங்கு கிருமிகள்
7 நிமிஷத்தில் கொல்லப்படுகின்றன

உங்கள் சருமத்தில் சற்றேறக்குறைய 50 லக்ஷம் சிறு துவாரங்களும் மடிப்புகளும் உள்ளன. இவைகளில் கிருமிகள் மறைந்து கொண்டு தாங்க முடியாத அரிப்பு, வெடிப்பு, சொறி, தோலுரிதல், எரிச்சல், படை, வெடிப்புத் தழும்புகள், முகப்பருக்கள், சாக்கம், சொறி முதலிய உபாதைகளை உண்டாக்குகின்றன. சாதாரண சிகிச்சைகள் தற்காலிகமான குணத்தையே அளிக்கின்றன, ஏனெனில் அவைகள் கிருமிகளின் மூலகாரணத்தைக் கொல்வதில்லை. இந்தப் புதிய முறையான நிக்ஸோடர்ம் (Nixoderm) 7 நிமிஷத்தில் கிருமிகளைக்கொன்று ஒரே வாரத்தில் உங்கள் சருமத்தை மிருதுவாக, பளபளப்பாக, விசேஷமாகச் செய்ய உத்தரவாதம். இல்லையேல் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் பணம் வாபஸ். இன்றே உங்கள் கெமிஸ்டிடமிருந்து உத்தரவாதம் பெற்ற நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்கி சரும உபாதையின் காரணத்தை அகற்றுங்கள்.

Nixoderm

நிக்ஸோடர்ம்

சரும உபாதைகளுக்கு

"தீபாவளி ஜவுளிகள் எடுத்தாச்சோ?"

"ஏதோ, ஒரு புடவை எடுக்கலாம்னு தான் முதல்லே நினைச்சுண்டு போனேன். ஆனால், கடையிலே இருந்த டிசைன் களைப் பார்த்ததுமே, ஆரணி பட்டுச் சேலையில் ஒன்றும், மைசூர் கிரேப் ஸில்க் புடவையில் ஒன்றும் புது நிறுக காஷ்மீர் புட்டா புடவையில் ஒன்றும் குழந்தைகளுக்குப் பாவாடைகளும், சோளி திறுககள் சிலவற்றையும் வாங்கிக் கொண்டு வந்துட்டேன்."

"அப்படிச் சொல்லுங்கோ. மயிலாப்பூர் ஸன்னிதி தெருவிலிருக்கும் ஆரணி ஸில்க் ஹவுஸில் வாங்கினீர்களாக்கும்?"

"ஆமாம், அத்துடன் இப்பொழுது ஒரே விலைகளில் விற்பனை செய்வதால் பேரம் செய்ய வேண்டிய தொல்லையுமில்லை."

"அதனால்தான் ஆரணி ஸில்க் ஹவுஸ் கடைக்கே ஓர் தனி மதிப்பு!"

"அது மட்டுமா, தீபாவளிக்கு வட நாட்டில் உள்ள நம்மவர்களுக்கென ஸ்பெஷலாக,

புது டில்லியில்: சௌத் இந்தியன் கிளப் கோ-ஆப்ரேடிவ் சப்ளை சொஸைட்டி லிமிடெட், 9, ஜந்தர் மந்தர் ரோடிலும்,

கான்பூர்: தி சௌத் இந்தியா கோ-ஆப்ரேடிவ் ஸ்டோர்ஸ் லிமிடெட், 11/255, சூடர் கஞ்சிலும்,

கல்கத்தா: சுதர்சன் & கோ., 1/4, பிரின்ஸ் குலாம் முகம்மது ரோடு, கல்கத்தா-26 என்ற விலாசங்களிலும் ஆரணிப் பட்டுப் புடவைகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளனர்."

தீபாவளியை முன்னிட்டு 20-10-67 ஞாயிறு அன்றும் விற்பனை உண்டு

ADVT.



காருக்கான ஸ்டீல் வேலைப்பாட்டிற்கு இந்தியாவில் தலைசிறந்து விளங்கும் ஆல்வின் உயர் தரம் வாய்ந்த சாதனங்களை தயாரிப்பதில் நாடெங்கும் புகழ்பெற்றுள்ளது. இவைகளுக்கு நாடெங்கும் மிகுந்த கிராக்கியிருப்பதால், இவைகளை குறைந்தவிலைக்கு வழங்க முடிகிறது

பல்லாண்டுகளாக வாடிக்கையாளர்களிடையே வளர்ந்து வரும் திருப்தியும், தொடர்ந்து செய்யப்பட்டு வரும் அபிவிருத்திகளுமே, ஆல்வினின் கவர்ச்சிகரமான டிஸைன்கள் மற்றும் பாங்கான தோற்றத்திற்குக் காரணம்.

ஆபீஸ் ஸ்டீல் உபகரணங்கள்


முதல்தர ஸ்டீல் கொண்டு தனிப்பட்ட முறையில் உருவாகிய ஆல்வின் சாதனங்கள் நீடித்த உழைப்பிற்கும் இடையறாத சேவைக்கும் உத்திரவாதம் அளிக்கின்றன.

ஆல்வின் ஆபீஸ்களுக்கு தேவையான உபகரணங்கள் தயாரிப்பதில் பிரசித்தி பெற்றவர்கள். இதன் பலனாகவே, தற்கால இட நெருக்கடியை சமாளிப்பதற்கேற்றவாறு கச்சிதமான அமைப்புடன் இவைகள் திகழ்கின்றன.



கவர்ச்சிக்கும் நீடித்த சேவைக்கும்

ஆல்வின்



அலுவலகங்கள் விரும்பி வாங்கும் சில ஆல்வின் தயாரிப்புகள்:

[illegible]

டிஸைன் மற்றும் உறுதிக்கு

ஆல்வின்

புகழ்பெற்ற பர்னிச்சர்

ஹைதராபாத் ஆல்வின் மெட்டல் ஒர்க்ஸ் லிட்., ஸனத்நகர் ஹைதராபாத்-18

சென்னை, கேரள மற்றும் ஆந்திர ராஜ்யங்களுக்கு ஏஜண்டுகள்

மெஸர்ஸ் அடிஸன் அண்டு கோ. பிரைவேட் லிட்., 158, மவுண்ட் ரோடு, சென்

விஸ்தரிக்கப்பட்ட மைசூர் ராஜ்யத்திற்கு ஏஜண்டுகள்

மெஸர்ஸ் அடிஸன் அண்டு கோ. பிரைவேட் லிட்., ஸெயிண்ட் மார்க்ஸ் ரோடு, பெங்களூர்

எல்லா முக்கிய நகரங்களிலும் டீலர்கள் உள்ளனர்



துயில் ஞான போதகம்

பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

வாலிழந்த நரியின் கதைதான் உங்களுக்குத் தெரியுமே! மற்றைய நரிகளைப் பார்த்து, 'சகோதரர்களே! பூர்வ புண்ணிய வசத்தால் வாலை இழக்கும் கிடைத்தற்கரிய பேறு எனக்குக் கிட்டியது. காட்டில் அலையும் போது, வீண் சுமை ஒன்றைப் பின்புறத்தில் ஏந்திக் கொண்டு இனிமேல் தடுமாற வேண்டாம். சிங்கமோ, புலியோ, இனி என் வாலைக் கடித்துத் துன்புறுத்த முடியாது. வாலைக் குழைத்துக் கொண்டு ஓடிய நரி என்று ஒருவரும் என்னைப் பரிகசிக்க முடியாது. மனிதர்கள் நம்மைப் பிடிப்பதற்காக வைக்கின்ற பொறிகளில், வாலைக் கொடுத்து விட்டு விழிக்கின்ற பரிபவம் எனக்கில்லை. என்ன பாக்கியம், என்ன பாக்கியம். வாலில்லாப் பெருவாழ்வு எனக்குக் கிடைத்தது. இப்போது தெரிகிறது வாலால் நான் பட்ட பாடு! சீ, வாலோடு வளைய வருவதும் ஒரு வாழ்வா?' என்று உதட்டைப் பிதுக்கி, கண்களை உயர்த்தி, முன்னங்கால்கள் ஞான முத்திரை பிடிக்க, உபதேசம் செய்ததாம் அந்த வாலறு பட்ட நரி. நம்மில் பெரும்பாலோர், தெரிந்தோ தெரியாமலோ, இந்த நரியைப் பின்பற்றுகிறோம். நமக்குள்ள குறையைப் பிறர் காணாமல்—ஏன், நாமே காணாமல்—மறைக்க, தத்துவம் ஒன்றைப் படைத்துக் கொள்ளுகிறோம். வலிமை இல்லாதவன் அஹிம்சை பேசுகிறான்; கையாலாகாதவன் 'ஊழிற் பெருவலி யாவுள' என்று வள்ளுவரைச் சந்திக்கு இழுக்கிறான்; வறுமையில் வாடுகின்றவன் எளிய வாழ்வின் உயர்வைப் பற்றிப் புராணம் படிக்கிறான்; ஊமை, 'மோனம் என்பது ஞான வரம்பு' என்று கையை ஆட்டுகிறான். இப்படி எத்தனையோ?

இப்படித்தான், துயில் நாட்டில் ஒதுங்கிய கிரேக்க வீரர்கள் நடந்து கொள்ளுகிறார்கள். துயிற்கனியை அவர்கள் உண்டதும், செயல் திறமை மழுங்கி, அரைத் தூக்கத்தில் அழுந்துகிறார்கள். இந்த நிலையில், துயில் நாட்டின் அமைதி அவர்களுக்கு இதமாக இருக்கிறது. சொந்த ஊராகிய இதாகாவுக்குத் திரும்ப வேண்டாம் என்று முடிவு கட்டுகிறார்கள். அப்படி ஊருக்குத் திரும்பித் தான் என்ன சாதித்து விடப் போகிறோம் என்று தங்களைத் தேற்றிக் கொள்ளுகிறார்கள். இதுவரையில் கடலில் அவர்கள் பட்ட பாட்டை எண்ணி, இனிமேல் அந்த வழிக்குப் போவதில்லை என்று உறுதி செய்து கொள்ளுகிறார்கள். உலகத்தில் எல்லாப் பொருள்களும் உழைக்காமல் இருக்கின்றன. மனிதன் மட்டும் உழைப்பானேன் என்று சோம்பல்—தத்துவம் ஒன்றை உருவாக்குகிறார்கள். கடைசியாக, துயில் நாட்டின் வசதி, கடலின் கொடுமை, போரிலும் புயலிலும் தாங்கள் தவித்த தவிப்பு—இம் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து, அந்த அடித்தலத்தில் சித்தாந்தம் ஒன்றைச் சமைக்கிறார்கள், வாலிழந்த நரியின் போக்கில்.

முதலில் துயில் நாட்டின் அருமைப் பாடு: 'அடாடா, இந்த அற்புத நாட்டில்தான் என்ன வசதி, என்ன வசதி! எங்கே பார்த்தாலும் துயிற் செருந்தி மண்டிக் கிடக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும், துயிற் கனி கிடைக்கிறது. வேறென்ன வேண்டும்?

ஓங்கி வறண்டமலை உச்சியிலும், நீரோடை
தூங்கி வளையும் துறைதனிலும், துள்ளி எங்கும்
ஏகமாய்ப் பூத்துக் குலுங்கும் துயிற்பூண்டு.
பாகாய்ப்பகல்முழுதும் பாடிவரும் பூந்தென்றல்.
ஆழும் தனிமை அணைந்த கோடிவழியில்
பாழாய் வெறுமை படர்ந்த மலைக்குகையில்
எங்கும் கழன்று கழன்(று) ஏலவெளிச்
சூழலில், பொன்
துங்கமழை தூற்றும் துயிற்பூ மகரந்தம்.

இரண்டாவதாக, கடலிலே தாங்கள் அனுபவித்த பயங்கரத்தை எண்ணிப் பார்த்து, 'போதும், போதும், ஏழு ஜன்மத்துக்குப் போதும்' என்று கசப்போடு பேசுகிறார்கள்:

போதுமடா போதும்நாம் ஓடியதும் சாடியதும்.
ஓதம் கலக்கிப் புரளும் கருப்பூதம்
ஊற்றுப் நுரைப்படலம் ஊதியே கோப்பளிக்க,
கூற்றுய்க் கறங்கிக் குதித்து நமையேற்றித்
துன்பத்தில் மோதிச் சுழற்றிப் புயல் உருட்ட
முன்னேயும் பின்னேயும் முட்டியதே
கண்ட பயன்.

ஆகவே, செய்ய வேண்டியது என்ன? தெரியவில்லையா, இங்கேயே இந்தத் துயில் நாட்டிலேயே இருப்பதுதான், இங்கே, கடவுளரைப் போல ஒரு கவலையும் இல்லாமல் சொர்க்க வாழ்வு வாழ்வதுதான்:

இன்றோர் சபதம் எடுப்போம், எடுத்து அதனைக்
குன்றுமல் காப்போம்: கூடித் துயில்நாட்டில்
என்றும் இருப்போம்: இமையவர்போல்
குன்றின்மேல்
நின்று மனிசரையே எண்ணுமல்
வாழ்ந்திடுவோம்.

மனிசரையே எண்ணுமல் வாழ்வதா? ஆமாம், மற்றவர்களைப் பற்றி நமக்கு என்ன கவலை? கடவுளரைப்* போல வாழ வேண்டும் என்றால், மற்றவர்களை எண்ணி வருந்த முடியுமா?

ஆமாம், கடவுளரும் அப்படித்தான்
வாழ்கின்றார்
ஏமாப் புடன் அமுதம் ஏந்தியே
சாய்ந்திருப்பார்

கீழே, மண்ணுலகில், இடி விழும், ஆனால், அதைப் பற்றிக் கடவுளருக்கு என்ன? மெல்லிய பனி சூழ்ந்த பொன் வீடுகளில் அமர்ந்து, மண்ணுலகத்தின் அவதியை எல்லாம் பார்த்து, மனிதர்கள் அனுபவிக்கும் கோடி கோடி துயரங்களைக் கண்டு, இக் கடவுளர் குழாம் உள்ளம் பூரிக்கும். கீழே மண்ணுலகம்; அங்கே பொட்டலும், புயற்கடலும்; பூகம்பம் திடீரென்று மூளைத்து, தரையைக் கீறிச் சிதைக்கிறது; புயலிலே கப்பல்கள் சிதறுண்டு மூழ்குகின்றன. போர் சுழல்கிறது; நகரங்கள் தீயிலே வெந்து சாம்பராகின்றன; பஞ்சமும் நோயும் மக்களை வாட்டுகின்றன; 'ஐயோ, தஞ்சம் இல்லையா?' என்று தவிக்கும் மாந்தர், கைகளை உயர்த்திக் கடவுளரைத் தொழுகின்றனர். இதையெல்லாம் ஒரு சோக ரஸ நாடகமாகக் கண்டு, அதில் இன்பம் பெறுகிறார்கள் கடவுளர்.

ஆமாம், கடவுளரும் அப்படித்தான்
வாழ்கின்றார்.
ஏமாப்புடன் அமுதம் மாந்தியே சாய்ந்திருப்பார்
கீழே நெடும்பள்ளப் பாழில் இடி வீழும்.
வீழ்ந்தால் இவர்க்கென்ன? மஞ்சு தவழ்கின்ற
பொன் வீட்டில் வீற்றிருந்து, பூரித்து
இரகசியமாய்
புன்னகை யோடிந்தப் பூமியினைப்
பார்த்திருப்பார்.

பூமியிலே அவர்கள் காண்பது என்ன?

பஞ்சம், தொழுநோய், பாழாம் பொட்டல்,
பாரைக் கீறிடு பூகம்பம்,
விஞ்சி விரிடும் வேலை, சூழ்புயல்,
விளியும் கப்பல், வெம் பாலை;
அஞ்ச முழங்கி அடர்போர், தீயில்
அழன்று கருகும் நகரங்கள்;
தஞ்சம் இலையோ என்று கலங்கித்
தவித்துத் தவித்துத் தொழும் கைகள்.

இந்தப் பரிபவத் தொடரில், மனிதனுடைய ஓலத்தில், இன்பமல்லவா கடவுளர் காண்கிறார்கள்!

ஐயோ என்று ஓங்கும் அழுகையிலே
இன்னிசையின்
ஒய்யாரம் காண்பார் உகப்பார் கடவுளரும்.

மனிதன் அழுகின்றான். அவன் வாழ்க்கைதான் என்ன? மண்ணைக் கிளறி, விதைவிதைத்து, வானம் பார்த்து ஏங்கி, யார் செய்த புண்ணியத்திலோ கதிர் தோன்றினால் அதை அறுத்து, கிடைத்த தானியத்தை நாளைக்கு வேண்டும் என்று பதுக்கி, நாளை வருமுன்னே நமன் வாயில் வீழ்கின்றான்.

மண்ணைக் கிளறி, விதைவிதைத்து, நாளெல்லாம்
புண்ணுய் உழைத்துப் புலர்ந்த கதிர் அறுத்து,
நாளைக்கு வேண்டுமென நான்கு பிடி பதுக்கி,
நாளை வருமுன் நமன்வாயில் வீழ்கின்ற
பேதைமனிசர் இங்கே பித்தேறித் தங்குறையை,

* பண்டைய கிரேக்கர்கள் பல கடவுளரை வழிபட்டார்கள்; ஒலிம்பஸ் என்ற குன்றின் மேல் கடவுளர் உலகம் இருந்ததாகவும், அங்கே இருந்து மண்ணுலகை அவர்கள் ஆட்சிபுரிந்ததாகவும் நம்பினார்கள். கடவுளர் நாடு, இடி, மின்னல் முதலிய இயற்கைப் பாட்டைக் கடந்து நின்றது பழைய கிரேக்கர் நம்பிக்கை.

நீரே காணாத நீண்ட பழங் கதையைச்
சொல்லி அழுதால்அச் சோகக் குரலில் இசை
புல்லரிக்கும் காணொன்று பூரிப்பார் கடவுளரும்.

'வாழ்க்கையின் துயரம் இந்த மண்ணுலகத்தோடு முடியவில்லை. செத்த பிறகும், உயிர், நரகத்திலே துடி துடிக்குமாம். ஏதோ ஒரு சிலர், பொன்னோடு ஏறி, சுகம் பெறுவாராம். மற்றவர்கள், அதாவது நீயும் நானும், நரகத்திலே தான் விழுவோம். இங்கேயும் நரகம், அங்கேயும் நரகம். என்ன செய்தாலும் அதுதான். அப்படியானால், ஒன்றும் செய்யாமல் இருப்பதிலே என்ன தீமை விளைந்துவிடப் போகிறது? தீமையா, போடா போ, சும்மா இருப்பதே சுகம்' என்று முடிக்கிறார்கள் துயிற்கனி அருந்திய கிரேக்க வீரர்கள் ;

செத்த பின்னும் துன்பம் சாகாதாம்.
செத்த பின்னும்
குத்திட்டுச் சீவன் கோடி நரகம் ஆழ்ந்திடுமாம்.
ஏதோ ஒரு சிலரே ஏறுவராம் பொன்னூடு.
ஏதமிலாப் பொன்மலரில் எய்த்த உடல்
சாய்ப்பாராம்.
போதும் புராணமிது. போக்கைத் துடுப்பேந்தி
ஓதக் கடலில் உழைப்பதினும் தூக்கத்தின்
போதையே இன்பமெனும் போதமே
போதமடா !
ஆதலால், வீணாய் அலையோம், அவலமுறோம்.
சோதரரே, வாரீர், துயில்வோம், சுகம்
பெறுவோம்.

வாழ்க்கை, உயிர், கடவுள், இவற்றின் பொருளை, துயிற்கனியால் விளைந்த தூக்கத்தின் மூலமாக அளக்கிறார்கள் கிரேக்க வீரர்கள். சோர்ந்த அவர்கள் நிலை, போலிச் சித்தாந்தமாக வடிவெடுக்கிறது. அந்த சித்தாந்தம் 'சும்மா இரு, அதுவே இலட்சியம், அதுவே இன்பம்' என்றுதானே பேசும்? தூக்கத்தில் பிறந்த இந்தத் 'துயில்ஞானபோதம்' உண்மையைக் காட்டவில்லை. எல்லா மனிதரும் அவ்வப்போது உணரும் சோர்வு, சலிப்பு, சோம்பல், இவை அகண்டாகாரமாய் வடிவெடுத்தால், என்ன ஆகும் என்பதையே இங்கே காண்கிறோம். ஒவ்வொரு மனிதனிடமும் எப்போதாவது வந்து, கண நேரம் தோன்றி மறையும் சோம்பல் என்ற நிலை, அந்த வாமனன், வானமும் வையமும் நிறைத்து வளர்ந்தால், திரிவிக்கிரமனாக ஓங்கினால், என்ன ஆகும் என்பதையே 'துயிற் கனி அருந்தியவர்' என்ற ஆங்கிலப் பாடல் கற்பனை செய்து பார்க்கிறது. ஹோமர் என்ற கிரேக்க மகா கவிஞன் தந்த சிறு குறிப்பொன்றை, ஆங்கிலக் கவிஞன் தென்னிஸன் இப்படி ஒரு காவிய உலகமாக விரித்தான். மிக மிக அழகிய உலகம் அது. ஆங்கில மூலத்தில் உள்ள சொல்லழகு, சந்த இனிமை, கற்பனை ஒளி இவற்றை முழுதும் தமிழிலே தர முடியவில்லை. அது என் குற்றம். என்றாலும், மூலத்தை, நெடுகிலும், பொருள் குன்றாமல் தமிழால் தொடர்ந்து சென்றிருக்கிறேன். இந்தப் பாதையில் என்னோடு நடந்து வந்தவர்கள், இப்போது ஆங்கிலப் பாடலை நேரிலே அணுகினால், தெளிவாக அதன் கவிதையை உணர்வார்கள். அப்படிச் செய்யாதவர்கள், ஆங்கிலப் பாடல் ஒன்றின் சாயலையாவது தமிழிலே பெற்று விட்டார்கள். அந்த அளவுக்கு நன்மைதானே!

மாணவர்க்கு ஒரு வார்த்தை: 'துயிற் கனி அருந்தியவர்' உங்கள் கல்லூரிகளில் நடந்திருக்கலாம், நடவாமலும் இருக்கலாம். எப்படி இருந்தபோதிலும், இந்தத் தொடர்க் கட்டுரைகளை ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். ஒரே மூச்சில், தொடர்ந்து படித்து விட்டு, மூலப் பாடலைப் படியுங்கள். மூலப் பாடலை ஆங்கிலத்தில் படித்து இன்புறுவதற்கே இக் கட்டுரைத் தொடர் வழி வகுக்க முயன்றது. முயற்சி வெற்றியா என்பதைப் பற்றி நீங்கள் அல்லவா எனக்குச் சொல்ல வேண்டும்?



தன்மையில் உயர்ந்த
வெண்மை
METTUR
INDUSTRIES LTD
மேட்டூர்
மல்கள் &
லாங்கிளாத்துகள்
நிர்ணயிக்கப்பட்ட, சிக்கனமான விலைகளில் விற்கப்படுகின்றன
METTUR INDUSTRIES LTD
METTUR
MULL
மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,
மேட்டூர் அணை — சேலம் ஜில்லா
W. A. பியர்ட்ஸெல் & கம்பெனி (பிரைவேட்)
லிமிடெட், மதராஸ்–1.

லண்டனிலே தமிழ் மணம்

சுந்தா



தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்து லண்டனில் குடியேறியுள்ள தமிழ்க் குடும்பம் ஒன்றில் சமீபத்தில் திருமணம் நடைபெற்றது: மணமகள் திருமதி சரோஜினியின் தாயார் தென் ஆப்பிரிக்காவில் சிறுமியாக இருந்தபோது, மகாத்மாகாந்தியின் அருகே ஒரு புகைப்படத்தில் அமர்ந்திருக்கும் பாக்கியம் பெற்றிருந்தார். இவர் பெயரும் பாக்கியம்தான்!— ஸ்ரீமதி பாக்கியம் நாயுடு. ஸ்ரீமதி சரோஜினி நாயுடு போலவே தோற்றம் கொண்ட இவர், இந்தப் படத்தில் முன்னணியில் நின்று, மகளின் கழுத்தில், திருமாங்கல்யத்தைச் சீராகப் பொருத்திக் கொண்டிருக்கிறார்.

தென்னையும் பனையும் வாழையும் லண்டன் நகரிலே இருக்கின்றன; நீள நீளமாய்ப் புடலங்காய்கள் தொங்குகின்றன; பாகற்காய்கள் பறிப்பாரற்றுப் பழுத்து உதிர்கின்றன; மல்லியும் முல்லையும் பிச்சியும் பூத்துக் குலுங்குகின்றன; செங்கரும்பு ஓங்கி வளர்ந்து நிற்கிறது.

''இத்தனையும் லண்டன் நகரிலா?'' என்று வியக்கிறீர்கள் அல்லவா? ஆம்! லண்டன் நகரிலேதான்! இங்கே, ''க்யூ கார்டன்ஸ்'' என்ற பெயருடன், தாவரக் காட்சிச் சாலை ஒன்று இருக்கிறது. அங்கே மற்றத் தேசங்களின் தாவர இனங்களுடன், இந்தியாவின் மரஞ் செடி கொடிகளையும், பக்குவமாய் வளர்க்கிறார்கள். அந்தந்தத் தாவரத்துக்கு வேண்டிய தட்ப வெப்பத்தை தருவதற்காக, கண்ணாடி மூடி போட்ட பண்ணைகளை அமைத்துக் குளிர் காற்றையோ வெப்பக் காற்றையோ, அந்தந்தப் பயிருக்கு வேண்டியதுபோல் பாய்ச்சி வருகிறார்கள்.

அந்தக் கண்ணாடிப் பண்ணைகளில் தான் தமிழ்நாட்டுத் தாவரங்களைப் பார்த்தேன். தமிழ் நாட்டுக் காற்றையும் நுகர்ந்தேன். இதே காட்சிச் சாலையில், பண்ணைகளைத் தவிர, சில காட்சி அறைகளும் இருக்கின்றன. அந்த அறைகளிலே, தென் ஆற்காடு கத்திரிக்காய்கள், நீலகிரித் தைலம், தென்னிந்தியப் புளியம்பழம், கோயமுத்தூர் ஏலக்காய், திண்டுக்கல் புகையிலை, தஞ்சாவூர் வீணைக் குடங்கள் முதலியவற்றைக் கண்டேன்.

சோளத் தட்டையால் செய்த தமிழ்நாட்டுக் கோயில் ஒன்றையும், கருங்காலி மரத்தில் செய்த தமிழ் நாட்டுச் சப்பரம் ஒன்றையும், தென்னிந்திய எண்ணெய் செக்குமாதிரி ஒன்றையும், சந்தனக் கட்டையில் செய்த பொம்மைகளையும் கண்டேன்.

''நாம் என்ன லண்டனில் இருக்கிறோமா, தென்னிந்தியாவில் இருக்கிறோமா?'' என்று நான் வியந்து கொண்டிருந்தபோது, ''என் பிறந்த ஊரின் பெயர் இதிலே எழுதி ஒட்டி இருக்கிறது பார்த்தீர்களா?'' என்று, தமிழ்ப் பெண்ணின் குரல் ஒன்று கணீரென்று ஒலித்தது எனக்கு மிக அருகில். தாழம்பூக் கரைபட்டுச் சேலை அணிந்த இளம் பெண் ஒருத்தி, ஜம்மென்று சூட் அணிந்திருந்த தமிழ் இளைஞன் ஒருவனின் அணைப்பிலே நின்றிருந்ததைக் கண்டேன். இருவரும் ஒரு சீசாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ''டின்னிவேலி ஸென்னா'' என்று அந்தச் சீசாவின் மேல் எழுதி இருந்தது.

''எனக்கும் சொந்த ஊர் திருநெல்வேலிதான்'' என்று நான் சொன்னேன்.

இளந் தம்பதிகள் ஒரே வியப்புடன் என்னைப் பார்த்தார்கள் — ஒரு தமிழனை, அதுவும் ஒரு திருநெல்வேலிக்காரனை, லண்டன்மாநகரிலே உள்ள காட்சிச் சாலை ஒன்றில் சந்தித்து விட்டதை எண்ணி.

''உங்கள் குரலைக் கேட்டு, தமிழைக் கேட்டு, நானும் ஆச்சரியப்பட்டேன்' என்று சொன்னேன்; அந்தப் பெண், காதுகளில் தோடுகளுடனும், மூக்கிலே எட்டுக்கல் பேசரி

யுடனும்," நெற்றியிலே அகலமான குங்குமப் பொட்டுடனும், கைகளில் பொன் வளையல்களுடனும், விரலிலே வங்கி மோதிரம் ஒன்றுடனும் அசல் தமிழ்நாட்டுப் பெண்ணாய் விளங்கியதைப் பார்த்துக்கொண்டே சொன்னேன்!

''உலகம் ரொம்பச் சின்னதாகி விட்டது'' என்றார் இளங் கணவர்.

''உலகத்தின் எந்தப் பகுதியிலும் தமிழர்கள் இருக்கிறார்கள்'' என்றேன் நான். ''நாம் மேல் நாட்டு உடைகளை அணிந்து கொண்டாலும், பெண்கள் மட்டும், சேலையையும், தோட்டையும், நெற்றிப் பொட்டையும் விடுவதில்லை.''

''இதுமட்டுமா? எந்தக் குளிர் நாடாய் இருந்தாலும், நித்தியம் குளிப்பதையும், கடவுளைக் கும்பிடுவதையும் நமது பெண்கள் விடுவதில்லை'' என்றார் அந்த இளைஞர்.

பிறகு நாங்கள் மூவரும், ஆசை தீரத் தமிழ் பேசிக் கொண்டே அந்த மாபெரும் தாவரக் காட்சிச் சாலையைச் சுற்றிப் பார்த்தோம். மாலையில், ரோஜா வனத்துக்கு அருகே, புல் தரையில் உட்கார்ந்து, அந்தப் பெண், 'பிக்னிக்' பெட்டியில் கொண்டு வந்திருந்த முறுக்கையும் தேன் குழலையும் தின்றோம். பிறகு நான் கேட்டுக் கொண்டதன் பேரில், அந்தப் பெண் சில அருமையான தமிழ்ப் பாடல்களைப் பாடினாள். அவள் பாடியவற்றில் ஒன்று, ''செந்தமிழ் நாடெனும் போதினிலே'' என்பது. அதைக் கேட்கையில், உண்மையிலேயே, இன்பத் தேன் வந்து பாய்ந்தது காதினிலே.

''நீங்கள் பாடியதற்குத் திருஷ்டி பரிகாரமாய் நான் ஒரு பாட்டு பாடுகிறேன்'' என்று சொல்லி, என் ''வாய்ச்சரக்கை''க் கொஞ்சம் எடுத்து விட்டேன்:

வந்து சில வாரம் ஆகிறது இங்கே
இந்தப் பெருநகர் லண்டனுக்கு;
விந்தைக்கு மேலாக விந்தையைக் கண்டுநான்
சிந்தை தடுமாறி நிற்கிறேனே!

சாலை எல்லாம் சூட்டுப் போட்ட மனிதர்கள்
கோல கவுன் பூண்ட பெண்மணிகள்;
மேலை நாட்டு உடைக் கூட்டத்திடையிலே,
சேலைகளும் உலாச் செல்லுது இங்கே!

செந்தமிழ் நாட்டினம் பெண்களெல்லாம்—
இங்கே
சொந்தப் பண்புகளைத் தள்ளவில்லை;
இந்த நகரத்தின் இல்லங்களில் இவர்
எப்படி வாழ்கிறார் என்று பார்த்தேன்:

யந்திர ஜாலங்கள் தந்திர ஜாலங்கள்
இந்த வீடுகளில் உள்ளனவே;
மந்திரப் பாவைகள் போலவே பெண்டுகள்
மாயமாய்க் காரியம் செய்கிறாரே!

இம்மென்று சொல்லிடும் முன்னமே இட்டிலி;
அம்மென்று சொல்லிடும் முன்னே அவியல்;
கம்மென்று சாம்பாரும் கணத்தில் ஆக்குவர்;
ஜம்மென்று சர்க்கரைப் பொங்கலுமே!

இந்தப் பாட்டை, தனி பஸ் ஒன்றில், சுமார் ஐம்பது தமிழர்கள், கடலோரக் ஸௌத்டன் என்ற ஊருக்கு உல்லாசப் பிரயாணம் சென்ற போது நான் மறுமுறை பாடினேன். ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமியரும் கைக் குழந்தைகளும் சேர்ந்து ஐம்பது பேர்கள். லண்டனிலிருந்து நாறு மைல் தூரத்தில் இருக்கிறது ஸௌத்டன். காலை ஒன்பது மணிக்கு லண்டனிலிருந்து புறப்பட்டு, பன்னிரண்டு மணிக்குக் ஸௌத்டனை அடைந்தோம். அந்த மூன்று மணி நேரப் பிரயாணம் எவ்வளவு இன்பமாய் இருந்தது என்கிறீர்கள்! இங்கிலாந்தின் இயற்கைக் காட்சிகள் கண்ணுக்கு எழில் விருந்து அளிக்கையில், கர்நாடக இசையும், தமிழ்ப் பாட்டுக்களும், செவிக்கும் உள்ளத்துக்கும் இன்ப விருந்து அளித்தன. பஸ்ஸில் உள்ள ஒலிபெருக்கிக் கருவி மூலம், பெண்களும், சிறுவர் சிறுமியரும், ஆண்களும் கூடப் பாடினார்கள். ஆங்கில நாட்டின் காட்சிகளுக்கிடையே, தமிழ் நாட்டு இசையைக் கேட்பது எவ்வளவு ஆனந்தமாக இருந்தது!

ஸௌத்டனில் இறங்கி, சுகமான வெய்யிலில் நாங்கள் திரளாக நடந்து சென்ற போது, அங்கே விடுமுறைக்காக வந்திருந்த ஆங்கிலேயர்களெல்லாம், எங்களை வியந்து வியந்து பார்த்தார்கள். முக்கியமாக, பெண்

தாயார் ஸ்ரீமதி வீராராமனும் மகள் பாருவும். ஸ்ரீமதி வீராராமன், லண்டனில் உள்ள பாலே பள்ளிக்கூடம் ஒன்றில், பரதநாட்டிய வகுப்பு நடத்துகிறார். தாயும் மகளும் லண்டன் அரங்குகளில் பலமுறை நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள்.



களின் வண்ண வண்ணச் சேலைகளையும், 'பளிச்பளிச்' என்று ஒளி வீசிய நகைகளையும், தலைப்பின்னலையும், சிறுமியரின் பட்டுப் பாவாடைகளையும் கண்டு வியந்தார்கள்.

கரைக்கு அருகே உள்ளே பூங்கா ஒன்றில் உட்கார்ந்து, உணவுப் பெட்டிகளைத் திறந்தோம். புளியோதரை, சாம்பார் சாதம், சர்க்கரைப் பொங்கல், தேங்காய்ச் சாதம், தயிர்ச் சாதம், தோசை, உப்புமா, பூரி, உருளைக் கிழங்கு, அப்பளம், வறுவல் என்று எத்தனையோ தினுசுகள். எல்லாவற்றையும் "பொது உடைமையாய்"க் கொண்டு சுற்றிலும் உள்ள ஆங்கிலேயர்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும் என்று துணிந்து, கையினாலேயே எடுத்தும் விண்டும் கடித்தும் உறிஞ்சியும் சாப்பிட்டோம். சாப்பாட்டுக்கும் கூப்பாட்டுக்கும் நடுவில் தமிழ் இசையையும், வேடிக்கைக் கதைகளையும் "ஒலிபரப்பி" வந்தோம்.

இந்த உல்லாசப் பிரயாணம், லண்டன் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடந்தது. பொங்கல், தமிழ் வருடப் பிறப்பு, தீபாவளி முதலிய பண்டிகைகளை யொட்டி இந்தச் சங்கம் நிகழ்ச்சிகள் நடத்துகிறது. அவ்வப்போது லண்டனுக்கு வரும் அறிஞர்களுக்கும் பெரியார்களுக்கும் வரவேற்பு அளிக்கிறது. இசைக் கச்சேரிகளையும் பரத நாட்டியக் கச்சேரிகளையும் ஏற்பாடு செய்கிறது.



டிரபால்கர் சதுக்கத்தில், தமிழ் அம்மணி ஒருவர் புறாக்களுக்குப் பொரிகடலை போடுகிறார். லண்டன் ஆஸ்பத்திரி ஒன்றில், ஸ்ரீமதி சாந்தாராஜன் என்ற தமிழ் மாதுடன், எலிஸபெத் ராணி பேசிக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள், ஆண்டுக்கு ஐந்து ஷில்லிங் சந்தா செலுத்துகிறார்கள். அதோடு, ஒவ்வொரு கலை நிகழ்ச்சிக்கும், பிரவேசக் கட்டணமாக, ஆளுக்கு இரண்டரை ஷில்லிங் கொடுக்கிறார்கள். இங்கே, அரங்குகளுக்கு, எட்டிலிருந்து பத்து பவுன் வரை, ஒரு நாள் மாலைக்கு வாடகை கொடுக்க வேண்டியதாய் இருப்பதால், இவ்வாறு பிரவேசக் கட்டணம் வசூலிக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு கட்டணம் கட்டுவது உள்பட, சாதாரணமாய், ஒரு குடும்பம், தமிழ்ச் சங்க நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு திரும்புவதற்கு ஆகும் செலவு, சுமார் ஒரு பவுன்! பல மைல்களுக்கு அப்பால் இருந்தெல்லாம், சுரங்க ரயில்களிலும், பஸ்களிலும் பிரயாணம் செய்து, தமிழ் உரைகளைக் கேட்பதற்காக, தமிழர்கள் லண்டன் வருகிறார்கள். லண்டனில் இருக்கும் தமிழர்கள், ஒருவரை யொருவர் சந்தித்து, தாய்மொழியில் அளவளாவுவதற்கு லண்டன் தமிழ்ச் சங்கம் வாய்ப்பு அளிக்கிறது.

இந்தச் சங்கத்தின் இந்த ஆண்டுத் தலைவர், டாக்டர் சேகர் என்பவர். சுமார் முப்பது ஆண்டுகளாக இவர் லண்டனிலே வசித்து வந்திருக்கிறார். இவருடைய உடை மட்டுந்தான் ஆங்கில உடை; உள்ளமோ தமிழ்.

இவரைப் போல் இன்னும் பல தமிழர்கள், இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகளாய் இந்த நகரிலே வசித்து வருகிறார்கள். இவர்களில் பாதிப் பேர், தமிழ் நாட்டிலேயே கல்யாணம் செய்து கொண்டு வந்தவர்கள்; இன்னும் பாதிப்பேர், ஆங்கிலப் பெண்களைக் கலியாணம் செய்து கொண்டவர்கள்.

ஆங்கிலப் பெண்களை மணந்த தமிழர்கள் எல்லோருமே, தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மறந்து, அசல் ஆங்கிலேயர்களாய் மாறி விட்டார்கள் என்று நினைப்பது தவறு. திரு சி—என்பவரை எனக்கு நன்றாகத் தெரியும். மனைவியுடனும் மக்களுடனும் இவர் ஆங்கிலத்தில் பேசினாலும், தமிழர்களிடம் எல்லாம் தமிழிலேயே பேசுகிறார். தமிழ்ச் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் எல்லாம் கலந்து கொள்கிறார். திரு ப—என்பவரையும் எனக்குத் தெரியும். இவர் சிலப்பதிகாரத்தை ஆராய்ச்சி முறையில் படித்து, எப்போதும் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். "இந்தியா ஆபீஸி"லுள்ள தமிழ் நூல்களையெல்லாம், இவர் துருவித் துருவிப் பார்த்துப் படித்துக் கொண்டே இருக்கிறார். மனைவிக்குத் தமிழ் கற்றுக் கொடுக்காவிட்டாலும், மகனுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். இந்தப் பையனுக்கு, தாய்மொழி ஆங்கிலம்; தந்தை மொழி தமிழ்.

இங்கே நிலையாக வசிக்கும் தமிழர்களில், சில பாரிஸ்டர்களையும் டாக்டர்களையும் தவிர, மற்றவர்களெல்லாம், கப்பல் துறைகளில் வேலை பார்த்து வருபவர்கள்.



'' லண்டனில் இருந்தாலும், துணிந்து வேட்டி கட்டிக்கொண்டு, கதா காலட்சேபம் செய்வேன் '' என்பதை, இந்தக் கட்டுரையின் ஆசிரியர் சமீபத்தில் நிரூபித்துக் காட்டினார்.

மற்றப்படி, லண்டனில் இரண்டு மூன்று ஆண்டுகள் வசித்துச் செல்லும் தமிழர்கள், மாணவர்களும், 'இந்தியா ஹவுஸி'ல் வேலை பார்ப்பவர்களும் ஆவர். நாலைந்து நாட்கள் அல்லது இரண்டு மூன்று வாரம் இங்கே தங்கிச் செல்லும் தமிழர்கள், உல்லாசப் பிரயாணமாய் வருகிறவர்களும், வேறு நாடுகளுக்குச் செல்லும் வழியில் இறங்குவோரும் ஆவர். தமிழ் நாட்டிலிருந்து தொழில் பிரமுகர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் இங்கே அடிக்கடி வருகிறார்கள்.

லண்டன் தமிழர்களையும், லண்டனுக்கு வந்து போகும் தமிழர்களையும் சந்திப்பதற்கு 'இந்தியா கிளப்' என்ற கழகம் மிகவும் வாய்ப்பானது. பொதுவாக, இந்தியர்கள் எல்லோருக்குமான கழகமாய் இது இருந்த போதிலும், மற்ற இந்தியர்களைவிடத் தமிழர்கள்தான் இங்கே அதிகமாய் வருகிறார்கள். அதற்குக் காரணம், இங்கே அசல் தென்னிந்தியச் சாப்பாடு கிடைப்பதுதான். சாம்பார், ரஸம், மோர்க் குழம்பு, அவியல், கத்திரிக்காய் கூட்டு, சேனை பசியல், மிளகாய்ப்பொடியுடன் தோசை—எல்லாம் இங்கே கிடைக்கின்றன. பின்னே கேட்பானேன், தமிழர்கள் இங்கே கூடுவதற்கு! இங்கே சமையல் செய்கிறவர்கள் தமிழர்கள். ஆனால் பரிமாறுகிறவர்களில் ஒருத்தி வெள்ளைக்காரி. 'மோர்க் கொலம்பு, அடபலம், டோஸா, சாட்னி' என்று அவள் சொல்வதைக் கேட்க வேடிக்கையாய் இருக்கும்.

தமிழ் நாட்டிலிருந்து யார் யார் வந்திருக்கிறார்கள், யார்யார் வரப் போகிறார்கள் என்பதை வெல்லாம் இந்தக் கிளப்பில் நடக்கும் 'அரட்டை'யிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

தமிழரின் விருந்தோம்பலை இங்கே லண்டன் நகரிலே சிறப்பாகக் காணலாம். இங்கே குடித்தனம் நடத்தும் தமிழர்கள், இந்த நகரில் கல்வி பயிலவரும் தென்னிந்திய மாணவர்களையும், இந்த நகருக்குத் தாற்காலிகமாக வரும் தென்னிந்தியர்களையும், வீட்டுக்கு அழைத்து, தமிழ் நாட்டு மணங் கமழ, அத்துடன் அன்பு மணமும் கமழக் கமழ விருந்தளிக்கிறார்கள். விருந்து அளிப்போரும், விருந்தாளிகளும், ஜாதிமதபேதம் என்பதைச் சிறிதளவும் காட்டுவதில்லை. எல்லோரும் தமிழர்கள், தென்னிந்தியர்கள்; இந்தியர்கள்.

இலங்கை, மலேயா, தென் ஆப்பிரிக்கா, மரீஷஸ், மேற்கு இந்தியத் தீவுகள்—இவற்றிலிருந்தெல்லாம் இங்கேதமிழர்கள் வந்துள்ளார்கள். இவர்களும், தமிழர் என்ற இனப் பற்றுடன் தமிழ் நாட்டுத் தமிழர்களுடன் பேதமின்றிப் பழகுகிறார்கள்.

லண்டனில் உள்ள தமிழர்கள் தம்முடன் தாமே பழகிக் கொண்டிராமல், இங்குள்ள ஆங்கிலேயர்களுடனும், மற்றத் தேசங்களைச் சேர்ந்தவர்களுடனும் கூடுமான வரை நெருங்கிப் பழகுகிறார்கள். தம் இல்லங்களுக்கு அவர்களை அழைத்து வந்து உபசரிக்கிறார்கள். தமிழ் நாட்டு உணவு வகைகளை அவர்களுக்கு அளித்து, அவைகளை எப்படிச் சாப்பிடுவது என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். இசைத் தட்டுக்களின் மூலமோ அல்லது டேப் ரிக்கார்டுகளை முடுக்கி விட்டோ, தமிழ்நாட்டு இசையை ரஸிக்கும்படி செய்கிறார்கள். தாமும் அவர்கள் வீட்டுக்குச் சென்று, தமிழர்கள் நன்றாக அன்புடன் பழகக் கூடியவர்கள், நல்லவைகளை ரஸிக்கக் கூடியவர்கள் என்பதை நிரூபித்து வருகிறார்கள்.

தமிழ் இலக்கியத்தையும் இசையையும் கற்றுள்ள இரு ஜான்மாரும் இன்னும் சில ஆங்கிலேயர்களும் லண்டனில் இருக்கிறார்கள். அதே போல ஆங்கிலேயரைவிட அதிகமாகவே ஆங்கில இலக்கியம் கற்ற தமிழர்களும், மேல்நாட்டு நடனம் கற்ற தமிழர்களும்—ஆண்களும் பெண்களும் இங்கே இருக்கிறார்கள். இங்கேயுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழர்கள் ஆங்கில ஆசிரியர்களாகவும் இருக்கிறார்கள்.

இவர்களும் சரி, சாதாரண உத்தியோகம் பார்க்கும் தமிழர்களும் சரி, இந்த லண்டன் நகரிலே, ஆங்கில நாட்டின் தலைநகரிலே தமிழ் மணம் பரப்புகிறார்கள்; குறிப்பாகத் தமிழ்ப் பெண்மணிகள், தமிழ் மணத்துடன், தமிழ் இசையையும், கலைகளையும், பண்பாட்டையும் இங்கே பரப்பி வருகிறார்கள்.

இரண்டாவது வாரம் நடைபெறுகிறது!

சென்னை : பிளாஸா - பெங்களூர் : அலங்கார்





ஐயோ இருமல் கொல்கிறதே

பாவை விளக்கு

அத்தியாயம் 19

முதல் கதை

தணிகாசலத்தின் சித்தியிடமிருந்து செங்கமலம் வெளியூருக்குப் போனது பற்றி எந்த விவரமும் கிடைக்கவில்லை. ''தாயும் மகளும் வருஷத்துக்கொரு தரம் வருவார்கள். இருவிழா முடியுமட்டும் இருப்பார்கள். பிறகு போய் விடுவார்கள். மத்தியில் அறுவடை சமயத்தில், மார்கழிக் கடைசியில், செல்லக் கண்ணு வந்தாலும் வருவாள். வரா விட்டாலும் இல்லை. சொல்ல முடியாது'' இதுவே சித்தியின் பதில்.

வெளியில் கிராமத்தில் அவன் மெதுவாகத் தன்னுடைய அக்கறையைக் காட்டிக் கொள்ளாதபடி விசாரித்துப் பார்த்தான். யாரிடமிருந்தும் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. தபால்காரத் தாத்தாவைக் கேட்டான். தமக்கு ஒன்றும் தெரியாதென்று கைவிரித்து விட்டார். ''போஸ்ட்மாஸ்டருக்குத் தெரிந்திருக்கும்: வேண்டுமானால் போய்க் கேட்டுக் கொள்ளுங்கள்'' என்றார். தபாலாபீசுக்குப் போய்க் கேட்டுப் பார்த்தான். பையனை அவர் சந்தேகத்துடன் பார்த்தாரே தவிர, சரியான பதில்சொல்லவில்லை.


'தணிகாசலம்!' என்று அவள் கடைசியாகக் கத்தி விட்டுச் சென்றாளல்லவா? அந்த ஒரு சொல்லில் நம்பிக்கை வைத்து அவன் ஒரு வாரம் வரை காத்திருந்தான். செங்கமலத்தால் தன்னைப் பார்க்க முடியாவிட்டாலும் தனக்குக் கடிதமாவது எழுதுவாள் என்று ஒரு தீவிரமான நம்பிக்கை. ஒவ்வொரு நாளும் கடிதத்தை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தான். பைத்தியம் பிடித்த நிலையில் ஒரு வாரம் எப்படியோ ஓடி விட்டது.

ஆசை நிராசை ஆயிற்று! நம்பிக்கை குலைந்து அவனை நட்டாற்றில் கை விட்டது.

நாள் ஆக ஆக அவனுக்குச் செங்கமலத்தின் மேல் விஷம் போல் கோபம் நெறி கட்டத் தொடங்கியது. அவளை நினைத்த போதெல்லாம் ஆத்திரப்பட்டான். அவளை நினைக்காமல் இருக்கவும் முடியவில்லை. தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போகத் தெரிந்தவளுக்கு ஒரு கடிதம் எழுதக் கூடவா நேரமில்லை? நன்றாய்ப் படித்தவள்; எந்த நேரத்திலும் தாயார் அவளுக்குக் காவல் இருக்கப் போவதில்லை; இந்தக் கிராமத்தை விடக் கண்ணபுரத்திலாகட்டும், வேறு எந்த ஊரிலாகட்டும், கடிதம் எழுத அவளுக்கு வசதி கிடைக்காமல் போகாது. அப்படியிருந்தும் எழுதவில்லையென்றால் அது அலட்சியத்தைத் தானே காட்டுகிறது? அலட்சியம் செய்யக் கூடிய அளவுக்குத் தன்னை அற்பத் துரும்பென்று மதித்துவிட்டாளா என்ன?

இரண்டு வரியில் ஒரு கார்டு வந்திருந்தால் அவன் அவளை மனப்பூர்வமாக மன்னித்திருப்பான். தன்னை மற்றவர்கள் அலட்சியம் செய்தது அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. செங்கமலமே அலட்சியம் செய்கிறாள்! 'நடனம் முடிந்தவுடன் அதே இரவில் உங்களுடன் புறப்பட்டு வந்து விடுகிறேன். நீங்கள் என்னை வைத்துக் காப்பாற்றுவீர்களா?' என்று கேட்ட அவளே தன்னை அலட்சியம் செய்கிறாள்!

அவள் போட்டுக் கொண்டிருந்த இரண்டாயிரம் ரூபாய் நகைகளும் துணிமணிகளும் அவன் உள்ளத்து நெருப்புக்கு நெய் வார்த்தன. பணத் திமிரால் மனம் பஞ்சையாய்ப் போய் விட்டதா? அத்தனையும் வெளி மயக்கு! பச்சைத் துரோகம்! சிரிப்பு, பேச்சு, பார்வை எல்லாம் வெறும் நடிப்பு! அவள் தாயார் அவளுக்குக் கற்றுக் கொடுத்த



நடிப்புக் கலை! பெற்றவளிடம் அவள் கற்றுக் கொண்டு வரும் சாகசத்துக்குத் தன்னைக் களப் பலி கொண்டு விட்டாள். சும்மாக்கிடந்த இளம் நெஞ்சில் புயலைக் கிளப்பிவிட்டு, ஆள் இல்லாத வேலை பார்த்துத்தாயாருடன் நழுவி விட்டாள். கடைசியாக அவள் போகும் போது பெயர்சொல்லிக்கூப்பிட்டதுகூடவெறும் ஏமாற்று வித்தைதான். அட! தணிகாசலம்; முட்டாள், முட்டாள், முட்டாள்! அவளுக்காக மூன்று வாய்த் தண்ணீர் குடித்துச் சாகப் போனாயே? அவளுடைய நாட்டியத்தைவிட அன்றொரு நாள் உன்னைப் பார்த்துச் சீறிய நல்ல பாம்பின் ஆட்டம் உயர்ந்ததடா!

அவளை இழந்த நஷ்டம் பெரிதில்லை; அதனால் ஏற்பட்ட அவமான உணர்ச்சி அவனைத் தின்றது. 'வாழ்க்கையில் இது முதல் தோல்வி' என்று நினைத்துக் கொண்டு யாரைப் பார்த்தாலும் தலை குனிந்தான். தாமரைக் குளத்து மீன்கள் அவனைப் பார்த்துக் கேலி செய்தன; மலர்கள் அவனைக் கண்டு நகைத்தன; வயல்கள், வரப்புக்கள், செடிகள், கொடிகள், கால்நடைகள் எல்லாமே அவனைப் பார்த்துப் பரிகாசம் செய்தன.

அவளைப் புகழ்ந்து எழுதிய கவிதைத் துணுக்கைச் சுக்குநூறாய்க் கிழித்துக் குளத்தில் எறிந்தான்.

தன்னுடைய துயரத்தை யாரிடமாவது சொல்லி ஆற்றிக் கொள்ள விரும்பினான். தன்னை ஒத்த வயதில் நண்பர்கள் யாரும் புதுப்பட்டியில் இல்லை. தன்னிடமே ஆயிரம் தடவைகள் சொல்லிக் கொண்டாயிற்று. வேதனை மிகுந்ததே தவிரக் குறையவில்லை. வேறு யாரிடம் சொல்வது? சொல்லா விட்டால் பைத்தியம் பிடித்து விடும்.

படிக்கும்போது, சிந்திக்கத்தக்க சொற்கள் இருந்தால் அவற்றைக் குறித்துக் கொள்வதற்காக அவன் ஒரு நோட்டு வைத்திருந்தான். வீட்டில் படிப்பதாக இருந்தால் பெரும்பாலும் நோட்டை அருகில் வைத்துக் கொள்வது வழக்கம். அந்த நோட்டை எடுத்து வைத்துக் கொண்டு மளமளவென்று எழுதினான். நினைவில்இருந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அதில் கொட்டினான். கற்பனையாக ஒரு நண்பனை வைத்



துக்கொண்டு, அவனுக்குக் கடிதம் எழுதுவது போல், தொடக்கத்திலிருந்து முடிவு வரையில் எழுதி விட்டான். எவ்வளவு தூரம் அதில் அவளைக் காரசாரமாகத் திட்ட முடியுமோ, அவ்வளவும் திட்டியிருந்தான். கடைசியாக, "அந்த நல்ல பாம்பு என்னுடைய மகுடியில் மயங்கி ஆடுவதாக நம்பி நான் ஏமாந்தேன். அது விளையாட்டாக என்னைக் கடித்து விட்டு ஏதோ ஒரு புற்றுக்குள் சென்று ஒளிந்து கொண்டது. குற்றுயிரும் குலை உயிருமாக அது ஒரு அப்பாவியைத் துடிக்க வைத்து வேடிக்கை பார்க்கிறது. அதை நான் திரும்பவும் கண்டால் கவி பாட மாட்டேன்; கற்பனையில் மயங்க மாட்டேன்; காறித் துப்புவேன்! பழி வாங்குவதற்காகவாவது நான் அதை மீண்டும் பார்க்க வேண்டும். முடியுமா?" என்று உருக்கமாக முடித்திருந்தான்.

எழுதி முடித்த பிறகு அவனுக்கு ஒரு பெருஞ்சுமையைக் கீழே இறக்கி வைத்தது போலிருந்தது. ஒரு வாரம் வரையிலும் அவன் அந்த நோட்டைப் புரட்டிப் பார்க்கவே இல்லை.

அடுத்த மாதச் சம்பளத்தில் 'மலர்க் கொத்து' பத்திரிகைக்குச் சந்தா அனுப்பினான். கண்ணபுரத்துக்குச் சென்று சில புத்தகங்கள் வாங்கி வந்தான். சுப்பையாவின் வீட்டில் அண்ணியும் குழந்தையும் வந்திருந்தார்கள். பையனுக்கு ஒரு புதுச் சட்டை எடுத்துக் கொடுத்தான். சிவகாமி அண்ணி தன்னுடைய பழைய விரோதத்தை மறந்து விட்டான். குழந்தையை அவள் அவனுடைய மடியில் கொண்டு வந்து விட்ட போது அது தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தது. தணிகாசலத்தின் ஆனந்தத்தில் தேவகியும் பங்கு கொண்டான். குழந்தைக்கு அவன் கொண்டு வந்த சட்டையைப் போட்டு விட்டுத் தேவகி அதை அழகு பார்த்தான்.



தேவகியிடம் என்ன சக்தி மறைந்து கிடந்ததென்றே தணிகாசலத்துக்குத் தெரியவில்லை. அவளுடைய சாதாரணப் பார்வையில் அவன் தன் துன்பங்களை மறந்தான். செங்கமலத்தைக்கூட மறந்து விட்டான் என்றே சொல்ல வேண்டும். ஒரு நாள் கண்ணபுரத்துக்குச் சென்று திரும்பியதில் அவன் புது மனிதனாக மாறிக் கொண்டு வந்தான். சுப்பையாவும் இன்னும் ஒரு வாரத்தில் அவனுக்கு வேலை கிடைத்துவிடும் என்று கூறி அனுப்பினார்.

'மலர்க் கொத்து' அவனுடைய பெயருக்கே தபாலில் வந்து சேர்ந்தது.

"குட்டி ஊரில் இல்லையென்னு சொந்தமாக வரவழைக்கிறீங்களா?" என்றார் தபால்காரக் கிழவர். அவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்தவுடன் அவனுக்

ருப் பழைய நினைவுகள் வந்தன. அவனுக்கும் அவளுக்கும் முதன் முதலாக முடிச்சுப் போட்டு விட்டவர் இந்தக் கிழவர்தாமே?

பத்திரிகையைப் பிரிப்பதற்குப் பதிலாகத் தன்னுடைய நோட்டைப் பிரித்துப் படித்தான் தணிகாசலம். பத்திரிகையில் வெளி வரும் ஏதோ ஒரு கதையைப் படிப்பது போல் தோன்றியது அவனுக்கு. தணிகாசலத்துக்குக் கதை எழுதத் தெரியாது. விழுந்து விழுந்து படிக்கத்தான் தெரியும். ஆனால், இன்றைக்கு அவனுடைய குறிப்பை அவனே படிக்கும் போது அது ஒரு கதை போல இருந்தது. பத்திரிகைகளில் கதை எழுதுகிறவர்கள் இப்படித்தான் எழுதுகிறார்களோ?



ஏன்? இதையே கதையாக எழுதி அனுப்பினால் என்ன?

தணிகாசலத்தின் மூளை வேலை செய்தது. அதைப் படிக்கும் போது முன்னைப் போல் அவன் உணர்ச்சி வசப்படவில்லை. அதிகமாக அவளைத் திட்டி எழுதியிருந்த பகுதிகளை நீக்கி விட்டு அதற்குப் புது மெருகு கொடுத்தான். முன்னும் பின்னும் சிறிது மாற்றினான். 'ஏமாற்றம்' என்று தலைப்புக் கொடுத்து 'மலர்க் கொத்து'க்கே அனுப்பி வைத்தான்.

பத்திரிகை ஆசிரியர் அதை வெளியிட்டால், கதையை வேறு யார் படித்தாலும் படிக்காவிட்டாலும் செங்கமலம் படிப்பாள். படித்து விட்டு அவளுக்கு இருதயமிருந்தால் நன்றாக அழுது புலம்பட்டும். அல்லது கேலிச் சிரிப்பு சிரிக்கட்டும். பத்திரிகை ஆசிரியர்கள் எப்போதும் தங்களுக்குப் பக்கத்தில் பெரிய குப்பைக் கூடைகள் வைத்திருப்பார்களாம்! பிடிக்கா விட்டால் அதை அவர் குப்பைக் கூடையில் வீசி எறியட்டும். கதையின் பெயரே ஏமாற்றம்; வாழ்க்கையில் கிடைத்த ஏமாற்றம் கதைக்கும் கிடைத்து விட்டுப் போகிறது.

திருப்பி அனுப்புவதற்குத் தபால் தலை வைத்திருந்தான். கதையை அனுப்பிய பிறகு ஒரு இதழ் வந்து விட்டது. அதில் கதை வெளி வரவுமில்லை; அது அவனிடம் திரும்பி வரவுமில்லை.

ஆரம்ப எழுத்தாளர்களின் கதி இரண்டு விதம். ஒன்று கிணற்றில் போட்ட கல்; மற்றொன்று சுவரில் அடித்த பந்து. இந்த இரண்டில் தன் கதைக்கு என்ன நேருமென்று அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதங்கள் எழுதினான். பதில் வரவில்லை. சமஸ்தானத்திலிருந்து அவனுக்கு வேலைக்கு உத்தரவு வந்து விட்டது.

முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தில் சமஸ்தானத்தின் மராமத்து இலாகாவில் அவனுக்கு வேலை. நல்ல வேளையாகக் கண்ணபுரத்திலேயே அவனைப் போட்டிருந்தார்கள். ஏதாவது ஒரு விடுதியில் தங்கிச் சாப்பிட்டுக் கொள்ளலாம். ஓய்ந்த வேளையில் புத்தகம் படிக்கலாம். செங்கமலம் எதிர்பாராமல் கண்ணில் பட்டாலும் படுவாள். வேலை பழக்கமாகி நிச்சயமாகி விட்டால் பொன்வயலில் இருந்து குடும்பத்தை அழைத்துக் கொள்ள வேண்டும்.

சித்தப்பாவும் சித்தியும் அவனை ஆசீர்வதித்து அனுப்பினார்கள். சித்தப்பா கைச்செலவுக்குப் பணம் கொடுத்தார். கண்டிராக்டர் கண்ணுச்சாமிக்குத் தணிகாசலம் தம்மை விட்டுப் போவது பிடிக்கவில்லையென்றாலும் அவரால் மறுக்க முடியவில்லை. அவனுக்குச் சில புத்திமதிகள் சொல்லி வைத்தார்.

''வேலையை நன்றாய்க் கற்றுக் கொள். அந்த இலாகாவுக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. நான் அடிக்கடி அங்கே வருவேன். ஏதாவது தகவல் கேட்டால் பார்த்துச் சொல். சம்பளம் குறைவென்று கவலைப் படாதே. புத்திசாலிப் பிள்ளையாக இருந்தால் பிழைத்துக் கொள்வாய்.''

தணிகாசலம் தலையாட்டினான்.

கண்ணுச்சாமி தொடர்ந்து கூறினார்: ''கல்யாணத்தைப் பற்றி நான் சொல்லியதை மறந்து விடாதே. குடியும் குடித்தனமுமாய் இருப்பதுதான் நல்லது.

கல்யாணச் செலவு எவ்வளவு ஆனாலும் கவலைப்பட வேண்டாம். அந்த ஆபீசில் நீ இருந்தால் சீக்கிரம் கடனைக் கட்டி விடலாம்'' என்றார்.

தணிகாசலம் கண்ணபுரத்துக்குச் சென்றான். கப்பையாவின் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கி விட்டுத் தனி விடுதி பார்த்துக் கொண்டான்.

ஆபீஸ் உலகத்துக்குள் அவன் நுழைந்தவுடன் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. எதிரெதிரே இரண்டு வரிசைகளில் பத்துப் பன்னிரண்டு பேர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் சோம்பல் முறித்தார்கள்; சிலர் அரட்டை அடித்தார்கள்; சிலர் சுறுசுறுப்பாக எழுதிக் கொண்டிருந்தார்கள். வரிசையின் மூலைக் கோடியில் உட்கார்ந்து அந்தப் பிரிவின் தலைமைக் குமாஸ்தா தபால்களைப் பிரித்துக் கொண்டிருந்தார். அவருக்கும் அடுத்தாற்போல் அந்த இலாகாவின் தலைவருக்குத் தனி அறை இருந்தது.

அறைக்கு வெளியில் தொங்கிய பெயர்ப் பலகையைக் கண்டவுடன் திடுக்கிட்டான் தணிகாசலம். 'நாகநாதன் - தலைமை இன்ஜினீயர்' என்று போட்டிருந்தது.

'நாகநாதன்' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அவர் பங்களாவில கட்டிக் கிடந்த கோம்பையின் நினைவு அவனுக்கு வந்தது.

தலைமைக் குமாஸ்தா அவனை ஏற இறங்கப் பார்த்தார். உத்தரவை வாங்கிப் படித்தார்.

''பையன் சிறியவனாயிருக்கிறாயே? வேலை மலைபோல் குவிந்து கிடக்கிறதே! நீ பார்க்க வேண்டிய வேலை மிகவும் பொறுப்புள்ள வேலை.''

''கவனமாகச் செய்கிறேன். தெரியாததைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.''

''கையெழுத்துப் போட்டுவிட்டு அந்த இடத்தில் போய் உட்கார். இன்ஜினீயர் ஊரில் இல்லை; இருந்தாலும் அவரை நீ பார்க்க வேண்டியதில்லை. இன்னும் ஆறு மாசமானாலும் உன்னால் எதையும் கற்றுக் கொள்ள முடியாது. நான் ஒருவன் இருக்கிறேன். வருகிறதையெல்லாம் தள்ளிவிடு. நான் கட்டிக் கொண்டு அழுகிறேன்.''

அவர் பேச்சிலிருந்து அவர் எப்படிப்பட்டவர் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் முகத்தில் அன்பு கொள்ளக் கூடிய பரிவுணர்ச்சி மட்டும் தென்பட்டது.

தணிகாசலம் அவர் கட்டிக் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்து காகிதக் கட்டுகளைப் புரட்டினான். சாலைகள் பழுது பார்ப்பது, ஏரிக்கரைகள் எழுப்புவது, பாலங்கள் மராமத்துச் செய்வது, இருக்கும் கட்டடங்களை இடிப்பது, இல்லாத கட்டடங்கள் எழுப்புவது-இப்படிப் பலப் பல திட்டங்கள் அவற்றுக்குள் இருந்தன. சமஸ்தானத்தார் தங்கள் நாட்டைப் புதுவிதமாக மாற்றி அமைக்கப் பல லட்சங்களில் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். உயர்ந்த நோக்கமுள்ள திட்டங்களே. கண்ணால் இவ்வளவு பணத்தைக் கண்டிருக்கா விட்டால்கூடக் காகிதத்தில் கண்டு தணிகாசலம் வியந்தான்.

சுற்றியிருந்தவர்கள் தணிகாசலத்தை வேடிக்கை பார்த்தார்கள். அவனைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே வயதிலும் அநுபவத்திலும் பெரியவர்கள். கிராப்பு, வழுக்கை, குடுமி, குல்லாய்,



ஒல்லி, நோஞ்சல், பருமன்-இப்படிப் பல ரகங்கள் இருந்தன. சிலர் கண் சாடை காட்டிச் சிரித்துக் கொண்டார்கள்; சிலர் கசமுசவென்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். தணிகாசலம் ஒன்றும் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். கண்காட்சிச் சாலைக்குப் புதிதாக வந்து சேர்ந்த நூதனப் பிராணியின் உணர்ச்சி அவனுக்கு.

மத்தியானத்துக்கு மேல், ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு போய்த் தலைமைக் குமாஸ்தாவிடம் நீட்டி, ''இதற்கு என்ன பதில் எழுதுவது?'' என்று கேட்டான்.

தலைமைக் குமாஸ்தா ரங்கராஜன் கண்ணாடி வழியாக அவனைப் பார்த்தார். ''நான்தான் அப்போதே சொன்னேனே?'' என்றார். ''நீ பதிலும் எழுத

வேண்டாம்; ஒன்றும் செய்ய வேண்டாம். வருகிற தபால்களைச் சேர்த்துக் கொடுத்து விடு. கேட்கிற கட்டுக்களைக் கேட்கும்போது எடுத்துத் தா. பாவம், பள்ளிக்கூடத்துப் பையன்; உனக்கென்ன தெரியும்?'' அவர் எழுந்து எங்கோ வெளியில் சென்றார்.

நாற்காலியில் வந்து உட்கார்ந்தான் தணிகாசலம். அடுத்தாற்போல் இருந்தவர் அவனைக் கேலியும் செய்தார்.

''ஆமாம், உன் வேலையெல்லாம் அவர் கவனித்துக் கொள்வார். வாங்குகிற சம்பளத்தை அவரிடமே கொடுத்து விடு!'' என்றார்.

மற்றொருவர் குறுக்கே பேசினார்: ''சம்பளத்தைக் கொடுத்தால் போதுமா?''

சுற்றியிருந்த பத்துப் பேரும் இதைக் கேட்டுக் 'கொல்'லென்று சிரித்தார்கள். ரங்கராஜன் திரும்பி வந்தவுடன் இந்தச் சிரிப்பு அடங்கியது.

அத்தியாயம் 20

வாழத் தெரியாதவன்

இரண்டு மாதங்கள் அங்கே வேலை செய்து இரண்டு சம்பளங்கள் தணிகாசலம் வாங்கி விட்டான். அவன் வாங்கிய சம்பளத்தைத் தலைமைக் குமாஸ்தா ரங்கராஜன் கேட்டு வாங்கிக் கொள்ளவில்லை. பதிலாக, அவனிடம் தனிப்பட்ட பரிவு காட்டினார்; தம் வீட்டிலிருந்து வந்த சிற்றுண்டியைச் சில வேளைகளில் அவனை வற்புறுத்திச் சாப்பிடச் சொன்னார். அவனுக்கும் சேர்த்துப் பக்கத்துக் கடையிலிருந்து காப்பி வரவழைத்துக் கொடுத்தார். தாமே சில்லறை கொடுத்தார்.

நாகநாதனுடைய கண்களில் தணிகாசலம் சரியாகத் தட்டுப்படவில்லை. எப்போதாவது நேருக்கு நேர் சந்தித்தால் அலட்சியமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடுவார். மற்றக் குமாஸ்தாக்களை அவர் உள்ளே கூப்பிட்டு அனுப்புவது உண்டு; ரங்கராஜனும் அடிக்கடி போய் வந்தார்; இந்த இரண்டு மாதங்களில் தணிகாசலம் ஒரு முறை கூட அவர் அறைக்குள் நுழைந்து பார்த்ததில்லை.

தணிகாசலத்துக்கு ரங்கராஜனிடம் தனிப்பட்ட பற்றுதல் ஏற்பட்டது. எப்போதாவது ஞாயிற்றுக்கிழமைகளில் அவர் அழைப்பைப் பெற்று அவர் வீட்டுக்குச் சென்றான். அவனிடம் தாராளமாய்ப் பழகினார். குழந்தை குட்டிகளுள்ள பெரிய குடும்பம் அவருடையது.

ஆபீசில் மட்டும் அவனுக்கு இந்த இரண்டு மாதங்களில் ஒன்றுமே புரிந்து கொள்ள முடியவில்லை. வேலையையும் தெரிந்து கொள்ள முடியவில்லை; மனிதர்களையும் அறிந்து கொள்ள முடியவில்லை. சிலர் பத்து மணியிலிருந்து ஐந்து மணி வரை நாற்காலியில் ஆணி அடித்தது போல் உட்கார்ந்து எழுதினார்கள். சிலர் பகலில் அரட்டை அடித்துவிட்டு வீட்டுக்குக் கட்டுகளைத் தூக்கிச் சென்றார்கள். இன்னும் சிலர் ஆபீசிலும் வேலை செய்யவில்லை; வீட்டுக்கும் எடுத்துச் செல்லவில்லை. நாலைந்து பேர்கள் மட்டிலும் ரங்கராஜனைப் போல் காலைப் பொழுதில் வேலைக்கு வந்து இருட்டுகிற வரையில் உழைத்து விட்டுக் களைப்புடன் வீடு திரும்பினார்கள். அவர்கள் எல்லோருக்குமே முதல் தேதி தவறாமல் சம்பளம் கிடைத்து வந்தது.

தணிகாசலம் வேலையைக் கற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் ரங்கராஜனுக்கு வேண்டிய மற்ற உதவிகளைச் செய்தான். கூட்டல், கழித்தல், நகல் எடுத்தல், கட்டுக்களை எடுத்துத் தருதல்- இவை போன்ற அலுவல்களைக் கவனித்தான். பொழுதெல்லாம் இவற்றுக்கே சரியாக இருந்தது.

அலுவல் நேரத்தில் வெளியாட்கள் பலர் அங்கு வந்து சென்றார்கள். நாகநாதனைப் பார்க்க வருவோர், ரங்கராஜனைப் பார்க்க வருவோர், மற்றக்



குமாஸ்தாக்களைப் பார்க்க வருவோர் இப்படிப் பலர் வந்தார்கள். பொதுநலத் திட்ட வேலைகள் பல நடந்து கொண்டிருந்ததால் பொது மக்கள் அங்கு வந்து போனதும் தணிகாசலத்துக்கு வியப்பாயில்லை. கண்டிராக்டர் கண்ணுச்சாமி கூட வந்து போனார். அவரைத் தவிர வேறு யாரும் அவனிடம் வருவதில்லை. அப்படி யாராவது வந்தாலும் அவர்களை ரங்கராஜன் தம்மிடம் அழைத்துக் கொண்டார். கூடியவரையில் அவனிடம் யாரையும் நெருங்க விடாமல் கண்காணித்தார் என்றுகூடச் சொல்லலாம்.

மூன்று நாட்கள் விடுமுறை பெற்று அவர் வெளியூருக்குச் சென்றார். அவசரமான சில கடிதங்களுக்கு மட்டிலும் பக்கத்திலிருப்பவர்களைக் கேட்டுப் பதில் எழுதி உள்ளே அனுப்பினான். இரண்டு நாட்கள் எப்படியோ கழிந்து விட்டன.

மூன்றாவது நாள் ஒரு விரும்பத் தகாத நிகழ்ச்சி நடந்தது. வைரக் கடுக்கனும் தங்க மோதிரமும் போட்ட ஒரு ஆசாமி தணிகாசலத்தின் மேஜைக்குப் பக்கத்தில் வந்து நின்று ரங்கராஜனை விசாரித்தார். முன்பு இரண்டொரு வேளைகளில் அந்த மனிதரை அவன் அங்கு பார்த்திருக்கிறான். ரங்கராஜன் மறுநாள் வந்து விடுவார் என்பதை அவரிடம் தெரிவித்தான். தமக்கு அவசரமாக ஒரு விவரம் தேவையிருக்கிறது என்றார் அம் மனிதர்.

"ஏழாம் நம்பர் ரோட்டுப் பாலம் பழுதாயிருக்கிறதே; அதை இடித்துக் கட்ட வேண்டுமென்று அதிகாரி மேலே எழுதினாராம்; பதில் வந்து விட்டதா?"

"ரங்கராஜன் வந்தவுடன் கேளுங்கள்" என்றான் தணிகாசலம்.

மனிதர் இடத்தை விட்டு அசையவில்லை. அங்கேயே நின்று கொண்டிருந்தார். பிறகு மெதுவாக, அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக, "வெளியே கொஞ்சம் வருகிறீர்களா?" என்று அழைத்தார்.

தணிகாசலம் அவருடன் வெளியில் வராந்தாவுக்குச் சென்றான்.

"சாதாரண விஷயம் அது; ஒரு நிமிஷத்தில் பார்த்துச் சொல்லி விடலாம்; எனக்காகத் தயவு பண்ணுங்கள்" என்றார் அவர்.

தணிகாசலத்துக்கு அந்த விவரம் நன்றாய்த் தெரியும். ஆனால் அதை வெளியில் சொல்லலாமா, கூடாதா என்பது தெரியாது. முதலில் சற்றுத் தயங்கினான். பிறகு, "அவரைக் கேட்காமல் நான் சொல்ல முடியாது" என்றான்.

வைரக் கடுக்கன் சுற்றுமுற்றும் பார்த்தது. தன் சட்டைப் பைக்குள் கையை விட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவனுடைய சட்டைப் பைக்குள் திணித்தது. தணிகாசலத்துக்கு நெருப்புத் துண்டைச் சட்டைப் பைக்குள் போட்டது போலிருந்தது. பதறிப் போய்க் கோபத்துடன் அவரை விழித்துப் பார்த்தான். பையை விட்டுக் கையிலெடுத்து அவரிடமே நீட்டினான்.

"பத்து ரூபாய் பத்தாதா? சின்ன விஷயம்தானே? — இந்தாருங்கள்: சீக்கிரம் பார்த்துச் சொல்லுங்கள்."

"சின்ன விஷயந்தான்!" என்றான் தணிகாசலம்.

இதற்குள் இன்னொரு பத்து ரூபாய் அவன் பைக்குள் நுழைந்தது. முன்னால் நீட்டிய பணத்தை அவர் திரும்பப்



பெற்றுக் கொள்ளவில்லை. தணிகாசலம் தடுமாறினான். இரண்டையும் அவரிடம் எடுத்து நீட்டினான். அந்த மனிதர் பையனையே விலைக்கு வாங்கி விட்ட தோரணையில் அவனுடைய தோளில் கையைப் போட்டார்.

உச்சி முதல் உள்ளங்கால் வரை பற்றி எரிந்தது தணிகாசலத்துக்கு. மரணப் படுக்கையில் இருந்து கொண்டு அவனுடைய தந்தை கூறிய சொற்களை நினைத்துக் கொண்டான். 'என்னுடைய வாழ்க்கையில் நான் செய்த நல்ல காரியங்கள் உனக்கு வழிகாட்டியாகவும்

கெட்ட காரியங்கள் எச்சரிக்கையாகவும் இருக்கட்டும்'—எச்சரிக்கை.

சூறாவளிபோல் பணமும் கையுமாக உள்ளே வந்தான். மற்றக் குமாஸ்தாக்கள் அவனை வேடிக்கை பார்த்தார்கள். அவர்களைச் சட்டை செய்யாமல் அவன் மின்னலைப் போல் நாகநாதனுடைய அறைக்குள் நுழைந்தான்.

குனிந்து எழுதிக் கொண்டிருந்த அதிகாரி, சொல்லிக் கொள்ளாமல் உள்ளே நுழைந்த முரடனைக் கண்டு, வெகுண்டு நோக்கினார். பையனின் உடல் பதறிக் கொண்டிருந்தது.

"ஆபீஸ் ரகசியத்தைச் சொல்லச் சொல்லி ஒரு மனிதர் எனக்குப் பணம் கொடுத்தார். அவர் கூட இங்கேதான் நின்று கொண்டிருக்கிறார்."

பணத்தை அவர்முன்னால் வைத்தான். அதிகாரி பணத்தையும் பையனையும்



மாறி மாறிப் பார்த்தார். பிறகு யோசனை செய்தார்.

"நீ அன்றைக்கு என்னிடம் வந்து கையெழுத்து கேட்டுக் கழுத்தறுத்த பையன்தானே?"

"ஆமாம்."

"மகாலிங்கத்தானே உனக்குக் கையெழுத்தும் போட்டுக் கொடுத்து, வேலையும் போட்டுக் கொடுத்தார்?"

"ஆமாம்."

"பெரிய இடத்துச் சிபாரிசு?" என்று தமக்குள் பேசிக் கொண்டார். மணியடித்துச் சேவகனை வரவழைத்தார். வந்த மனிதரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்.

வைரக் கடுக்கன் குழைந்த சிரிப்பு சிரித்துக் கொண்டே அதிகாரியின் எதிரில் வந்தது. கோம்பையைப் போல் அந்த மனிதர் மீது தம்முடைய அதிகாரி பாயப் போகிறார் என்று எதிர்பார்த்தான் தணிகாசலம். என்ன ஏமாற்றம்! வைரத்தைக் கண்டவுடன் கோம்பை வாலைக் குழைத்தது; பல்லைக் காட்டியது.

"அட, நீர்தானா? வாருமையா, உட்காரும். பையனிடம் பணத்தைக் கொடுத்து ஆழம் பார்த்தீரோ? இந்த மாதிரி தப்புத் தண்டாவுக்கெல்லாம் நீர் போக மாட்டீரே!" தணிகாசலத்திடம் திரும்பி, "சரி, நீ போகலாம்" என்று கூறினார்.

தணிகாசலம் அதிர்ச்சியில் அடிபட்டு வெளியில் வந்தான். நாற்காலி கொடுத்து அவரை உட்காரச் சொல்லி விட்டுத் தன்னை வெளியே அனுப்புகிறார் அதிகாரி. யார் செய்த குற்றத்துக்கு யாருக்குத் தண்டனை?

நாகநாதனுடைய குரல் உள்ளே கேட்டது. "ஏனையா, நீர் நேற்று வந்த பையனைக் கைக்குள் போட்டுக் கொண்டு காரியத்தை முடிக்கப் பார்க்கிறீரா? பத்தும் இருபதும் கையை விட்டுக் கொடுத்தால் போதுமா? நீர் சுண்ணாம்பையும் மணலையும் போட்டுக் கட்டுகிற பாலத்தை சிமிண்டுப் பாலம் என்று ஒப்புக் கொள்ள வேண்டியவன் யார் தெரியுமா? இனிமேல் இங்கே குறுக்கு வழி வேலையில் இறங்காதீர்."

தேர்வழிப் பிரமுகரின் போதனையை மேலே கேட்கப் பிடிக்காமல் தணிகாசலம் தன்னுடைய நாற்காலிக்கு வந்தான். ஐந்தே நிமிஷத்தில் காட்டுத் தீ போல் அந்தச் செய்தி அலுவலகம் முழுவதிலும் பரவியது. ஒரு சிலர் இடத்தை விட்டு எழுந்து வந்து, காட்டிலே பிடித்த பிராணியைப் பார்ப்பது போல் அவனைப் பார்த்துச் சென்றார்கள். வைரக் கடுக்கன் பேர்வழி, 'இரு, பயலே! உன்னை ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்வதுபோல் முறைத்துக் கொண்டே வெளியில் சென்றார்.

தணிகாசலம் பயத்துக்கும் பரிதாபத்துக்கும் உரிய பொருளானான். அவனைச் சிலர் சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள்.

"உனக்குக் கல்யாணமாகி விட்டதா, தம்பி?" என்று கேட்டார் எதிர் நாற்காலிச் சபாபதி.

"இன்னும் இல்லை."

"கல்யாணத்துக்குப் பெண் கொடுப்பவர்கள் உனக்குச் சம்பளம் எவ்வளவு என்று கேட்பார்கள், தெரியுமா?"

தணிகாசலம் பதில் சொல்லவில்லை.

"அடுத்தாற்போல் 'கிம்பளம்' எவ்வளவென்று கேட்பார்கள்."

கட கட வென்ற சிரிப்பொலி நாலா பக்கங்களிலிருந்தும் எழுந்தது.


மழுமழுப்பான
சுகமான
க்ஷவரத்திற்கு...
வாழ்வில் வெற்றி கண்டவர்கள் வேறெந்த தயாரிப்பையும்
நாடாமல்
பாமாலிவ்
ஷேவிங் கிரீமைத்தான் உபயோகிக்கிறார்கள்
PALMOLIVE
BRUSHLESS
PALMOLIVE
LATHER
பாமாலிவ் என்றாலே உயர்ந்த ரகம்!


இருட்டு நேரங்களில்
உங்களுக்கோர்
வழிகாட்டி
ESTRELA
BRIGHT LIGHT
LONG LIFE
ESTRELA BATTERIES LTD
BOMBAY
எஸ்ட்ரேலா
எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.

''மேல் வரும்படியை விட்டு விடக் கூடாது, தம்பி!''

''எனக்கு இந்தச் சம்பளம் போதும்'' என்றான் தணிகாசலம்.

''எவ்வளவு நாளைக்குப் போதும்? நீ ஒண்டிக் கட்டை. இதில் மீதம் பிடித்து இன்றைக்கு நீ சினிமாவுக்குப் போகலாம்; சிகரெட்டு குடிக்கலாம்; சீட்டாட்டம் போடலாம். நாளைக்கு ஒருத்தி வந்து உன் மடியைப் பிடித்து இழுப்பாளே? உனக்குக் கல்யாணமும் ஆகி, எங்களைப் போல் வருஷத்துக்கொரு குழந்தையும் பிறந்துகொண்டிருந்தால் நீ என்ன செய்வாயாம்?''

''எனக்கு இது பிடிக்கவில்லை'' என்றான். ''சட்ட விரோதம்.''

''சட்டம் போட்டவர்கள் வாழ்க்கைக்கு விரோதமாய்ப் போட்டிருக்கிறார்கள், தம்பி. குறைந்த சம்பளக்காரன் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது. அவனுக்குக் குழந்தை குட்டி பிறக்கக் கூடாது. நோய் நொடி வரக்கூடாது. அவன் வீட்டில் நல்லது பொல்லாதது நடக்கக் கூடாது. இப்படியெல்லாம் சட்டம் போட வேண்டும், தம்பி!''

''பிழைக்கத் தெரியாத பிள்ளை'' என்றார் ஒருவர்.

''சம்பளம் போதவில்லையென்றால் சேர்ந்து போராடுவோம்'' என்றான் தணிகாசலம். ''ஒன்றாய்ச் சேர்ந்து உயர்த்தச் சொல்வோம்.''

''என்ன! என்ன! என்ன!'' பல குரல்கள் ஒன்றாய் எழுந்தன.

சொல்லத்தகாத வார்த்தையை அவன் சொல்லி விட்டது போல் எல்லோரும் கலகலத்துப் போனார்கள்.

''பையன் புரட்சிக்காரன் போலிருக்கிறது'' என்று முணுமுணுத்தார் ஒருவர். ''இல்லை, முட்டாள்!'' என்று அதற்கு மறுப்புத் தந்தார் மற்றவர்.

சபாபதி கூறினார்: ''நீ சிறு பிள்ளை; உனக்கு உலகம் தெரியாது. பேசாமல் உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ. சேர்ந்து போராடினால் எங்களுக்குச் சீட்டுக் கொடுத்து வெளியில் அனுப்பி விட்டு, உன்னைப் போல் கற்றுக்குட்டிகளையெல்லாம் கொண்டு வந்து உள்ளே நிரப்பி விடுவார்கள். ஆபத்துக்கு வழிகோலாதே!''

அதற்குள் அவனுக்கு இடது புறத்திலிருந்த கண்ணன் அவன் முன்னால் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்.

''தணிகாசலம்! ரங்கராஜன் உன்னைச் செல்லப்பிள்ளையாக வைத்துக் கொண்டிருக்கிறாரே, சும்மாவா வைத்துக் கொண்டிருக்கிறார்? உன்னுடைய வேலையை அவரே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறாரே, சும்மாவா செய்கிறார்? உனக்குக் காப்பியும் பலகாரமும் சும்மாவா வாங்கிக் கொடுக்கிறார்? இரண்டு மாசமாய் நீ இங்கே வந்து என்ன வேலையைத் தெரிந்து கொண்டிருக்கிறாய்?''

தணிகாசலம் கண்ணனைத் திரும்பிப் பார்த்தான். வெடிகுண்டில் நெருப்பை வைத்தார் அந்த மனிதர்.

''இன்றைக்கு அவர் வந்திருந்தால் இந்த இருபது ரூபாயும் காதும் காதும் வைத்த மாதிரி அவர் சட்டைப் பைக்குள் போயிருக்கும். உனக்குத் தெரியவே தெரியாது. மனிதர் வேலையைக் கற்றுக் கொடுக்காவிட்டாலும் போகட்டும். உனக்கு இங்கே நடந்து கொள்ளுகிற விதத்தையாவது சொல்லிக் கொடுத்திருக்கக் கூடாதோ? வாங்குகிறவர்களும் இருப்பார்கள்; வாங்காதவர்களும் இருப்பார்கள். இதைப் போய் இப்படித் தம்பட்டம் அடிக்கலாமோ?''

ரங்கராஜனைப் பற்றிக் கண்ணன் கூறியதை அவனால் நம்பவே முடியவில்லை. 'இந்த உலகத்துக்குத் தகுதியில்லாத பையனாக நான் பிறந்து விட்டேனா? எது உண்மை?'

போராட்டம் தீரவில்லை. அதற்குள் அவனை அதிகாரி அழைப்பதாகச் சேவகன் வந்து அழைத்தான். அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு தணிகாசலம் எழுந்து போனான்.

தணிகாசலத்தை ஏறிட்டுப் பார்த்தவுடன் நாகநாதனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. முன்புறத் தலையில் வழுக்கை விழுந்த இடத்தின் வேர்வைத் துளிகளைத் துடைத்து விட்டுக் கொண்டார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு, ''நீ இங்கே எவ்வளவு நாட்களாய் வேலை பார்க்கிறாய்?'' என்று கேட்டார்.

''இரண்டு மாதம்.''

''நீ இங்கே வேலை செய்ய வந்தாயா? விளையாட வந்தாயா? இதுவரையில் நீ எழுதிய எந்தக் கட்டும் என்னிடம் வரவில்லையே? இரண்டு நாட்களாய்த்தான் என்னமோ கிறுக்கி வைத்திருக்கிறாய்.''

''ரங்கராஜனை கவனித்துக் கொண்டார்'' என்று மென்று விழுங்கினான் தணிகாசலம்.

''அவர் வேலை செய்ய உனக்குத் தண்டச் சம்பளமா?'' என்று அவனை மடக்கினார். ''நீ வேலை செய்ய லாயக்கில்லை என்று மேலே எழுதி விடட்டுமா? இந்த லட்சணத்தில் பெரிய யோக்கியனைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு என்னிடமே வந்து விட்டாய். உனக்கு அந்தப் 'பேப்பரை'ப் பார்த்துச் சொல்லத் தெரிந்திருந்தால் என்னிடம் இப்படி வந்திருப்பாயா? ரகசியமாய்க் காரி

யத்தை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போயிருக்க மாட்டாய்?''

தணிகாசலத்தின் கண்கள் கரகர வென்று நீரைக் கொட்டின. பேசுவதற்கு வாய் வரவில்லை.

''இந்தா! நீ எழுதிய குப்பையைக் கிழித்து தெருப்பில் போடு. இங்கே நாங்கள் பள்ளிக்கூடம் வைத்து வேலை சொல்லித் தரமுடியாது. பெரிய இடத்துச் சிபாரிசு என்றால் அங்கேயே நீ வேலை பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் நான் பயந்தவன் இல்லை.''

அவன் எழுதிய காகிதங்களைக் கிழித்து அவன் முகத்தில் வீசினார். அவைகள் முகத்தில்பட்டுக் கீழே பறந்தன. ''போ! ஒழுங்காக நடந்து கொள்ளா விட்டால் சீட்டைக் கிழித்து விடுவேன்.''

ஒழுங்கு என்ற சொல்லுக்குப் பொருள் தெரிந்து கொள்ள முடியாமல் வெளியில் வந்தான் தணிகாசலம். அவன் படித்த அத்தனை புத்தகங்களிலும் ஒழுங்கு என்ற சொல்லுக்கு நல்ல விதமாகத்தான் பொருள் இருந்தது. ஆனால் வாழ்க்கையில் அதற்கு எதிரிடையான பொருள் இருக்கும் போலிருக்கிறதே! ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதா? படித்த நூலின் அறிவுரையின்படி வாழ்க்கையில் நடக்கக் கூடாதா?

மாலையில் அலுவலகம் முடிந்து எல்லோரும் வீடுகளுக்குக் கிளம்பினார்கள். தணிகாசலம் நேரே ரங்கராஜனின் வீட்டுக்குச் சென்றான். அவரிடம் நடந்தவற்றைச் சொல்லி, கண்ணனின் பேச்சு உண்மைதானா என்று கேட்க நினைத்தான். மனத்துக்குத் தோன்றியதை மறைக்கத் தெரியாத வயது. நாகநாதனைப்போல் அவரும் நான்கு வார்த்தைகள் திட்டி யனுப்பினால் வாங்கிக் கொள்வது என்று முடிவு செய்தான். உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் எதையாவது இழந்துதானாக வேண்டும்.

ஊரிலிருந்து அவர் இன்னும் வரவில்லை. மறுநாள் காலையில் அவர் வருவதாகச் சொன்னார்கள்.

விடுதிக்குச் சென்று முகம் கைகால் கழுவி விட்டு மேலே தன் அறைக்குப் போனான். கீழே சாப்பிடும் இடம்; மேல் மாடியில் நான்கைந்து அறைகள்; மற்ற அறைகளில் மாணவர்களும் அவனைப் போன்ற தனி மனிதர்களும் குடியிருந்தார்கள். பெட்டிக்குள்ளிருந்த குறிப்பு நோட்டை வெளியில் எடுத்து அன்று அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்துக் கொண்டான். நோட்டுக்குள் நடப்புக்கள் அடங்கியவுடன் அவன் மனத்திலும் சிறிது அமைதி பிறந்தது.

''உங்களுக்குத் தபால் வந்திருந்தது'' என்று கூறி, ஒரு பத்திரிகையும் நீண்ட உறையையும் கொடுத்துவிட்டுச் சென்றான் விடுதிப் பையன்.

பத்திரிகை, கடிதம் இரண்டுமே புதுப் பட்டி முகவரிக்குச் சென்று விட்டுத் திரும்பி யிருந்தன. 'மலர்க்கொத்தை'ப் பிரித்தவுடன் கையிலிருந்த கடிதம் தன்னால் நழுவிக் கீழே விழுந்தது. அதில் அவனுடைய கதை வெளியாகியிருந்தது! தணிகாசலம் வானத்தில் மிதந்தான். மேகத்தில் பறந்தான்.

புதுப்பட்டித் தாமரைக் குளம், கோயில் கோபுரம், செங்கமலம், அவளுடைய நடனம், பாம்புக்குப் பயந்தோடும் பையன்-இப்படி அதில் பலவிதமான படங்களுடன் அவன் கதை வெளியாகி யிருந்தது. சித்திரக்காரர் நேரில் புதுப்பட்டிக்கு வந்து பார்த்தவர்போல் படங்களை வரைந்திருந்தார்.

தான் எழுதிய முதல் கதையை நான்கு முறை படித்து முடித்தான் தணிகாசலம். பிறகு அவனுக்குச் செங்கமலத்தின் நினைவு வந்தது. அவளை இந்த இரண்டு மாதங்களாகக் கண்ணபுரம் முழுவதிலும் சல்லடை போட்டு அரித்து விட்டான். எங்குமே காணவில்லை. அவளாக இருக்குமோ என்று நினைத்து, வேறு பெண்களைத் திரும்பிப் பார்க்கப் போய், அவர்கள் முகங்களைத் திருப்பிக் கொண்ட காட்சிகளும் அவனுடைய நினைவுக்கு வந்தன. அப்படித் திருப்பிக் கொண்ட பெண்களில் யாருமே செங்கமலத்தைப் போல் அத்தனை அழகாக இல்லை!

அவள் இந்தக் கதையைப் படித்துப் டார்ப்பாள் அல்லவா?

கீழே விழுந்த கடிதத்தை எடுத்து உறையைக் கிழித்தான். நான்கு ஐந்து பக்கங்களுள்ள பெரிய கடிதம். எழுத்துக்கள் மணிமணியாக இருந்தன. கையெழுத்தைக் கவனித்தான். அவனால் நம்ப முடியவில்லை. நம்பவே முடியவில்லை. ''தங்கள் அன்புள்ள, செங்கமலம்'' என்று அவள் கையெழுத்துப் போட்டிருந்தாள்.

செங்கமலமா கடிதம் எழுதி யிருக்கிறாள்! என்ன எழுதி யிருக்கிறாள்? மன்னிப்பு கேட்டிருக்கிறாளா? வருவதாக எழுதி யிருக்கிறாளா? அல்லது தன்னை வரச் சொல்லி எழுதியிருக்கிறாளா? இவ்வளவு பெரிய கடிதம் எழுதி யிருக்கிறாளே! கடிதத்தில் கதையைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறாளா? என்னதான் அவள் எழுதியிருக்கிறாள்?

கடிதத்தின் எழுத்துக்களை விழுங்கத் தொடங்கினான் தணிகாசலம். பக்கங்கள் புரண்டன.

(தொடரும்)


இந்தியாவில் முதல்...
பிரபாத்
ஸ்டவ்கள் - ஊது விளக்குகள்
- லாந்தர்கள் - மான்டில்கள்
ஆறுவும் சிறந்தது!

சொற்பொழிவு விவாகம்

செல்வரங்கம் பிள்ளையின் ஒரே மகள் செங்கமலம். குளத்தில் உதித்த செங்கமல மலர் போல் அழகாக வளர்ந்திருந்தாள். அழகாயிருந்ததோடு புத்திசாலியாயும் இருந்தாள். செல்வரங்கம் பிள்ளை தம் மகளிடம் உயிரையே வைத்திருந்தார்.

செங்கமலம் பள்ளிக்கூடம் சென்ருள். பள்ளிக்கூடத்தில் அவள் மிகவும் சிரத்தையோடு படித்து வந்தாள்.

செங்கமலத்தின் தாயார் சௌந்தரம்மாளுக்கு மகளின் அறிவு வளர்ச்சியையும், அழகு வளர்ச்சியையும் காணச் சந்தோஷமாயிருந்தாலும், கூடவே கவலையும் பிடித்துக் கொண்டது. இவளுக்கு ஏற்ற ஒரு மணாளனைத் தேடிப் பிடித்து அவனிடம் இவளை ஒப்புவிக்க வேண்டுமே! திருவரங்கப் பெருமாளே! நீதான் அருள் புரிய வேண்டும் என்று அடிக்கடி மனத்துக்குள் பிரார்த்தனை செய்து கொள்ளுவாள்.

சௌந்தரம்மாள் பழங்கால மோஸ்தரில் வளர்ந்தவள். பெருமாளுக்கு நிவேதனம் செய்யாமல் சாப்பிட மாட்டாள். திருப்பதி சீனிவாசப் பெருமாளுக்கு விசேஷ தினங்களில் காணிக்கைப் பணம் மஞ்சள் துணியில் முடி போட்டு வைப்பாள்.

செல்வரங்கம் இதற்கு நேர்மாருன இயல்புடையவர். அடிக்கடி சுயமரியாதைக் கொள்கையினரின் ஆவேசப் பிரசங்கங்களைக் கேட்டு, அவருடைய



உள்ளம் அந்தத் துறையில் பண்பட்டது. ஆனால் மனைவியின் பழங்காலப் போக்கைக் கண்டிக்கும் அளவுக்குச் செல்லவில்லை. வாழ்க்கை அமைதியாகவே நடந்தது.

செங்கமலத்துக்கு விவாக வயது வந்தது. கோயமுத்தூரில் உள்ள ஒரு கம்பெனியில் உத்தியோகம் செய்துவந்த ஒரு யுவனுக்கு, செங்கமலத்தை மணம் செய்து வைக்கத் தகப்பனார் தீர்மானித்தார். பையன் ஒருமுறை சென்னைக்கு வந்து செங்கமலத்தைப் பார்த்துவிட்டுப் போனான். அவனுக்குச் செங்கமலத்தை மணந்து கொள்ளப் பூரண சம்மதம்; செங்கமலத்துக்கும் அந்தப் பையனைப் பிடித்து விட்டது.

தன் கணவர் இந்தமட்டும் பொறுப்போடு மகளுக்கு மணமகனைத் தேடிப் பிடித்து விட்டாரே என்று எண்ணி, சௌந்தரம்மாள் ஆனந்த மடைந்தாள்.

கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் சௌந்தரம்மாள் மிகவும் அக்கறையாகக் கவனிக்கலானாள்.

முகூர்த்தத்துக்கு இன்னும் சில தினங்களே இருந்தன. ஆயினும் செல்வரங்கம் பிள்ளை தம் மகள் திருமண விஷயமாகக் கவனமே இல்லாமல் இருப்பதைப் பார்த்துச் சௌந்தரம்மாள் வியப்பும் வியாகூலமும் கொண்டாள்.

"செங்கமலத்தின் திருமணத்துக்கு நாள் நெருங்கி விட்டதே. நீங்கள் இன்னும் ஒரு ஏற்பாடும் செய்யவில்லையே?" என்று மிகவும் கவலையோடு கேட்டாள்.

"நீ என்ன ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறாய்?" என்று கேட்டார் செல்வரங்கம்.

மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. கல்யாணத்துக்கு என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா? கல்யாண அழைப்பு அச்சடித்து அனுப்ப வேண்டாமா? நாதசுரம், பந்தல், சமையல்காரன் எல்லாம் முன் ஏற்பாடாகத் தீர்மானித்து முன்பணம் கொடுத்துவிட வேண்டாமா? முகூர்த்தத்துக்குச் சத்திரம் எங்கே பார்த்திருக்கிறீர்கள்? நீங்கள் மௌனமாயிருப்பதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!" என்றாள்.

இதைக் கேட்ட செல்வரங்கம் பிள்ளை, இலேசாகச் சிரித்துக் கொண்டே, "சௌந்தரம்! நீ ஒரு சுத்தக் கர்நாடகம். இந்த நாள் கல்யாணங்களில் யார் அதெல்லாம் செய்கிறார்கள்? கல்யாணம் என்பது மணமகனும் மணமகளும் சேர்ந்து வாழப் போகும் வாழ்க்கைக்குத் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒரு ஒப்பந்தம்தானே! அதற்காக ஊரைக் கூட்டி, புரோகிதரை அழைத்து, அர்த்தமற்ற சடங்குகளையெல்லாம் செய்வதால் வீண்செலவுதானே ஏற்படும்?" என்றார்.

அதைக் கேட்டுச் சௌந்தரம்மாளின் முகம் களையிழந்து விட்டது.

"...இந்த ஏற்பாட்டுக்கு அவர்கள் சம்மதிக்க வேண்டுமே...!" என்றாள் மிகவும் கவலையுடன்.



ஸோமாஸ்


"யாரைச் சொல்லுகிறாய்? பிள்ளை வீட்டுக்காரர்களைத்தானே? அசடே! அவர்கள் என் கொள்கைக்கு ஒத்து வரக் கூடியவர்கள். அப்படிக் கிடைக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் செங்கமலத்துக்கு வரன்தேடினேன். எளிய முறையில், அநாவசியச் செலவு எதுவும் இல்லாமல் கல்யாணத்தைச் சிக்கனமாக முடிப்பதுதான் சீர்திருத்த மணத்தின் நோக்கம்!" என்று செல்வரங்கம்பிள்ளை உற்சாகமாகச் சொன்னார். சௌந்தரம் மிக நிதானமான குரலில் சொன்னாள்: "நம்ம குடும்பத்தில் இதுவரையில் இல்லாத வழக்கமாயிருக்கிறதே...!"

"...அதனால் என்ன? வீணாக நாம் பழைய காலத்துப் பழக்க வழக்கங்களில் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளுகிறோம். அவ்வளவுதான். கொஞ்சம் துணிந்து காரியங்களைச் செய்தோமானால் எல்லாம் சரியாகிவிடும்" என்றார் செல்வரங்கம்.

"திருப்பதி சுவாமி முன்னிலையில் தாலி கட்டலாமே?" என்றாள்.

"ஒரு சுவாமியும் வேண்டாம். ஒரு சடங்கும் வேண்டாம்" என்றார் கணவர்.

"தெய்வமே கதி! ரங்கநாயகி தேவிதான் குழந்தையை நல்லபடியாக வாழ வைக்கவேண்டும்!" என்று கண்களில் நீர் ததும்ப, குரல் தழுதழுக்கக் கூறிவிட்டுத் தன் காரியங்களைப் பார்க்கப் போய் விட்டாள் சௌந்தரம்.



சௌந்தரம்மாளுக்குக் கணவரை எதிர்த்துப் பேசி வழக்கமில்லை. கணவருடைய முடிவான பதில் அவள் மனத்தைக் குழப்பிற்று. ஆயினும் அவள் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

* * *

செங்கமலத்துக்கு விவாகம் சீர்திருத்த முறையில் மகிழ்மன்னர் சொற்பொழிவாற்றி நடந்து விட்டது. அவள் புக்ககம் போய் விட்டாள்.

செங்கமலம் கோயமுத்தூரில் கொஞ்ச நாட்கள் மிகவும் சந்தோஷமாகவே இருந்தாள். ஆனால் வரவர என்ன காரணமோ, கணவன் அவளை அருவருப்பாகப் பார்க்க ஆரம்பித்தான். ஒரு நாள் "செங்கமலம்! உன் தகப்பனாரைக் கேட்டு இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொடு. அவசரம்!" என்றான்.

செங்கமலம் ஒன்றும் தோன்றாமல் திகைத்தாள். தன் தகப்பனாரால் திடீரென்று அத்தனை பெரிய தொகைக்கு ஏற்பாடு செய்வது இயலாத காரியம் என்று வாதாடிப் பார்த்தாள். ஒன்றும் பயன் படவில்லை. கணவன் மூர்க்கத்தனமாகப் பணத்திலேயே குறியாயிருந்தான். மாமனார், மாமியாருங்கூட அவனை ஆதரித்தேபேசினார்கள். "வந்தால் பணத்துடன் வா. இல்லாவிட்டால் பிறந்த வீட்டிலேயே இரு" என்று செங்கமலத்தைச் சென்னைக்கு அனுப்பி விட்டார்கள்.

* * *

திடீரென்று செங்கமலத்தைக் கண்டதும் அவள் பெற்றோர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"ஒரு கடிதம் எழுதிப் போடக் கூடாதா? நான் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே!" என்று தகப்பனார் கேட்க, செங்கமலம் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு விசிப்பதைக் கண்டதும் அவரைத் தூக்கி வாரிப் போட்டது.

"செங்கமலம்! ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?" என்று பதறினார் செல்வரங்கம்.

சௌந்தரம் மகளைக் கட்டிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் செங்கமலம் தன்னைத் தேற்றிக் கொண்டு, அங்கு நடந்த விஷயத்தைச் சொன்னாள்.

இதைக் கேட்ட செல்வரங்கத்தின் மன வேதனையைச் சொல்லி முடியாது.

சௌந்தரம்மாள் பித்துப் பிடித்தவள் மாதிரி ஆகிவிட்டாள். சதா திருவரங்கப் பெருமாளைத் தியானிக்கலானாள். சென்னையில் ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக வேலை பார்த்து வருபவர் திடீரென்று இரண்டாயிரம் ரூபாய்க்கு எங்கே போவார்?

செல்வரங்கம் பிள்ளை உடனே கோயமுத்தூருக்குப் புறப்பட்டுப் போனார். மாப்பிள்ளையையும் அவன் பெற்றோர்களையும் கண்டு சீர்திருத்தக் கல்யாணத்தின் சிறப்பை விளக்கி, இவ்வாறு பணம் கேட்பது அந்தக் கொள்கையையே அழிப்பதாகும் என்று பலவிதத்திலும் சொல்லிப் பார்த்தார். அவர்கள் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவர்களுக்குப் பணம் வேண்டியதாக


பாண்ட்ஸ் டால்கம் பவுடர்
உபயோகிக்கும் பெண்மணி
நாள் முழுவதும்
அவன் மனக்
கண்முன்
நிற்கிறாள்!
என்ன மென்மை! என்ன நறுமணம்! என்ன குளுமை! பாண்ட்ஸ் டால்கம் பவுடர் ஸ்நானத்திற்குப்பின் அது பலமாகும் புத்துணர்ச்சியை நாள் முழுவதும் நீடிக்கச் செய்கிறது.
POND'S
DREAMFLOWER TALC
DREAMFLOWER TALC
இலவச புஸ்தகம்
அழகு பற்றிய குறிப்புகள் கொண்ட Lovelier with Pond's என்ற எமது புத்தகத்தை வரவழையுங்கள் பி. ஓ. பாக்ஸ் நம்பர் 1612 டிபார்ட்மென்ட் வி. 28 டி., பம்பாய் 1 என்ற விலாசத்திற்கு எழுதவும்.
சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

இருந்தது. பிற விஷயங்கள் அவர்கள் மனத்தில் ஏறவில்லை.

* * *

செங்கமலம் பிறந்தகத்துக்கு வந்து ஐந்தாறு மாதங்கள் ஆகிவிட்டன. அவள் முகம் பொலிவு அழிந்து போயிற்று.

செல்வரங்கம் பிள்ளையின் சீர்திருத்த ஆவேசம் இப்பொழுது சற்று அடங்கித் தான் போய் விட்டது. இயந்திரம் மாதிரி தினசரி அலுவல்களை எப்படியோ கவனித்து வந்தார்.

இந்தச் சமயத்தில் அவருக்கு ஒரு நாள் ரிஜிஸ்தர் கடிதம் ஒன்று வந்தது.

"குற்றாலத்தில் சென்ற சித்திரை மாதம் ஆறும் தேதி திரு சோமசுந்தரனார் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றி வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் முடித்து விட்டபின் தாங்கள் தங்களுடைய பெண் செங்கமலத் தம்மையை ஊருக்கு அழைத்துப் போனீர். இதுவரை ஒரு காரணமுமின்றி அவளை என்னிடம் ஒப்புவிக்காமல் இருக்கிறீர். இந்த ஊரில் வேறு ஒருவருடன் நீங்கள் சதிசெய்வதாகத் தெரியவருகிறது. உங்கள் பெண்ணை அவருக்குக் கலியாணம் செய்து கொடுத்து விட்டதாகப் பொய் சொல்லி வருவதாகவும் தெரியவருகிறது. இதுவெல்லாம் சதி. ஜெயிலுக்குப் போய்ச் சேருவீர். ஜாக்கிரதை. இக்கடிதம் கண்ட ஒரு மாதத்துக்குள் என்னிடம் பெற்றுக் கொண்ட ஆயிரத்து ஐந்நூறு ரூபாயும் திருப்பிக்கொடுத்து விட்டு என் மனைவியையும் என்னிடம் ஒப்புவிப்பீராக. இதைப் பற்றிப் பெரியார் சோமசுந்தரனாரும்தங்களுக்குக்கடிதம்எழுதுவார்.

உங்கள் பணிவுள்ள மருமகன்,

வெற்றிவேலு."

கடிதத்தைச் சரியாய்க் கூடப் படிக்க முடியாமல் கண்ணீர் செல்வரங்கம் பிள்ளையின் கண்களை மறைத்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு சிரமப்பட்டு, துக்கத்தை அடக்கிக் கொண்டு செல்வரங்கம் அந்தக் கடிதத்தை மறுபடியும் கவனித்துப் படித்தார். அது அவர் மாப்பிள்ளை எழுதிய கடிதம இல்லை. வேறு யாரோ ஒரு போக்கிரி எழுதியிருந்தான். கோயமுத்தூரிலிருந்துதான் எழுதியிருந்தான். இது என்ன விபரீதம். இந்த மோசக்காரர்கள் என்னதான்செய்வார்களோ என்று மிகவும் பயந்தார்.

"முத்துசாமி அய்யர் சொன்னபடி விவாகத்தை ரிஜிஸ்தர் செய்திருக்க வேண்டியது. அவருடைய யோசனையைக் கேட்காதது தவறு" என்று தமக்குத் தாமே சொல்லி வருத்தப்பட்டார்.

பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

ஆபீஸ் குமாஸ்தாக்கள் நடத்தும் ஏலச் சீட்டில் செல்வரங்கம் சேர்ந்திருந்தார். நஷ்டத்தைப் பொருட் படுத்தாமல், பெருந் தொகையைத் தள்ளிச் சீட்டுப் பணத்தை எடுத்தார்; மனைவியின் நகைகளை விற்றுப் பணமாக்கினார்.

செங்கமலத்தை அழைத்துக் கொண்டு கோயமுத்தூருக்குப் போய், அவளையும் பணத்தையும் அவள் கணவனிடம் சேர்த்து விட்டு உடனே சென்னைக்குத் திரும்பினார். தமக்கு வந்த ரிஜிஸ்தர் கடிதத்தைப் பற்றி அவர் யாரிடமும் சொல்லவில்லை. சீர்திருத்தத்தில் செல்வரங்கம்பிள்ளைக்கு இப்பொழுது நம்பிக்கை போய் விட்டது.

கேரளத்தின் பாக்கியம்!

ஏழைகளுக்கு எழுத்தறிவித்தலே தருமங்களிலெல்லாம் தலை சிறந்தது என்று கூறினார் பாரதியார். இத்தகைய அறப் பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றார் திரு வி. ராமானுஜாச்சாரியார் அவர்கள். அவருடைய அருமைப் புதல்வர் திரு ராகவாச்சாரியார் அவர்கள் வைத்தியத் துறையிலே விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில மேதைகளில் ஒருவர்; சஸ்திர சிகிச்சை செய்வதிலே அசகாயசூரர் என்று புகழ் பெற்றவர்.



வைத்தியத் துறையில் முப்பத்தோரு ஆண்டுகள் அரும்பெரும் சேவைகள் செய்துள்ளார். ஸ்டான்லி வைத்தியக் கல்லூரியில் அவர் 'டீனா'க இருந்து ஒய்வு பெறுவதற்காக விடுமுறையில் செல்ல இருக்கையில், கேரள சர்க்கார் அவரது சேவையை விரும்பியிருக்கிறது. திருவனந்தபுரத்திலுள்ள ராஜ்ய வைத்தியக் கல்லூரி, ஆஸ்பத்திரியில் சஸ்திர சிகிச்சைப் பேராசிரியராகவும், சர்ஜனாகவும் திரு ராகவாச்சாரி அவர்களைக் கேரள சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். திரு ராகவாச்சாரியின் வைத்தியத் தொண்டின் மூலம் தமிழ் நாட்டின் சிறப்பு மேலும் உயரும் என்று எதிர்பார்க்கலாம்.

கலை கண்ட மலேயாவு

சிங்கபுரத்தின் சிறப்பு



டி. கே. சண்முகம் - புத்தனேரி சுப்பிரமணியம்

சிங்கப்பூர் நகரத்தின் சிங்காரக் காட்சி களைக் காலைக் கதிரொளியில் காணவேண்டு மென்ற ஆவல் எங்கள் உள்ளத்தில் எழுந்தது. நாடகத்திற்கு வேண்டிய ஹாலிவுட் ஒப்பனைப் பொருள்கள் சில வாங்க வேண்டுமென்று திரு பகவதி விரும்பியது எங்கள் ஆவலுக்கு மேலும் துணையாக நின்றது.

ஒருநாள் காலை எட்டு மணிக்கு நண்பர் ஒருவரின் காடியில் புறப்பட்டோம். இந்த இடத்தில் அந்த நண்பரைப் பற்றி ஒரு சில வார்த்தைகளாவது கூறாமல் செல்வது தகாது.

தமிழ் நாடக விழாவுக்கென்றே பதினேரு பேர் செல்லக்கூடிய பெரிய 'வான்' ஒன்றைப் புதிதாக வாங்கி, அதில் 'டி.கே எஸ். நாடகக் குழு!' என்ற பெயரைத் தமிழிலும் ஆங்கிலத் திலும் துலாம்பரமாகப் பொறித்து, நாங்கள் தங்கியிருந்த வீட்டிலேயே நிறுத்தியிருந்தார் திரு ஒலிமுகமது. ஆயினும் விழாசம்பந்தமான முன்னேற்பாடுகளுக்கும், விளம்பரத்துக்கும் அந்தக் காரை முழுக்க முழுக்கப் பயன் படுத்திக் கொள்ள நேரிட்டதால் எங்கள் விருப்பம்போல் வெளியே செல்வதற்கு அந்தப் பெரிய கார் அவ்வளவாகப் பயன்பட வில்லை.

நாங்கள் கார் வேண்டுமென்று நினைத்த போதெல்லாம் தங்கு தடையின்றித் தாம தம் ஏதும் இன்றித் தமது காடியை அனுப்பி உதவிய நண்பர் திரு சி. ஆர். தசரதராஜ் அவர்களை மறக்க முடியவில்லை. சிங்கப்பூரி லேயே பிறந்து வளர்ந்த இந்தியர். சிறந்த தமிழ் உணர்ச்சி உடையவர்; இந்திய நுண் கலைக் கழகம், இந்து சபை முதலிய நிறுவனங் களின் பொறுப்பாளராகப் பணியாற்றுபவர்.

திரு தசரதராஜ் அவர்களின் காடியை எங்கள் சொந்தக் காரைப் போலவே பயன் படுத்திக் கொண்டோம் என்று சொல்வது மிகையாகாது. சில சமயங்களில் நல்ல கார் கிடைத்தாலும் அந்தக் காருக்கு ஏற்ற நல்ல சாரதி அமைவதில்லை என்பதைப் பலர் அநுபவ வாயிலாக உணர்ந்திருப்பார்கள். காருக்கு அமையும் சாரதி காரோட்டுவதில் மட்டும் சூரராக இருந்தால் போதாது! தமது பணியை நிறைவேற்றும் போது கடுகளவும் மனக் கசப்பில்லாதவராகவும் இருக்க வேண்டும். இந்த நற்பண்பு மிகவும் பொருந்தியவராக விளங்கினர் திரு தசரத ராஜ் அவர்களின் காரோட்டி.

அன்று காலையில் நாங்கள் வெளியே புறப் பட்டபோது வனப்பு வாய்ந்த மவுண்ட் பேட்டன் சாலை வழியாகக் காரை ஓட்டிச் சென்றார் சாரதி. எங்கள் விருப்பப்படியே கார் மெதுவாகச் சென்றது. வழியில் மெர்டேகா பாலத்தின் அமைப்பையும் அழகையும் ரசித்தோம். பாலத்தைக் கடந் ததும் 'எஸ்பிளனேட்' என்னும் அகல்வெளி கண்கவர் வனப்புடன் காட்சி யளித்தது. மிக நேர்த்தியாகப் பராமரிக்கப்படும் இந்த 'எஸ்பிளனேட்' பகுதி சிங்கப்பூர் நகரத்துக்கே ஒரு வரப்பிரசாதம் போன் றது. நீலக்கடலை ஒட்டினாற்போல் அமைந் துள்ள பரந்து விரிந்த தளம் போன்ற சாலை யும் அதனை அடுத்துப் பசுமையான புல் வெளியும் பூந்தோட்டங்களும், அவற்றோடு இணைந்து கம்பீரமாக நிற்கும் சுப்ரீம்கோர்ட், நகர மன்றம், யுத்தத்தில் மரணமடைந்த வீரர்களின் நினைவுச் சின்னம் முதலிய கட்ட டங்களும் கண்ணுக்கினிய காட்சிகளாகும். சற்றுத் தொலைவிலே விக்டோரியா நினைவு மண்டபத்தின் மணிக்கூண்டும், சைனு பாங்

அழகுத்திரளான சிங்கப்பூரின் 'எஸ்பிளனேட்' காட்சி. சைனு பாங்குக் கட்டடம், நகரமண்டப மணிக்கூண்டு, வீரர் நினைவுச் சின்னம், சுப்ரீம் கோர்ட் முதலியவற்றை மேலே காணலாம்.

இன் உயர் மாளிகையும் நகரத்தின் சிறந்த சின்னங்களாகத் திகழக் கண்டோம்.

அழகுத் திரளாக அமைந்துள்ள 'எஸ்பிளனேட்' கரையின் கவர்ச்சியில் மயங்கி அத னோடு மோதி முத்தமிட்டுக் கொண்டிருந்த கடல் அலைகளின் ஏக்கம் எங்கள் இதயத்தை உருக்குவதாக இருந்தது.

'எஸ்பிளனேட்' பகுதியைக் கடந்து விக்டோரியா நினைவு மண்டபத்துக்கு அருகில் கார் சென்றபோது மண்டபத்துக்கு முன்னால் ஒரு சிலையைக் கண்டோம். ''இதுதான் ராபின்ஸ் என்பவரின் சிலை'' என்று சுட்டிக் காட்டினார் சாரதி.

''அதுமட்டுமல்ல; நாம் இப்போது போய்ச் சேரவிருக்கும் மிகப் பெரிய கடைத்தெருவுக்குக்கூட 'ராபின்ஸ் பிளேஸ்' என்றுதான் பெயர்'' என்றும் சொல்லப்பட்டது.

ஆண்டர்ஸன் பாலத்தைத் தாண்டிச் சற்று நேரத்தில் ''ராபின்ஸ் பிளேஸ்' என்ற இடத்தை அடைந்தோம்.

நாலாபுறமும் மதில் போன்ற உயரமான மாளிகைக் கடைகளுடன் கூடிய சதுரப் பெருவீதியாக விளங்குவது 'ராபின்ஸ் பிளேஸ்'. அது சிங்கப்பூரின் மிகப் பெரிய வர்த்தகக் கேந்திரம் என்பதைப் புரிந்து கொண்டோம்.

'ராபின்ஸ்' சிலையையும் 'ராபின்ஸ்பிளேஸ்' என்ற பகுதியையும் பார்த்தபிறகு அவ்வளவு புகழ் பெற்ற ராபின்ஸ் யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஜோகூர் சுல்தானின் ஆட்சியில் வெறும் சதுப்பு நிலமாக இருந்த சிங்கப்பூர்த் தீவு உலகப் புகழ்பெற்ற துறைமுகமாக ஆவதற்குக் காரணமாக இருந்தவர் ஸ்டாம்போர்டு ராபின்ஸ். இவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஓடிக் கொண்டிருந்த 'ஆன்' என்ற கப்பலில் 1781-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தகப்பனாரே அந்தக் கப்பலின் மாலுமி. பதினாலாவது வயதில் ராபின்ஸ் கிழக்கிந்தியக் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். இலக்கியத்திலும், விஞ்ஞானத்திலும் மிகுந்த காதல் கொண்டார். பிரெஞ்சு, லத்தீன், ஜெர்மன், கிரேக்கம், ஹீப்ரு முதலான பல மொழிகளைக் கற்றுணர்ந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் பினாங்குக் கிளையில் இவர் குமாஸ்தாவாக இருந்தபோது, மலாய் மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றார். இவருடைய மலாய் மொழிபெயர்ப்புகளைப் பலரும் பாராட்டினர். மொழித்துறையில் இவருடைய அறிவாற்றலை மெச்சிக் கல்கத்தா பல்கலைக் கழகம் இவருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்தியது.

தமது சொந்த முயற்சியாலும் ஊக்கத்தாலும் படிப்படியாக முன்னேறினார் ராபின்ஸ். தமது திருமணத்திலேகூட இவர் முன்னேற்றம் கண்டாராம்! தம்மைவிடப் பத்து வயது அதிகமாகவுள்ள திருமதி ஒலிவியா பேன் கோர்ட் என்ற ஒரு விதவையைத் திருமணம் செய்து கொண்டார்.


ராபின்ஸின் அரசியல் அறிவும் ஆட்சித் திறமையும் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த மின்டோ பிரபுவைக் கவர்ந்தன. டச்சு ஆதிக்கத்தில் இருந்த ஜாவாவை முற்றுகையிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி மலாக்காவுக்கு அனுப்பப்பட்டார் ராபின்ஸ். ஜாவாவும் சரணாகதி யடைந்தது. அதற்கு லெப்டினன்ட் கவர்னராகவும் ராபின்ஸ் அமர்த்தப்பட்டார்.

நிலச் சீர்திருத்தம், நீதி நிர்வாகம் போன்ற ஆக்க வேலைகளினால் புகழ் பெற்ற ராபின்ஸ் அடிமை வியாபாரத்தை ஒழிப்பதிலும் வெற்றி கண்டார். மக்களுக்கு எல்லாவகையான சுதந்திரத்தையும் அளித்தார்.

இடைக்காலத்தில் ராபின்ஸ் ஓய்வுக்காக இங்கிலாந்து சென்றபோது ரீஜண்ட் பூங்காவில் விலங்கு நூல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றுக்கு அடிப்படை யிட்டார். இவருடைய விஞ்ஞான அறிவின் சின்னமாக இன்றும் இலங்குகிறது அந்த நிலையம்.

பின்னர், சுமத்திராத் தீவின் மேற்குக் கரையில் உள்ள பென்கூலன் என்ற பகுதிக்கு கவர்னரானார். பென்கூலன் மிக மட்டமான இடமாகத் தோன்றியது. ஆங்கிலேயருக்கு நல்லதொரு வியாபாரக் கேந்திரம் வேண்டு

சிங்கப்பூர் முதலமைச்சர் திரு லிம் யூ ஹாக் நாடகத்தைத் தொடங்கி வைத்துப் பேசினர்.



மென்று தேடிக்கொண்டு புறப்பட்ட ராபின்ஸ் சிங்கப்பூர்த் தீவிலே 1819 ஜனவரி 29-ல் இறங்கினார். அதன் இயற்கை அமைப்பிலே இதயத்தைப் பறி கொடுத்தார்.

சிங்கப்பூர்த் தீவில் இருந்த தெமங்காங் என்ற பட்டப் பெயருடைய மலாய் கவர்னரிடமும், ஜொகூர் சுல்தானிடமும் 1819 பிப்ரவரி 6-ல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார் ராபின்ஸ். அதன்படி, தெமங்காங்குக்கு மூவாயிரம் வெள்ளியும், சுல்தானுக்கு ஐயாயிரம் வெள்ளியும் கொடுத்துச் சிங்கப்பூரில் ஒரு வர்த்தகக் கேந்திரத்தை ஏற்படுத்திக் கொண்டார். இப்போது நினைத்தால் வேடிக்கையாக இருக்கும்! மொத்தம் எண்ணாயிரம் வெள்ளிக்கு வர்த்தகக் கேந்திரமாக இடத்தைப் பிடித்துக்கொண்டு சுமார் ஐந்து ஆண்டுகளுக்குள் 1824 ஆகஸ்டு மாதத்தில், அந்தத் தீவு முழுவதையுமே சுல்தானிடமிருந்து எழுதி வாங்கி விட்டனராம் ஆங்கிலேயர்! இவ்வளவு தந்திரமாகவும் திறமையாகவும் சிங்கப்பூரில் ஆங்கிலேய ஆட்சியை நிலைநாட்டிய ராபின்ஸுக்கு ஒரு சிலை நாட்டியதுதானா பிரமாதம்?

'ராபின்ஸ்' காலத்துக்கு முந்திய சிங்கப்பூரின் பழைய வரலாற்றையும் சிறிது தெரிந்துகொள்வது நல்லது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தத் தீவுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது.

சிங்கப்பூர் என்ற பெயரே மலாய் வார்த்தையல்ல; சிங்கம்-புரம் என்ற இரு தமிழ்ச் சொற்களின் இணைப்பே சிங்கப்பூராக மருவியுள்ளது என்பது தெளிவு. இத் தீவுக்குச் 'சிங்கபுரம்' என்று பெயரிட்டவன் சோழர் பரம்பரையைச் சேர்ந்த நீல உத்தமன் என்னும் மன்னன் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

நீல உத்தமன் கி. பி. 1160-ல் ரியோ என்னும் தீவை ஆண்டு வந்தான் என்றும் அவன் ஒருநாள் மரக்கலத்தில் சிங்கப்பூர்த் தீவில் வந்து இறங்கினான் என்றும், இறங்கிய சமயம் தீவிலே சிங்கத்தைப் போன்ற விலங்கு ஒன்றைக் கண்டான் என்றும், அதன் காரணமாகவே தான் கண்ட தீவுக்குச் சிங்கபுரம் என்று பெயரிட்டான் என்றும் மலேயாவின் கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது.

மலாய்க்காரர்கள் இந்தத் தீவை 'துமாஸிக்' என்றே அழைத்தார்கள். 'துமாஸிக்' என்றால் கடல் நகர் என்று பொருளாம்.

பதின்மூன்றாவது நூற்றாண்டில் சிங்கப்பூர் புத்த மதம் தழுவிய மலாய்க்காரர்களின் அரசாங்கத் தலைநகராக விளங்கியது. இந்த அரசை கி. பி. 1377-ல் 'மஜாபஹித்' என்னும் இந்து அரசினர் கவிழ்த்து விட்டனர். இவர்கள் ஜாவாவை அரசாண்டு வந்தனர். மஜாபஹித்தர்களின் படையெடுப்பினால் சிங்கப்பூரில் ரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது என்றும், அதனால்தான் சிங்கப்பூர்ச் சமவெளி இன்னும் ரத்த நிறமாகக் காட்சி தருகிறது என்றும், ஜாவா அரசினர் கொடுத்த சாபத்தினால்தான் சிங்கப்பூர் மண்ணில் நெற்பயிர் தலையெடுக்கவில்லை என்றும் மலாய்க்காரர்கள் இப்போதுகூட நம்புகின்றனராம்!

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிலே தான் மலாய்க்காரர்கள் முகமதிய மதத்தைப் பின்பற்றலாயினர் என்றும் தெரிகிறது.

ராபின்ஸ் பிளேஸில் உள்ள கடைகளைப் பார்த்த எங்களுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. நகரத்தில் உள்ள கடைகளை வெறுமனே பார்ப்பதற்கு ஒரு தடவையும், வேண்டிய பொருள்களைத் தேடி வாங்குவதற்கு, மற்றும் பல தடவைகளும் போக வேண்டும் என்பதுதான் அந்த உண்மை.

எனவே, எங்கள் முதல் நகர் வலத்தின் போது எந்தப் பொருளையும் வாங்காமலே திரும்பினோம். திரும்பி வரும் வழியில் பாட்மின்டன் ஸ்டேடியத்துக்குச் சென்று நாடக மேடை அமைப்பைக் கண்காணித்தோம்.

சிங்கப்பூரிலே அதுவரை யாரும் கண்டிராத முறையில் அமைந்திருந்தது, மேடை.

நாடகத்துக்கான ஒலிபெருக்கி ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே அசோஸியேடட் ரேடியோ ஏஜன்ஸீஸ் என்ற நிறுவனத்தாரின் பிரதிநிதிகளைச் சென்னையிலிருந்தே அழைத்துக் கொண்டு போயிருந்தோம். அரங்கின் தரம் அறிந்து ஒலிபெருக்கி அமைப்பதிலே வல்லுநர்களான இவர்களே சிங்கப்பூர் அரங்கத்திலே திணற வேண்டியதாயிற்று!

ஏனெனில் பாட்மின்டன் மண்டபத்தில் எதிரொலி மிகுதியாக இருந்தது. இந்தக் குறையைத் தவிர்ப்பதற்கு எத்தனையோ வகையான முன்னேற்பாடுகளையெல்லாம் செய்து பார்த்தனர், ஒலிபெருக்கி அமைப்பாளர்கள். ஆயினும் எதிர்பார்த்த பயன் கிட்டவில்லை.

ஏப்ரல் இருபத்தைந்தாம் தேதி 'இராஜராஜ சோழன்' நாடகத்தைச் சிங்கப்பூர் முதலமைச்சர் திரு லிம் யூ ஹாக் தொடங்கி வைத்தார். 'தமிழ் முரசு' ஆசிரியர் திரு கோ. சாரங்கபாணி தலைமை வகித்தார்.

சிங்கப்பூர் முதலமைச்சருக்கு நமது தென்னாட்டுக் கலையின் மீதுள்ள மதிப்பை உணர்த்தும் ஒரு சிறப்பு அம்சத்தை நாடக ஆரம்ப விழாவின் போது கண்டோம். திறப்புரையாற்றிய முதலமைச்சர் நாடகம் முடியும் வரை அமர்ந்திருந்து ஒவ்வொரு காட்சியையும் ரசித்த சிறப்பைத்தான் குறிப்பிடுகிறோம்.

நமது இந்தியப் பெருநகரான பம்பாயிலே தமிழ் நாடக விழாக்களைத் தொடங்கி வைக்க எழுந்தருளிய பிரமுகர்கள் வாய் இனிக்கப் பேசிவிட்டு நாடகத்தின் முதல் திரை உயர்த்தப்படுவதற்கு முன்பாகவே அரங்கை விட்டுச் சென்ற காட்சிகள் மனத்திரையிலே பளிச்சென்று தெரிந்தன. நமது சொந்த நாட்டுப் பிரமுகர்களிடம்கூடக் காண முடியாத கலையுணர்ச்சியை அயல் நாட்டார் என்று கருதக்கூடிய சிங்கப்பூர் முதல் அமைச்சரிடம் கண்டு வியந்து களிப்புற்றோம்.

அரங்கிலே ஆயிரக் கணக்கில் கூடியிருந்த ரசிகப் பெருமக்களின் கலையார்வத்துக்கும் தலைவணங்க வேண்டும். எதிரொலி காரணமாக நாடகத்தின் சுவை குன்றுமோ, ரசிகர்கள் பொறுமை இழந்து கூக்குரல் எழுப்புவார்களோ என்றெல்லாம் உண்மையில் எங்களுக்கு அச்சமாகத்தான் இருந்தது. ஆனால் கண்ணை மூடித் திறப்பதற்குள் காட்சி மாறும் விந்தைகளையும், பன்னிற ஆடையணிகளின் பளபளப்பையும், அன்பைக் கவர்ந்த நடிகர்களையும் கண்டு ஒவ்வொரு ரசிகரும் பிரமித்து நாடகத்தைச் சுவைத்தனர். (தொடரும்)

சுத்தமான முழு நறுமணமுள்ள காப்பி

நீங்கள் இலகுவாக வாங்கக் கூடிய விலையில்!





ஸ்டேன்ஸ் சிகப்பு லேபிள் சுத்த
மான காப்பி உங்களுக்கேற்ற சிறந்த நறு
மணமுள்ள பலமான பானத்தை அளிப்பதோடு,
அதிக டம்ளர்கள் காப்பியையும் அளிக்கிறது. நீங்கள்
காப்பி வாங்கும்பொழுது, ஸ்டேன்ஸ் என்ற பெயரைப்
பார்த்து வாங்குங்கள். இது உங்களுக்கு உயர்ந்த
ரகத்திற்கு உத்திரவாதம்.
ஸ்டேன்ஸ் சிகப்பு லேபிள் சுத்தமான காப்பி காற்று
புகாத ½, 1, 3, 7, 14, 20 பவுண்டு டின்களில்
புத்தம் புதியதாக பாக் செய்யப்பட்டு
உங்களுக்குக் கிடைக்கின்றன

எல்லோரும்
வாங்கக் கூடிய
நல்ல காப்பி!

STC 4058

தி யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட்,
கோயம்புத்தூர், தென் இந்தியா

வேலூருக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மிஸ்டர் ஜி. எஸ். அனந்தராமன் – 30, கமிஸரி பஜார், வேலூர்

காக்கிநாடாவுக்கு ஏஜன்டு:
கர்ணம் ஹனுமந்த ராவ் – ஈஸ்வர் நிவாஸ், திருமலை ராவ் தெரு, காந்தி நகர், காக்கிநாடா

மாதர்குல திலகங்கள்

ஸ்ரீமதி ராஜகுமாரி அம்ருதகௌரி



சமீபத்தில் சென்னையில் உள்ள கான்ஸர் வைத்தியசாலையில் ஸ்ரீமதி அம்ருதகௌரியினுடைய படத்தை டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் திறந்து வைத்தார். அப்போது டாக்டர் முதலியார் ஸ்ரீமதி அம்ருதகௌரி அவர்களுடைய திறமையை வெகுவாகப் பாராட்டினார். ஸ்ரீமதி அம்ருதகௌரியின் தலைமையில் பாரத நாட்டிலிருந்து உலக சுகாதார சங்கத்துக்கும் உலக கல்வி ஸ்தாபனத்துக்கும் சென்ற தூதுகோஷ்டிகள் உலக அரங்கிலே பெரும்புகழ் தேடினாட்டியிருப்பதாகக் கூறினார். அதற்கு முக்கிய காரணம் ஸ்ரீமதி ராஜகுமாரி அம்ருதகௌரியின் திறமை என்று சொன்னார்.

பிரான்ஸ் தேசத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் ஸ்ரீமதி ராஜகுமாரி அம்ருதகௌரி பிரஞ்சு மொழியில் பேசினார். மற்றொரு சமயம் இத்தாலி நாட்டில் ஒரு மகாநாடு நடைபெற்றது. இத்தாலி மொழியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்ரீமதி ராஜகுமாரி இத்தாலி மொழியில் எங்கே பேசப் போகிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, இத்தாலி மொழியில் பேசி சபையோரை ஆச்சரியக் கடலில் ஆழ்த்தி விட்டாராம்!

இப்படிப்பட்ட இந்த ராஜகுமாரி அம்ருதகௌரி யார்?

இவர் பஞ்சாப் ராஜ்யத்தைச் சேர்ந்தவர். அரச குடும்பத்தில் பிறந்தவர். கபூர்தலா சமஸ்தான ராஜா ஹர்நாம் சிங்கின் புதல்வியாவார். இவர் சிறு வயதிலே வீட்டில் நல்ல கல்வியறிவு பெற்றதோடு இங்கிலாந்துக்கும் சென்று படித்து விட்டு வந்தார்.

இப்படிச் செல்வம் கொழிக்கும் அரச குடும்பத்திலே பிறந்தாலும், எல்லா சுகங்களும் பெற்ற வாழ்க்கை நடத்தினாலும் அவருக்குத் தேச பக்தி பெருகெடுத்தது. அரச வாழ்வைத் துறந்து விட்டு ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்டார். காந்தி மகானை அடைந்து அவருடைய ஆசிரமத்தில் அவருடைய காலடியில் வாழ வந்து சேர்ந்தார்.

காந்தி மகானின் காரியதரிசியாகப் பதினாறு ஆண்டுகள் சேவை புரிந்திருக்கிறார். ஆசிரமத்தில் ராட்டையைச் சுற்றினார். கதராடையை அணிந்தார். அகில இந்திய சாக்கா சங்கத்தில் சேர்ந்து பணியாற்றினார்.

அரசியல் துறையிலும் ஈடுபட்டு, அகில இந்தியக் காங்கிரஸின் தலைமைப் பதவியையும் 1931-33, 38-ம் ஆண்டுகளில் வகித்திருக்கிறார். பன்முறை சிறை சென்றார். 1943ம் வருஷம் அவர் செய்த சிறைவாச வரலாறு, கல் மனம் படைத்தவரையும் உருகவிடும்! போலீஸ்காரர்கள், மாற்று உடை கூட எடுத்துக் கொள்ள அனுமதிக்காமல் கட்டிக் கொண்டிருந்த சேலையோடேயே சிறைக்கு அழைத்துச் சென்று துர்க்கந்தம் நிரம்பிய இடத்தில் அடைத்து வைத்திருந்தனர். மிக மோசமான ரொட்டியைக் கொடுத்துச் சாப்பிட விடாமல் செய்து வதைத்துள்ளனர். பல நாட்களில் சாப்பிட ஒன்றும் கொடுக்காமல் கூட இருந்திருக்கின்றனர். அதைப் பற்றி ஒருவரிடமும் குறைப்பட்டுக் கொள்ளாமல் பொறுமையோடிருந்திருக்கிறார்! இவற்றை யெல்லாம் பார்க்கும்போது, அவர் காந்தியின் உத்தமப் புதல்விதான் என்று தோன்றும்.

'தோன்றும்' என்று ஏன் முடிக்கிறேன் என்று கேட்கிறீர்களா? இப்பொழுது அவர் பேசும் முறையைக் கேட்கும்போது நமக்குச் சற்று அந்தமாதிரியான சந்தேகம் எழுகிறது.

பாரத தேசம் சுதந்திரம் பெற்றதிலிருந்து சமீபகாலம் வரை மத்திய சர்க்காரின் சுகாதார மந்திரியாக இருந்து வந்திருக்கிறார். இவர் மந்திரியாக இருந்தபோதுதான் பி. ஸி. ஜியை நாட்டில் கொண்டு வந்தார். ராஜாஜியும் மற்ற மேனாட்டு வைத்திய நிபுணர்களும் பலமாக எதிர்த்த பின்னரும் விடாப்பிடியாக பி. ஸி. ஜியை உபயோகிக்கத் திட்டமிட்டார். காந்தி மகானின் உண்மையான சிஷ்யையாக இருந்தால் ராஜாஜி ஏன் வேண்டாம் என்கிறார் என்பதைப் பொறுமையோடு படித்துப் புரிந்து கொள்ள முயன்றிருப்பார்!

மதுவிலக்கு விஷயத்திலும், அவருடைய அபிப்பிராயம் காந்தி பக்தர்களுக்கு வியப்பை அளிப்பதாக இருக்கிறது.

எனினும் பொதுவாகப் பார்க்கும்போது, தாய்த்திரு நாட்டுக்காகத் தமது சுகங்களைத் தியாகம் செய்தவர் ஸ்ரீமதி அம்ருதகௌரி என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது!



2



1

வீடுதோறும்

பரதநாட்டியக் கலைக்குப் பெருமை தேடித் தரும் சிறுமிகள் நாள் தோறும் வளர்ந்து வருகின்றனர்.

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கிலும் பரதநாட்டியம் பயிலும் சிறுமிகளில் சமீபத்தில் அரங்கேறிய சிலரை இந்தப் பக்கத்தில் காணலாம்.

1. ஸ்ரீமதி நீலாபாலசுப்பிரமணியம் மாணவிகள் குமாரி ராதா, குமாரி இந்திரா. இவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம், செப்டம்பர் மாதம் ஏழாம் தேதி சென்னை தியாகராய நகர் வாணி மகாலில் நடைபெற்றது. விழாவுக்குப் பேராசிரியர் சாம்பமூர்த்தி தலைமை தாங்கிச் சிறப்பித்தார். 2. பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவியும், திரு கே. என். ராமநாதன் அவர்களின் புதல்வியுமான குமாரி கீதாவின் அரங்கேற்றம் இந்திய நுண்கலைக் கழகம் ஆதரவில் சென்ற மாதம் சென்னையில் நடைபெற்றது. 3. டாக்டர் ஏ. தர்மராஜன் அவர்களின் புதல்வி குமாரி விஜயாவின் அரங்கேற்றம் சென்ற மூன்றும் தேதி திருச்சியில் நடை பெற்றது. சிறுமிக்கு நாட்டியம் பயிற்றுவித்த நடன ஆசிரியர் திரு சி. ராதாகிருஷ்ணன் அவர்களையும் குமாரி விஜயாவையும் திரு கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் பாராட்டினர்.



3





நாட்டியக் கலை

*** ***1 : ***

4. முத்தமிழ் மன்றத் தலைவர் டாக்டர் தியாகராஜன் அவர்களின் புதல்வி குமாரி மல்லிகாவின் பரதநாட்டியம் சென்ற மாதம் இருபத்தொன்பதாம் தேதி விழுப்புரம் தமிழ் விழாவில் நடைபெற்றது. 5. குமாரி டி. வி. நளினி யின் பரதநாட்டியம் சித்திரி உரத் தொழிற்சாலை 'கலா மண்டலி'யில் சிறப்பாக நடைபெற்றது. 6. ஸ்ரீ பரதகலா நிலையத்தின் தலைவி திருமதி எம். கே. செல்வமணியின் சிஷ்யைகள் குமாரி விமலா, பேபி கமலா இவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்ற மூன்றும் தேதி திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சபாவின் ஆதர வில் நடைபெற்றது. 7. செப்டம்பரில் ரூர்க்கி தென்னிந்தியக் கலாசாரக் கழ கத்தில் நடந்த மாலதியின் பரத நாட்டியம்.







சென்னை தியாகராய நகரில் உள்ள தருமபுரம் ஆதீன பிரசார நிலையத்தில் நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வரும் திருமுறை வகுப்பு ஆண்டு விழா சென்ற வாரம் விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவுக்குக் கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். சென்னை தருமபுர ஆதீன பிரசார நிலையத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்களையும், "விறந்த விற்ற கண்ணனவன்" என்ற பக்தி ததும்பும் நாடகத்தில் நடித்த மாணவ மாணவிகளையும் காணலாம்.

*** *** ***



கலைஞர் கலைவாணன் அவர்கள் இயற்றிய 'உதயம்' என்ற காப்பியத்தின் வெளியீட்டு விழா திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில் சென்ற மூன்றாம் தேதி ஸ்ரீரங்கம் உயர்நிலைப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் திருச்சி எழுத்தாளர் சங்கத் தலைவர் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.



திருச்சி வாகீசபக்தஜன சமரச சன்மார்க்க சங்கத்தார் தமிழ்ப் பேராசிரியர் திரு ஐயன் பெருமாள் கோனார் அவர்களின் தமிழ்த் தொண்டைப் பாராட்டி ஒரு விழா நடத்தினார்கள். விழாவில் திரு கோனார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, 'செம்பொருட்காட்சியர்' என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தனர். விழாவுக்குத் தலைமை தாங்கிய மதுரை ஆதீனத் தலைவர் சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திரு கோனார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்.

*** *** ***


சென்ற மாதம் 29-ந் தேதி விழுப்புரம் முத்தமிழ் மன்றத் தமிழ் விழாவில் விழாத் தலைவர் திரு ராமநாதன் செட்டியார் தலைமையுரை நிகழ்த்துவதையும், மன்றத் தலைவர் டாக்டர் தியாகராஜன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.





ஒரு ஸில்க் சட்டை மட்டுமே ஸில்க் சட்டையின் தனித் தோற்றத்தை அளிக்கும்

பின்னியின் ஸ்பன் ஸில்க் ஷர்ட்டிங்
—குறைந்த விலையில் உயர்தரம் வாய்ந்த துணி




ஒரு ஸில்க் சட்டை மட்டுமே விசேஷ சந்தர்ப்பங்களுக்கேற்ற கவர்ச்சிகரமான தோற்றத்தை உங்களுக்கு அளிக்கும். அது உங்கள் உடை அலங்காரத்தில் உங்களுக்குள்ள நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்!

அடுத்த தடவை பின்னியின் ஸில்க் ஷர்ட்டிங்கையே வாங்குங்கள். அது குறைந்த விலையில் அசல் ஸில்க்கின் கவர்ச்சியை அளிக்கும்.

தி பங்களூர் உல்லன்,
காட்டன் அண்ட் ஸில்க் மில்ஸ்
கோ. லிட்.

ஏஜெண்ட்ஸ், செக்ரட்டரீஸ்
அண்ட் டிரஷரேர்ஸ்:
பின்னி அண்ட் கோ. (மதராஸ்) லிட்.

பளு மிகுந்த இயக்க வேலைகளுக்கு



காஸ்ட்ரால் ஸி ஆர் உபயோகித்து

இந்த 6 வித முக்கிய அனுகூலங்களைப் பெறுங்கள்

நீடித்த உழைப்புக் காலம்

டீஸல் எண்ணெயின் எரிபொருள்களால் ஏற்படும் ஸிலிண்டர் தேய்மானத்தையும் ரிங் ஒட்டிக் கொள்வதையும் காஸ்ட்ரால் ஸிஆர் தடுக்கிறது. இதனால் இன்ஜின் நீண்ட காலத்திற்கு உழைக்கும்.

அதிகப்படியான திறமை

மிகக் கடுமையான உழைப்புச் சந்தர்ப்பங்களிலும் காஸ்ட்ரால் ஸிஆரில் உள்ள ஆக்ஸிடேஷன் தடுப்புகள் திப்பியும் வார்னிஷும் சேருவதைத் தடுத்துத் திறமையை அதிகரிக்கச் செய்கின்றன.

அதிக உஷ்ணநிலை உழைப்புக்கு அதிக பாதுகாப்பு

தற்கால டீஸல் இன்ஜின்களின் உழைப்பால் அதிக உஷ்ணம் ஏறுவதால் பிஸ்டன்களின் ரிங் பெல்ட் பகுதிகள் ஒட்டிக் கொள்ள ஏதுவாகிறது. காஸ்ட்ரால் ஸிஆரில் இருக்கும். இதுவரை கண்டு பிடிக்கப்படாத வன்மையான அடிடிவ்கள் நிலைமிக்க எரிபொருள் வஸ்துக்களை வெவ்வேறாகத் தங்கு இல்லாத முறையில் பிரித்து விடுகின்றன. இதனால் பாதுகாப்பு அதிகமாக ஏற்படுகிறது.

பாரமின்றி ஓடுவதிலுள்ள அபாயங்களைத் தவிர்க்கிறது

இலேசான சுமைகளுடன் அல்லது குறைந்த உஷ்ண நிலையில் இயங்குவதால் கரி ஏற்பட்டு எண்ணெய் எரியாமலும் இறுகிய சாறும் குழிக்குள் புகுந்து ரூப்ரிகண்டை கெடுத்து விட ஏதுவாகும். காஸ்ட்ரால் ஸிஆர் மற்றெந்த கன ரக சுத்திகரண எண்ணெயைக் காட்டிலும் சுலபமாகக் கரி முதலான அழுக்குகளைத் தனித் தனியாகப் பிரிக்கிறது.

அமில எரி பொருள்களைத் தடுக்கிறது

தற்காலத்தில் அதிக சல்பர் சேர்க்கை கொண்ட டீஸல் எண்ணெய்களால் ஏற்படும் அமிலமயமான பொருள்களை எதிர்த்துத் தடுப்பதற்கான முறையில் காஸ்ட்ரால் ஸிஆர் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விசேஷமான அம்சம் என்ஜினுக்குச் சிறந்த பாதுகாப்பு.

அதிக சிக்கனம்—குறைந்த பராமரிப்பு


காஸ்ட்ரால் ஸிஆர் மேலான பாதுகாப்பு அளிப்பதால் இன்ஜின்கள் புதியனபோல் சுத்தமாக இருக்கும். இதனால் பராமரிப்புச் செலவு குறைவு. பழுதுச் செலவு குறைவு. மேலும் மிகச் சிக்கனமான உழைப்புச் செலவு.

காஸ்ட்ரால்

எண்ணெய்களில் மிகச் சிறந்தது

ஸி. ஸி. வேக்பீல்ட் & கோ., லிட்.

இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது



பட்டுக் குடை

★●★

பட்டுக் குடையைப் பாரடா — இது
பார்க்க மிகவும் ஜோரடா!
தொட்டால் நெஞ்சு மகிழுது — நிழல்
சொகுசாய் அளித்து வருகுது!

ஓர மெங்கும் சரிகைபார் — அதில்
ஊஞ்சல் ஆடும் குஞ்சம்பார்!
சேர விரும்பாக் கந்தனும் — இதைத்
திரும்பிப் பார்க்கும் விந்தைபார்!

விரித்தால் அழகு ரோஜாதான் — பிடித்து
வீட்டில் உலாவும் ராஜாநான்!
திரித்துச் சுழற்றிப் பார்க்கலாம் — பெருமை
சிறக்க எதையும் நோக்கலாம்!

வண்ணப் பூக்கள் நிறைந்தது — நெகிழும்
வர்ணம் ரொம்பச் சிறந்தது!
எண்ணப் படியே வந்தது — மாமா
எனக்குப் பரிசாய்த் தந்தது!


★●★

திருச்சி வாசுதேவன்


சித்திரத் தொடர் கதை (4)
சோதிடப் புலி
அக்ஷயம்
1
குதிரையைக் காணுமா? தேட யாராவது ஆள் போயிருக்கிறதா?
எங்கே போய்த் தேடுவாங்க? யாரையாவது குறிகேட்டுக் குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்பினால் அல்லவா தேடலாம்.
2
அக்கா நான் போய் ஆலமரத்தடி குருவி சோதிடரைக் குறி கேட்டு வருகிறேனே!
ஓடிப் போய்க் கேட்டு வா, தம்பி!
ஏ லலிதா! இங்கே வா! இந்தக் காவடியைத் தூக்கிக் கொண்டு மலையேறி ஆண்டவன் சந்நிதிக்குப் போ! காவடியை வைச்சுக் கும்பிடம்மா!
4
இதோ பாரு! இந்த ஐயா ஏதோ கவலையாக வந்திருக்கிறாரு. ஆண்டவனை வேண்டிக் கிட்டு இவருக்குக் குறி சொல்லம்மா.
5
ஐயா தேடி வந்த பொருள் ஒரு நாலுகால் பிராணி. தென்கிழக்கு மூலையிலே, இரண்டு கல் தூரத்திலே பனந்தோப்பிலே நிற்கிறது.


அக்கா! குருவி சோதிடர் கணக்காக
டைம் முதற்கொண்டு சொல்லிவிட்டார்.
அதைக் கொண்டுவர ஆள்
அனுப்பி விட்டேன்
மங்களம்! நம் செல்வபுரம் ஒரு முக்காலி
சோதிடன் வட மேற்கு மூலையில் ஒன்றரை
மைல் தூரத்தில் பாழ்மண்டபத்துக்குப்
பின்னால் குதிரை கட்டிப் போடப்
பட்டிருக்கிறதாம். அதைக்
கொண்டு வரச் சைக்கிளில்
ஆள் பறந்திருக்கிறான்.
அதோ நம்ம சம்பந்தி
வருகிறார் போலிருக்கே!
என்னங்க! முகூர்த்த நேரம்
கடந்திட்டுப் போகுதே! அந்தக் குதிரை
இல்லாவிட்டால் என்ன? இன்னொரு
குதிரையைக் கொண்டு காரியம்
ஆவதைப்
பார்ப்பீங்களா......
மன்னிக்கணும். அப்படிப்பட்ட ஆள்
நான் இல்லே. குதிரை கெட்டுப்போனது
அபசகுனமாகத் தோணுது. அந்தக்
குதிரை வந்தால் கல்யாணம்.
இல்லாவிட்டால் இந்த உலகநாதன்
செட்டியார் சொன்னால்
சொன்னது தான்....!
தொடரும்


பாருங்கள்! ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
SUNLIGHT SOAP
பனிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-50 TM


வானவீதி அதிசயம்!
ரஷ்யா வானவீதியில் மிதக்க விட்ட முதல் செயற்கைச் சந்திரனைக் கண்ட மற்ற நாடுகள் சும்மா இருக்குமா? அவைகளும் அவற்றைச் செய்து சுற்ற விடுகின்றன. இயற்கைச் சந்திரனில் இருக்கும்......
களங்கத்துக்குப் பதில் அந்தந்த நாடுகளின் சின்னங்களை அதில் காணலாம். அதிலிருந்து போட்டி அதிகமாகி, "எங்கள் சின்னம் தாங்கிய செயற்கைச் சந்திரனே சுத்தமான சந்திரன்......
......போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்" என்று விளம்பரப்படுத்துவார்கள்!
அமெரிக்கா: நாங்கள்தான் முதலில் இதைச் செய்வதாக இருந்தது. ரஷ்யா முந்திக்கொண்டது!
மற்றவர்: அழாதீர்! சீக்கிரம் ஒரு செயற்கைச் சூரியன் செய்து புகழைத் தட்டி விடுங்கள்!
கொஞ்ச நாட்களுக்கு ஜனங்கள் கீழேயே பார்க்க மாட்டார்கள்!
ஒருவர் (இயற்கைச் சந்திரனையே பார்த்துக் கொண்டு): அப்படி ஒன்றும் சரியாகச் சந்திரன்மாதிரி செய்துவிட முடியாது...பாருங்கள், தூரத்தில் உடைந்திருக்கிறது!
"அந்தச் சினிமா நட்சத்திரத்தைப் பாருங்கள், சந்திரன் மாதிரி முகம்!"
"இயற்கையா? செயற்கையா?"
"உங்கள்" ஜாதகத்தில் நிஜச் சந்திரனே பார்க்கவில்லை; செயற்கைச் சந்திரன்தான் பார்க்கிறான்!"
ஜோஸ்யம்



29. ஆபத்து நீங்கியது!

மரத்தோடு மரமாகக் கட்டப்பட்டிருந்த கலாவின் கண்களிலிருந்து கண்ணீர் வந்து கொண்டிருந்தது. அதைத் துடைத்துக் கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். "நான் செய்த குற்றத்துக்காகச் சரியான தண்டனையை அனுபவிக்கிறேன். நான் எனது சகோதரன் மால்கோஷை விட்டுப் பிரிந்ததற்கும், இப்பொழுது வேடர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டு துன்பப் படுவதற்கும் கார்குர் பொறுப்பாளி அல்ல. இதற்கு நானே தான் பொறுப்பாளி. 'என்னை ஏமாற்றியவரை மாத்திரம் நான் சும்மா விடமாட்டேன். அவர்கள் மீது என் வஞ்சத்தை நிச்சயம் தீர்த்துக் கொள்வேன்' என்று எனக்கு முன் கூட்டியே கார்குர் எச்சரிக்கை செய்தும் நான் அதைப் பொருட்படுத்தாமல் ஜமக்காளத்தின் மீது நடக்கச் செய்தேன். அவனை ஏமாற்றாமல் 'பறக்கும் ஜமக்காளத்தைச் சில சந்தர்ப்பங்களினால் அவனுக்குக் கொடுக்காமல் இருக்கும்படியான நிலையில் இருக்கிறேன். என்னை மன்னிக்க வேண்டும்' என்று நான் அவனைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தால் நான் இப்போது இருக்கும் மோசமான நிலையை அடைந்திருக்க மாட்டேன். இந்தக் கொடிய ஆபத்திலிருந்து தப்புவதற்கு வேறு வழியில்லை. கடவுளைத்தான் பிரார்த்திக்க வேண்டும்" என்று தன் மனத்துக்குள்ளாக நினைத்துக் கொண்டாள்.

மூர்க்க குணம் படைத்த வேடர்கள் கலாவைத் தனியாக விட்டு விட்டுப் போக மனமில்லாமல் அங்கேயே இருந்தார்கள். மரத்தில் கட்டப்பட்டிருக்கும் கலாவை யாராவது அவிழ்த்து விட்டு அவளைத் தப்பி ஓடும்படி செய்து விட்டால் என்ன செய்வது என்று எண்ணினார்கள்.

பிறகு வேடர்கள் கலாவைச் சோதனை போட்டனர். அவள் சட்டைப் பையில் இருந்த சின்ன வெள்ளி மணியை வேடன் ஒருவன் வெளியில் எடுத்தான்.

வெள்ளி மணியை வேடன் வெளியே எடுத்தவுடன் கலா அதைப் பார்த்தாள். எதிர்பாராத விதமாகத் தன்னைக் கடவுள்தான் காப்பாற்றப் போகிறார் என்று நிச்சயம் செய்து கொண்டாள். துக்கமாக இருந்த அவள் முகம் சந்தோஷத்தைக் காட்டியது. 'இந்த மணியை ஏதாவது ஆபத்து வரும் சமயத்தில் உபயோகிக்கலாம். இதை நீ ஆட்டி




ணல் உனக்கு இது அதிகமாகச் சத்தத்தைக் கொடுக்கா விட்டாலும் எங்கள் ஏழுபேர்களுடைய காதிலும் அதன் சத்தம் கிணுகிணுவென்று ஒலிக்கும். அப்படிக் கேட்டவுடன் உனக்கு எந்த வேளையிலே எந்த இடத்திலே ஆபத்து நேரிட்டாலும் நாங்கள் ஏழு பேர்களும் வந்து உன்னைக் காப்பாற்றுவோம். ஆனால் ஏதாவது மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டு அதனால் ஏதாவது ஆபத்தில் இருந்தால் மாத்திரம் இந்த மணியின் ஓசை எங்கள் காதில் விழாது' என்று சித்திரக் குள்ளர்கள் முன்பு சொன்னார்களே! வேடன் மாத்திரம் இந்த மணியை என் சட்டைப் பையிலிருந்து இப்பொழுது எடுத்திரா விட்டால் நான் இந்த மணியைப் பற்றி மறந்தல்லவா போயிருப்பேன்! கடவுள்தான் எடுக்கச் செய்திருக்கிறார். நான் இப்பொழுது ஒரு மந்திர சக்தியினாலும் கட்டுப்பட்டு இருக்கவில்லை. இந்த



வேடர்களின் கயிறுகளினால்தான் கட்டப்பட்டிருக்கிறேன். அதனால் கட்டாயம் எனக்கு ஏழு சித்திரக் குள்ளர்களிடமிருந்தும் உதவி கிடைக்கும். ஆனால் என் பையிலிருந்து மணியை எடுத்திருக்கும் வேடன் மணியை ஐந்து அல்லது ஆறு முறையாவது ஆட்ட வேண்டுமே. அவன் மணியை அடிக்காவிட்டால் சித்திரக் குள்ளர்கள் இங்கு எனக்கு உதவி புரிய வரமாட்டார்களே' என்று கலாவின் மனம்சஞ்சலத்தினால் துடித்தது.

மணியைக் கையிலே எடுத்த வேடன் சும்மா இருப்பானா? "இந்தப் பெண்ணைப் பாரு. விளையாட்டுக் குழந்தையைப்போல் இந்த வெள்ளி மணியைச் சட்டைப் பையிலே வைத்துக் கொண்டிருக்கிறாள். இதை ஆட்டிப் பார்த்தால் சத்தம் கூட வராதுபோல் இருக்கிறதே" என்று தன் காதின் பக்கத்தில் வைத்துக் கொண்டு பல முறை வெள்ளி மணியை ஆட்டினான்.


உடனே மற்றொரு வேடன், "அண்ணே! அந்த மணியைக் கொண்டு வா. நான் ஆட்டிப் பார்க்கிறேன்" என்று அதை வாங்கி] ஆட்டிப் பார்த்தான்.

மற்ற இரண்டு வேடர்களும் மணியை ஆட்டிப் பார்த்தார்கள்.

"இந்தா, அண்ணே! இந்த மணியை நீயே வைத்துக்கொள். உன் குழந்தைக்கு விளையாடக் கொடுப்பதற்குத்தான் இது தகுதியாக இருக்கும்" என்று மணியைப் பையிலிருந்து எடுத்த வேடனுக்கே திருப்பிக் கொடுத்தார்கள் மற்ற வேடர்கள்.

உடனே ஒரு வேடன், " அதோ பார். அந்தப் புதரில் ஒரு புலி பதுங்கி நம்மையே பார்த்துக் கொண்டிருக்கிறது. நாம் தப்பி இங்கிருந்து ஓடுவதற்கு இதுதான் சரியான சமயம். நாம் ஓடி விட்டால் அந்தப் புலி கட்டாயம் இந்தப் பெண்ணின் மீது பாய்ந்து அவளைக் கொன்று விடும். அந்தக் கோரக் காட்சியை நம் கண்களாலே பார்ப்பானேன்?" என்று ஒரு வேடன் சொல்லவே, மற்ற வேடர்கள் அவன் சொல்லியதை ஆமோதிப்பது போல் அந்த இடத்தை விட்டு ஓட ஆரம்பித்தார்கள்.

அவ்விடத்தை விட்டு வேடர்கள் ஓடுவதைப் பார்ததுச சந்தோஷ மடைந்த கலா சற்றுத் தூரத்தில் புதரில் மறைந்து கொண்டிருந்த ஒரு புலி தன்னையே பார்ப்பதைப் பார்த்துப் பயந்தாள். 'என்ன இது? ஒரு முறைக்குப் பல முறையாக வேடர்கள் சித்திரக் குள்ளர்கள் கொடுத்த மணியை அடித்தும் சித்திரக் குள்ளர்கள் வரவில்லையே. ஒரு வேளை மணியினுடைய மந்திர சக்தி குறைந்து விட்டதோ? அல்லது மணிச் சத்தம் கேட்டுச் சித்திரக் குள்ளர்கள் வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்களோ? அவர்கள் அலைந்து திரிந்து வருவதற்குள் இந்தப் புலியினால் எனக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால்?' என்று கவலைப்பட்டுக் கொண்டே இருக்கையில் ஆகாயத்தில் ஏதோ சத்தம் வருவது போல் இருக்கிறதே என்று ஆகாயததைப் பார்த்தாள். கிழக்குப் பக்கத்திலிருந்து ஆகாயத்தில் ஏதோ வருவது போலத் தோன்றியது. உற்றுக் கவனித்தாள். ஆகாயத்தில் கிழக்குப் பக்கத்திலிருந்து ஒரு பெரிய தட்டு வெகு வேகமாகத் தான் இருக்கும் இடத்தை



நோக்கிப் பறந்து வருவதைப் பார்த்தாள். அவளுக்கு அப்பொழுதுதான் ஏழு சித்திரக் குள்ளர்களிடம் வெகு வேகமாகப் பறக்கும் ஒரு மந்திர சக்திவாய்ந்த தட்டு இருப்பதாக மந்திரக் கிழவி கூறியது ஞாபகத்துக்கு வந்தது. பறந்து வந்து கொண்டிருந்த பறக்கும் தட்டு வெகு சீக்கிரத்தில் ஆகாயத்திலிருந்து கீழே இறங்கியது.

எங்கே இறங்கியது, தெரியுமா? வேடர்கள் தப்பி ஓட யத்தனித்தார்கள் அல்லவா? அவர்களுக்கு முன்னிலையில்தான்.

அந்தத் தட்டு பூமிக்கு வந்தவுடன் அதிலிருந்த ஏழு சித்திரக் குள்ளர்களும், "நில்லுங்கள், எங்கே போகிறீர்கள்?" என்று நான்கு வேடர்களையும் வழி மறித்தார்கள். விசித்திரமான அந்த ஏழு சித்திரக் குள்ளர்களைக் கண்டதும் நான்கு வேடர்களும் அப்படியே திகைத்து நின்று விட்டார்கள். அவர்களுடைய அதட்டலைக் கேட்டு அந்த நால்வரும் பயந்து நடுங்கினார்கள். மந்திர சக்தி உள்ள வலிமை பொருந்திய ஏழு சித்திரக் குள்ளர்கள் எங்கே? இந்த வேடர்கள் எங்கே? எதிர்பாராமல் ஆகாயத்திலிருந்து அவர்களைப் பிடிப்பதற்கு யாராவது வருவார்கள் என்று அந்த வேடர்கள் எதிர்பார்த்திருப்பார்களா, என்ன?

"அந்தப் பெண்ணை மரத்தில் கட்டி வைத்திருப்பது நீங்கள்தானா?" என்று சித்திரக்குள்ளர்கள் கேட்டனர். வேடர்கள் பயந்து நடுநடுங்கிக் கொண்டு, "ஆமாம்! நாங்கள் இனிமேல் அவளை ஒன்றும் செய்ய மாட்டோம். எங்களை விட்டு விடுங்கள்" என்று சித்திரக்குள்ளர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

"அந்தப் பெண்ணை உங்கள் கைகளினாலேயே அவிழ்த்து விடுங்கள், சீக்கிரம்" என்று சொல்லவே, நான்கு வேடர்களும் நடுங்கிக் கொண்டே வெகு வேகமாகக் கலாவைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டார்கள்.

விடுதலை அடைந்த கலா மிகுந்த சந்தோஷம் அடைந்து சித்திரக்குள்ளர்களுக்கு நன்றி செலுத்துவது போல் கைகூப்பி வணங்கினாள். (தொடரும்)


அவன் நிகரற்று விளங்குகிறான்!
அவன்போன்ற வேறொரு ஆரோக்கியமான குழந்தை கிடையாது என்று எண்ணி மார்தட்டும் பெற்றோர்களை மன்னிக்கத்தான் வேண்டும்! உண்மையும் அதுவே. க்ளாக்ஸோவில் வளரும் குழந்தைகள் யாவரும், ஆரோக்கியம், குதூகலம் மற்றும் வலுத்த, அழகிய தோற்றத்துடன் விளங்கும் இணையற்ற செல்வங்களாகும். ஏனெனில் க்ளாக்ஸோவில் தாய்ப்பாலின் சிறந்த குணங்கள் சேர்ந்துள்ளன.
Glaxo
க்ளாக்ஸோ குழந்தைகளுக்குச் சிறந்த பால் உணவு


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்ப்யூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

மாலவல்லியின் தியாகம்

அத்தியாயம் 16

விஷ விருட்சம்

அன்று தஞ்சை மன்னர் மாறன் முத்தரையர் அரண்மனையில், மந்திராலோசனை மண்டபத்தில் ஒரு ரகசியக் கூட்டம் நடக்க ஏற்பாடாகிக் கொண்டிருந்தது.

பெருந்தரத்து அரசாங்க அதிகாரிகளும், போர் முறை நன்கு அறிந்த நிபுணர்களும், கூட்டங் கூட்டமாக மந்திராலோசனை மண்டபத்துக்குள் வந்து அவரவர்களுக்கு என்று நியமிக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தனர்.

தஞ்சை அரசர் முத்தரையர் கோபத்தினால் கொதிக்கும் உள்ளத்துடன் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். அமைச்சர் புலிப்புள்ளியார் கொடும்பாளூருக்குப் போய்க் கோட்டை ரகசியங்களை அறிந்து கொண்டு வந்த விஷயம் முதலில் ஆரம்பமாகியது.

புலிப்பள்ளியார் கம்பீரமான குரலில் பேசத் துவங்கினார்.

"அரசே, சபையோர்களே! கொடும்பாளூரில்தான் நாம் முதலில் வேரோடு களைந்தெறிய வேண்டிய விஷ விருட்சம் கிளை விட்டுப் படர்ந்திருக்கிறது. அந்த விஷ விருட்சத்தின் நிழலில்தான் பழையாறை நகர் சின்னப் பயல் விஜயன் ஒண்டிக் கொண்டிருக்கிறான். அந்த விஷ விருட்சம் வெட்டப்பட்டு விட்டால், சோழ அரசைப் பற்றிய நினைப்புக்கூட யாருக்கும் வராது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளில் நம்மை நாம் ஆயத்தப் படுத்திக் கொள்ளுவதற்குத்தான், நான் முக்கியமாகக் கொடும்பாளூர் போனது. போன காரியம் முற்றிலும் வெற்றி. கொடும்பாளூர் அரசன் பூதி விக்கிரம கேசரி கட்டிய மர்மங்கள் நிறைந்த கோட்டையினால்தான் அவர்களுக்கு, பல்லவ மன்னனையே அலட்சியம் செய்யும் அளவுக்குத் துணிச்சல் உண்டாகியிருக்கிறது. நான் அவர்களோடு நட்புப் பூண விரும்புவது போல் நடித்து, கோட்டை ரகசியங்களை யெல்லாம் சாங்கோபாங்கமாக அவர்களின் உதவியைக் கொண்டே அறிந்துகொண்டேன்.

"அந்தப் பயல்கள் ஆதித்தன், பராந்தகன் இருவரும் சூழ்வினையும், அகம்பாவமுமே உருவெடுத்தவர்கள். நான் ஒரு நாட்டின் அமைச்சன் என்ற மதிப்புக்கூடச் சிறிதும் வைக்காமல் இருவரும் என்னை அவமதித்தார்கள்; ஏளனமாக வாய்க்கு வந்தபடி பேசி, எள்ளி நகையாடினார்கள்; நான் அவற்றை யெல்லாம் பொறுத்துக் கொண்டு கோட்டையின் மர்மங்களை யெல்லாம் அறிந்து கொள்ளுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தேன்.

"கொடும்பாளூர்க் கோட்டை மர்மங்கள் எனக்கு விளங்கி விட்டன. இந்தச் சமயம் நாம் துணிந்து படையெடுத்தால் நிச்சயம் வெற்றி நமக்குத்தான்!" என்று புலிப்பள்ளி கொண்டார் வீறு கொண்டு பேசித் தம் மார்பில் தட்டிக் கொண்டார்.

"அமைச்சரே! உமது வீரமும் சாமர்த்தியமும் இருக்கட்டும். மதுரை அமைச்சன் அருண்மொழி வேறு அங்கே வந்திருந்தானும். இதனால் பாண்டியர் சகாயமும் இந்தப் பயல்களுக்குக் கிடைக்கலாம் என்று நினைக்கிறேன். அவ்விதம் நேர்ந்தால், போர்த் திட்டங்களை நாம் மிகவும் பலமாகச் செய்ய வேண்டி வரும் அல்லவா!" என்றார் தஞ்சை மன்னர் முத்தரையர்.

"அது பற்றி மன்னர் கவலைப்பட வேண்டாம். நம் படை பலம் எந்த எதிர்ப்பையும்சமாளிக்கக் கூடியதுதான். மேலும், நாம் சோழ ராஜ்யம் உருவாவதற்கு எதிராகப் போரில் ஈடுபடுகிறோம் என்று தெரிந்தால், காஞ்சிபுரத்திலிருந்து பல்லவ மன்னர் நந்திவர்மனின்

கி. ரா. கோபாலன்



உதவி எப்படியும் கிடைக்கும். அப்புறம் சோழ ராஜ்யம் உருவாவதென்பது கனவிலும் நிகழக் கூடாத காரியமாகி விடும்!'' என்று புலிப்பள்ளிகொண்டார் குதூகலத்துடன் கூறினார்.

கொடும்பாளூர் மீது படையெடுத்து அந்த மர்மக் கோட்டையைத் தாக்கிச் சின்னாபின்னப் படுத்திப் பெயர் பெற வேண்டும் என்னும் ஆசை புலிப்பள்ளி கொண்டாரின் உள்ளத்தில் நெடு நாட்களாக இருந்து வந்தது. அதுவும் தம் மகன் கோளாந்தகன் தஞ்சைக்குச் சேனாபதியா யிருக்கும்போதே இந்த வெற்றி கிட்டினால் அது அவனுக்குப் பெரிய புகழைத் தந்து விடும் என்ற ஆசையும் அவர் உள்ளத்தில் நீண்ட நாட்களாக இடம் பெற்றிருந்தது.

தஞ்சை அரசர் மாறன் முத்தரையரின் மகன் இளந்திரையன் ஒருபுறம் அமர்ந்து தன் உடைவாளை உருவுவதும் உறையில் இடுவதுமாக இருந்தான்.

அவனும், கொடும்பாளூர்மீது படையெடுக்கும் விஷயமாகத் தீவிரமாக யோசிப்பதில் ஈடுபட்டுப் பலவிதமான எண்ணங்களோடு உள்ளத்தில் போராடிக் கொண்டிருந்தான்.

தஞ்சையிலிருந்து கொடும்பாளூர் மீது படையெடுப்பு துவங்கிவிட்டால், அந்தப் படைவீரர்களுடன் தானும் சேர்ந்து கொண்டு போலியாகப் போரிட்டுத் தன் வீரத்தைக் காண்பித்தால், கொடும்பாளூர் இளவரசி அனுபமாவின் இதயத்தில் இடம் பெறலாம் என்னும் நப்பாசையும் அவன் உள்ளத்தில் வெகு நாட்களாக இருந்து வந்தது.

'ஆகா! என் வீரம் மட்டும் அங்கே போர்க்களத்தில் நிலைநாட்டப்பட்டு விட்டால் அது அழகி அனுபமாவின் கவனத்துக்குப் போகாமல் இராது. நம் குடும்பங்களுக்குள் பகைமை உணர்ச்சி எவ்வளவுதான் இருந்தாலும் அவளைப்போல வீர வனிதை ஒரு வீர வாலிபனுக்குத் தான் மாலையிட விரும்புவாள்,...' என்று எண்ணித் தனக்குள் குதூகலப்பட்டுக் கொண்டான்.

அதே சமயம் இன்னொரு எண்ணமும் அவன் உள்ளத்தில் தலைகாட்டியது.

'கொடும்பாளூர்க்கோட்டை தகர்க்கப்பட்டு, ஆதித்தனும் பராந்தகனும் சிறை பிடிக்கப்பட்டு விட்டால், அவள் பண்டைக்காலத்து அரசிளங் குமரிகளைப் போல் தன் உயிரை அரண்மனை அந்தப்புரத்திலேயே மாய்த்துக் கொண்டு விட்டால்....என்ன செய்வது...?'

இளந்திரையன் இந்த எண்ணத்துக்கு அதிக நேரம் தன் உள்ளத்தில் இடங் கொடுக்கவில்லை. இதை நினைத்தாலே அவன் மூச்சு முட்டியது. அப்படியெல்லாம் ஒருகாலும் நேர்ந்துவிடாது என்று நினைத்துத் தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டான்; அடிக்கடி ஆசனத்திலிருந்து எழுந்து உலாவுவதும் மீண்டும் அமருவதுமாக இருந்தான்.

''இப்படியே எதிரிகளுக்கு இடம் கொடுத்துக் கொண்டு போனால் கடைசியில் விபரீதத்தில்தான் முடியும். நேற்றுத்தான் நான் நந்திபுர நகரத்துக்குப் போய் வந்திருக்கிறேன். அந்த நகரம் வரையில் எதிரிகளின் சூழ்ச்சி தலைகாட்டியிருக்கிறது. நேற்று இரவுக்குள், நந்திபுரத்துக் காவலர் இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனியை விரோதிகள் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள் என்று செய்தி கிடைத்திருக்கிறது. என் மகன் கோளாந்தகனுக்குத் திருபுவனி



யைத் திருமணம் செய்து கொள்ளுவதன் மூலம் பலம் தேடிக் கொள்ள விரும்பினேன். இதை அறிந்து கொண்ட பழையாறைச் சோழன் விஜயனின் ஆட்களோ, அல்லது கொடும்பாளூர் உளவாளிகளோ அந்தப் பெண்ணைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். இத்தகைய செயல்களை நாம் எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?'' என்று அரசனுக்குத் தூபம் போடும் வகையில் புளிப்பள்ளி கொண்டார் பேசினார்.

''ஆம்! துளிக் கூடச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. உடனே கொடும்பாளூர் மீது படையெடுத்துத்தான் ஆக வேண்டும்!'' என்று சேனாபதி கோளாந்தகன் பதைபதைப்போடு கூறினான்.

இதைக் கேட்டதும், அப்பொழுது தான் ஆசனத்தில் அமர்ந்த இளந்திரையன் துள்ளி எழுந்தான்.

''நந்திபுர நகரத்தில் ஒரு பெண் காணாமல் போனதற்காகக் கொடும்பாளூர்மீது எதற்காகப் படையெடுக்க வேண்டும்?'' என்று உரத்த குரலில் கேட்டுக் கோளாந்தகனை எரித்து விடுவதுபோல் பார்த்தான்.


குடந்தை நகரிலிருந்து வந்திருந்த சிறை அதிகாரி, ''இளவரசர் சொல்வதும் சரிதான்'' என்றார்.

குழப்பமடைந்தவர் போல் உட்கார்ந்திருந்த முத்தரையர், ''எல்லாம் சரிதான். கொடும்பாளூர்மீது படையெடுக்காமல் வேறு எதன்மீது படையெடுப்பது?'' என்று கேட்டார்.


''மன்னர் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது......'' என்று இழுத்தாற்போல் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தார் ஒரு பிரமுகர்.

''...ஏன் பழையாறை மீது படையெடுத்தால்...?'' என்று கேட்டார் இன்னொரு பிரமுகர்.

''கூடவே கூடாது. பழையாறைமீது படையெடுத்தால் காரியம் அடியோடு கெட்டு விடும். காரணம் இல்லாமல் பழையாறைமீது படையெடுக்க முடியாது. கொடும்பாளூர்மீது படையெடுக்கக் காரணங்கள் பலமாக இருக்கின்றன. நான் அதற்கெல்லாம் தகுந்த முறையில் அவர்களுக்



விநோதக் கணக்கு!



சிறுவர்களே! இந்தக் கூட்டல் கணக்கைச் சாதாரணமாகக் கூட்டுங்கள். கூட்டி வந்த விடையின் எண்களுக்குச் சமமான எழுத்துக்களைப் போட்டுப் படித்துப் பாருங்கள். அதுவே தீபாவளிக்குப் பரிசு! [illegible]

ருப் புத்தி கற்பிக்கவேண்டும் என்றுதான் அந்தச் சமயம் அந்தச் சின்னப் பயல்கள் செய்த அவமரியாதைகளைப் பொறுத்துக் கொண்டிருந்தேன். அத்துடன் நமது மன்னரையும், பல்லவ சக்கரவர்த்தியை யும், அந்தப் பயல்கள் அவமதித்துப் பேசி யிருக்கிறார்கள். இவைகளைக் காரண மாகக் கொண்டு படையெடுக்கலாம்'' என்றார் புலிப்பள்ளி கொண்டார்.

''படையெடுப்புக்கு ஏதாவது கார ணம் சொல்லித்தான் ஆகவேண்டுமா, என்ன? முதலில் பழையாறைமீதுதான் படையெடுத்துச் செல்ல வேண்டும் என்பது என் விருப்பம்!'' என்றான் இள வரசன் இளந்திரையன்.

''இளவரசரின் அபிப்பிராயம் அவர் வம்ச பரம்பரைக்கு ஏற்ற வீரத்தைக் காட்டுவதாக இருக்கிறது!'' என்று கூறி னார்கள் சில பிரமுகர்கள்.

சில சாமர்த்தியசாலிகள் மன்னர் முத்தரையரின் முகத்தையே பார்த்துக் கொண்ட அவர் என்ன சொல்லுகிறார் என்பதையறிந்து கொண்டு அதற் கேற்பத் தலையை ஆட்ட ஆயத்தமா யிருந்தார்கள்.

இன்னும் சில பிரமுகர்கள் ஒன்றும் சொல்லத் தோன்றாமல், தலையைக் குனிந்து கொண்டிருந்தார்கள். இவர் களுக்கு யாரையும் பகைத்துக் கொள்ள விருப்பமில்லை.

இளந்திரையனின் அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டு கோளாந்தகனால் சும்மாயிருக்க முடியவில்லை. கோபத் தினால் அவன் மீசை துடித்தது.

''....பழையாறையைப் போன்ற ஒரு சிறு நகரத்தின்மீது நம்மைப்போன்ற வீரர்கள் படை திரட்டிக் கொண்டு செல்லுவது ஒரு பெரிய காரியமல்ல. அதற்குப் பெரிய படை திரட்ட வேண் டாம்; பத்து வீரர்களை அழைத்துச் சென்று பஞ்சு போல் ஊதி விடலாம். வானளாவக் கோட்டை கட்டிக் கொண்டு அகம்பாவம் பிடித்து அலையும் கொடும்பாளூர் ஆதித்தனையும் பராந்தக னையும் தொலைத்து, கோட்டையையும் தகர்த்து எறிந்துவிட்டால், பழையாறை நகர்க் கோழை விஜயனின் கொட்டம் அடியோடு அடங்கி விடும். அதுதான் நம்முடைய கௌரவத்துக்கு உகந்தது!'' என்று கூறினான் கோளாந்தகன்.

'' ஆமாம்! ஆமாம்! சேனாபதி கோளாந்தகன் சொல்லுவதுபோல் செய் வதுதான் நம் பெருமைக்கு ஏற்றது!'' என்றார் முத்தரையர்.

உடனே அங்கே கூடியிருந்த பல பிர முகர்களின் தலைகள் சொல்லி வைத்தாற்


மார்கோ சோப் வேப்-
பெண்ணெயிலிருந்து
விஞ்ஞான முறையில்
தயாரிக்கப்பட்டு,
இனிய நறுமண
மூட்டப்படுகிறது.
மிருதுத் தன்மை
யுள்ள அதன் நுரை
விஷம் பரவாமல்
தடுத்து சுத்தமாக்கு
வதில் சக்தி வாய்ந்
தது மேனியை பிர
காசிக்கச் செய்யும்.
இளஞ்சருமத்திற்கும்
ஹானியற்றது.
நீங்கள் ஸ்னானம் செய்யும்போது
உங்கள்
MARGO
HYGIENIC TOILET SOAP
மார்கோ
சோப்பை
மறந்து விடாதீர்கள்
தி கல்கத்தா
கெமிகல் கோ. லிட்.,
கல்கத்தா - 29
CMC-5 TA
தென் இந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை -1

போல் ஏக காலத்தில் மன்னரை ஆமோதிப்பதுபோல் ஆடின.

''....அவர்களுக்குப் பாண்டிய மன்னரின் உதவிப் படை ஏராளமாக வரும்....'' என்றார் குடந்தைச் சிறைக் கோட்டக் காவலர்.

''....அதனுலென்ன? நமக்குப் பல்லவ சைன்யம் துணைக்கு வரும்!'' என்றார் புலிப்பள்ளி கொண்டார்.

''சரி! இனிமேல் யோசனை வேண்டாம். நான் முடிவு செய்து விட்டேன், கொடும்பாளூர்மீது படையெடுப்பதென்று. அமைச்சரே! பல்லவ சக்கரவர்த்தியின் ஆதரவைக் கோரிப் பெற்று மற்ற ஏற்பாடுகளையும் துரிதமாக முடிக்க வேண்டும்!'' என்றார் முத்தரையர்.


''அப்படியே செய்யலாம். நாம் படையெடுப்பதற்கு முன்னல் இங்கே கொஞ்சம் களை எடுக்க வேண்டும். நமக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டுப் பல சதிச் செயல்களைப் புரிந்து கொண்டிருக்கும் பூதுகனை ஒழித்தாலன்றி நமது திட்டம் செயலாவது மிகவும் சிரமம். இப்பொழுது அவன் காஞ்சீபுரத்தில் தலை மறைவாக இருந்து, சிம்மவர்மனுடன் சேர்ந்து கொண்டு நம்மையெல்லாம் கவிழ்க்கச் சதி செய்கிறான். இனி அபாயம் பல விதத்திலும் காத்திருக்கிறது என்று முடிவு செய்து கொள்ள வேண்டியதுதான். மேலும் முக்கியமாக ஒரு விஷயம் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தச் சதிகாரன் பூதுகனும், அவன் நண்பர் சோதிடர் சந்தகரும், சிம்மவர்மனுக்கு ஆப்த நண்பர்களாகி விட்டார்கள் என்று தெரிய வருகிறது. பல்லவ மன்னரின் ஒன்று விட்ட சகோதரனை சிம்மவர்மன் அவருக்கு எதிராகப் பலத்த சூழ்ச்சிகள் செய்து வருகிறான். அவனால் நமக்கு ஆபத்துகள் நேரக் கூடும்....பூதுகனையும் தேடிப் பிடித்துத் தீர்த்துக் கட்டி விட வேண்டும்!'' என்று கூறினார் புலிப்பள்ளி கொண்டார்.

எல்லோரும் அவர் சொன்னதை ஒரு முகமாக ஆமோதித்தார்கள்.

''பூதுகன் காஞ்சீபுரத்துச் சிறைக் கோட்டத்தில் கோரமாகத் தாக்கப்பட்டு இறந்து விட்டதாக ஒரு வதந்தி கிளம்பி, குடந்தை நகரம் முழுதும் அல்லோல கல்லோலப்பட்டுப் போயிற்று. பல்லவ ஆட்சிக்கு எதிராகக் கோஷங்களைக் கிளப்பிக் கொண்டு மக்கள் கூட்டம் கூட்டமாகப் பழையாறை வந்து சேர்ந்தனர். கொடும்பையிலிருந்து விஜயனும் அவன் சகோதரி அருந்திகையும் அந்தச் சமயம் பழையாறைக்கு வந்து சேர்ந்தனர். உடனே மக்கள் பெருங் கூட்டமாக அவர்களைச் சூழ்ந்துகொண்டு பூதுகனைப் பற்றி விசாரித்தனர். அவர்களுக்குச் சாதகமாக எதையோ கூறிச் சமாதானப்படுத்தி அனுப்பினன் விஜயன். அதிலிருந்துபூதுகனுக்கு நாட்டில் இருக்கும் ஆதரவு அசாதாரணமானது என்பது தெரிந்தது'' என்று குடந்தைச் சிறைக் கோட்டக் காவலர் சொன்னார்.

அதைக் கேட்ட புலிப்பள்ளியார், ''ஆமாம். அது என்னவோ உண்மை. அந்தப் பயல் பூதுகன் ஒரு நாஸ்திகன். எப்படியோ மக்களை ஏமாற்றி யிருக்கிறான். கொடும்பாளூரில்கூட அவனுக்கு நல்ல ஆதரவு இருக்கிறது. ஆதித்தனும் பராந்தகனும் அவனிடம் அளவுகடந்த நம்பிக்கை வைத்திருக்கின்றனர். சோழ அரசு உருவாவதற்கு அவன் உதவியைப் பெரும் அளவுக்கு எதிர்பார்க்கின்றனர். நமது கலங்கமாலரையர் சூழ்ச்சிகூட அவன் விஷயத்தில் பலிக்கவில்லை. நமது தஞ்சை ராஜ்யத்தின் சேனுபதிப் பதவியைக்கூடத் துறந்து விட்டு, காஞ்சியில்

இதுவும் ஒரு.



இருந்து கொண்டு கலங்கமாலரையர் புத்தபிக்ஷுவாக மாறி, சோழ அரசு ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய செயல்களில் முழுமூச்சோடு ஈடுபட்டிருக்கிறார். ஆனால் என்ன பயன்?'' என்று சிறிது கலக்கத்தோடு கூறினார்.

''அமைச்சரே! இனிக் கவலை வேண்டாம். சோழ அரசு வருவது இனி கனவிலும் இல்லை. நீங்கள் காஞ்சிக்கு ஓலை அனுப்பிப் போர் முயற்சிகளைத் துவங்குங்கள்!'' என்றார் முத்தரையர்.

''அப்படியே செய்கிறேன். தாங்கள் உத்தரவு கொடுக்கும் முன்பே நான் படையெடுப்புக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் துவங்கி விட்டேன்!'' என்றார் புலிப்பள்ளி கொண்டார்.

அந்தச் சமயம் ஒரு ஆள் ஓடிவந்து புலிப்பள்ளி கொண்டாருக்கு அருகே வந்து தயங்கித் தயங்கி நின்றான்.

சபையில் இருந்த பிரமுகர்கள் எல்லோரும் மௌனமாக அவனையே கவனித்துக் கொண்டிருந்தனர்.

அவன் ஏதோ அவசரச் செய்தி கொண்டு வந்திருக்க வேண்டும். அவசரச் செய்தி கொண்டுவரும் ஒற்றர்களை மட்டும்தான் மந்திராலோசனைக் கூட்டங்கள் நடக்கும்போது அநுமதிப்பார்கள்.

கை விரலால் சமிக்ஞை காட்டி, புலிப்பள்ளிகொண்டார் அந்த ஒற்றனைத் தம் அருகே அழைத்தார். அவன் அவர் காதோடு ஏதோ ரகசியமாகக் கூறினான். புலிப்பள்ளிகொண்டார் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது.

சபையில் அமர்ந்திருந்த எல்லாரும் புலிப்பள்ளி கொண்டாரின் முகத்தையே வியப்புடன் பார்த்தனர்.


''அமைச்சரே! என்ன விசேஷம்? செய்தி எங்கிருந்து வந்திருக்கிறது?'' என்று மன்னர் முத்தரையர் கேட்டார்.

''நந்திபுர நகரத்திலிருந்து வந்திருக்கிறது. அந்நகர்க் காவலர் பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தார் அனுப்பியிருக்கிறார். மிகவும் குதூகலத்துடன் நாம் வரவேற்க வேண்டிய செய்தி. காணாமற்போன திருபுவனியைத் தேடிக் கொண்டு நந்திபுரத்தைச் சேர்ந்த வீரர்கள் இருவர் போயிருக்கின்றனர். அதே சமயத்தில் பழையாறையிலிருந்து விஜயனின் ஆட்கள் இருவரும் அதே காரியத்துக்காக அனுப்பப் பட்டிருக்கின்றனர். இரண்டு பக்கத்து வீரர்களும் காஞ்சீபுரத்துக்கு அருகே சந்தித்திருக்கின்றனர். அங்கே ஒரு மலைக் குகையில் ஜைன முனிவர் ஒருவர் இருக்கிறாராம். அவரிடம் நந்திபுரத்து இடங்காக்கப் பிறந்தார் மகள் திருபுவனி யிருக்கிறாள். அவளை அடையாளம் கண்டுபிடித்து நந்திபுரத்து ஆட்கள் தங்கள் ஊருக்குக் கொண்டு போக முயன்றபோது அவளை விடுவித்து, பழையாறை வீரர்கள் நந்திபுரத்து வீரர்களுடன் சண்டையிட்டுத் துரத்தியிருக்கின்றனர். பழையாறை வீரர்களுக்குத் திருபுவனியைத் தேடிக் கண்டு பிடிப்பதில் என்ன சிரத்தை? இதில் ஏதோ சூது இருக்கிறது. இடங்காக்கப் பிறந்தார் இது வரையில் நடுநிலைமை வகித்து வந்தார். இப்பொழுது அவருக்குப் பழையாறை விஜயனுடன் மனக் கசப்பு ஏற்பட்டு விட்டது. ஆகவே, இனி அவருடைய ஒத்துழைப்பு நமக்குப் பரிபூரணமாகக் கிடைக்கும். இது மிகவும் ஆர்வத்துடன் வரவேற்க வேண்டிய செய்தி யல்லவா?'' என்று தாங்க முடியாத குதூகலத்துடன் கேட்டார்.


சபையில் ஒருமுகமாகச் சந்தோஷ ஆரவாரம் எழுந்தது.

''இனி, போருக்கு வேண்டிய ஆயத்தங்களைத் தீவிரமாகச் செய்ய வேண்டும்'' என்றார் புலிப்பள்ளியார். (தொடரும்)

பிரகிருதி!



1956ல் 104,600,000,000 கோப்பைகளுக்கு மேற்பட்ட இந்தியத் தேநீர் உலக முழுவதும் அருந்தப்பட்டது.



நான்தான் Te – நட்பின் சின்னம்

ராணி லலிதாங்கி



சமீபத்தில் நான் ஒரு பட்டியல் படித்தேன். மனிதன் தனது ஜீவிய காலத்தை, உண்பதில், உறங்குவதில், வீண் பொழுது போக்குவதில்...இப்படியாக ஒவ்வொன்றிலும் எவ்வளவு வருஷங்கள் கழிக்கிறான் என்ற விவரங்கள் கொண்டதுதான் அந்தப் பட்டியல். தற்போது வெளிவரும் தமிழ்ப் படங்களைச் சுருக்கமாக விமர்சிக்க இப்படி ஒரு நூதன முறையைக் கையாளலாமென்று எனக்குத் தோன்றுகிறது. கத்திச் சண்டை, நடனம், குதிரை ஓட்டம இவை ஒவ்வொன்றும் எவ்வளவு ஆயிரம் அடிகள் என்ற ரீதியில் ஒரு பட்டியலை வெளியிட்டு விட்டால் அதுவே போதும் அல்லவா?

படத்தின் வெற்றிக்கு மேற்குறிப்பிட்ட அம்சங்கள் அவசியம் தேவை என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அவை அளவுக்கு மீறிப் புகுத்து கொள்ளும்போதுதான் அலுப்புத் தட்டச் செய்கிறது. ராணி லலிதாங்கியில் இம்மாதிரி 'அலுப்பு'கள் நிறைய வருகின்றன.

திரைக் கதை, வசனம், பாட்டுகள் இம் மூன்று பொறுப்பையும் தஞ்சை ராமய்யா தாஸ் ஏற்றிருக்கிறார். பெண்ணினத்தையே வெறுத்துத் துறவி போல் வாழ்ந்து வருகிறான் இளவரசன் அழகேசன்; அல்லி தர்பார் நடத்தி வருகிறாள் ராணி லலிதாங்கி. அழகேசனின் மீது காதல் கொள்கிறாள் லலிதாங்கி. இறுதியில் அவள் தன் ஆடல், பாடல்களினால் அழகேசனை மயக்கி அவனை மணந்து கொள்கிறாள். இதுதான் ராணி ''லலிதாங்கி'' படத்தின் கதை.

பழங் காலத்துப் பாட்டி கதைதான். சில அவசியமான, பல அநாவசியமான சம்பவங்களைப் புகுத்தித் திரைக் கதையாக நீட்டியிருக்கிறார்கள். காதலைப் பற்றி வெகு உயர்வாக, பிரமாதமாகப் பேசும் மாயா என்ற கதாபாத்திரம் தன் காதலனுக்கு எதிராக வில்லனுடன் சேர்ந்து விடுகிறாள். அவளுடைய மனமாற்றத்துக்காகச் சிருஷ்டிக்கப் பட்டுள்ள காரண காரியங்கள் போதுமானவையாக இல்லை; வலுவற்றிருக்கின்றன.

படத்தின் முன் பகுதியில் வசனம் சர்வ சாதாரணமாக இருந்தாலும், பின்பகுதியில் விறுவிறுப்புடன் சிறப்பாக உள்ளது. குருதேவருக்கும் — அழகேசனுக்கும் நடக்கும் வேதாந்த விசாரணை, கலை விழாவில் ராணி லலிதாங்கி பரீட்சிக்கப்படும் கட்டம் ஆகிய இரு இடங்களிலும் வசனத்தின் சிறப்பை நாம் நன்றாகக் காண முடிகிறது.

பாட்டுகள்: இந்தப் படத்திலேயே மிகச் சிறந்த அம்சம் இதுதான். நல்ல கருத்து அமைந்த பாடல்கள் பல உள்ளன. ''ஆண்டவனே இல்லையே'' என்று ஆரம்பிக்கிறது ஒரு பாட்டு. முதல் அடியைக் கேட்டதும் தூக்கி வாரிப் போடுகிறது. ''அடடா, ராமய்யாதாஸ் எப்போது முதல் நாஸ்திகப் பிரசாரகராக மாறினார்?'' என்று மனம் துடிக்கிறது. அடுத்து, ''தில்லைத் தாண்டவனே உன் போல் தாரணிமீதினிலே'' என்ற அடிகளைக் கேட்டதும் ''சபாஷ்'' என்று நம்மை அறியாமலே வாய் கூவி விடுகிறது. பால் பாயசத்திலே ஒரு உப்புக் கல் இட்டது போல, 'புல் புல் ஜோடி, மஜா ஜில்ஜில்' இது போன்ற பாட்டுக்களும் நடுநடுவே இல்லாமல் இல்லை.

பாட்டுகள் அனைத்துமே இனிமையாகப் பாடப்பட்டிருக்கின்றன. 'ஆண்டவனே', 'காதலுக்குக் கண்ணில்லை' என்ற இரண்டு பாட்டுகளையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். இப் படத்தில் கர்நாடகச் சங்கீதத்துக்கு முக்கியத்துவம் அளித்திருப்பது பாராட்டுதற்குரிய ஒரு விசேஷம் ஆகும். நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு பின்னணியில் வாத்திய இசை அமைத்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

சிவாஜி கணேசன் இப் படத்தில் இல்லவே இல்லை; ஆம், அவர் இப் படத்தில் ரஸிகர்களை ஏமாற்றியே விட்டார். கருகரு என்ற தாடி மீசை, நெற்றியிலே விபூதிப்பட்டை, குங்குமப் பூச்சு, கழுத்திலும் கைகளிலும் உருத்திராட்சங்கள்,—இப்படியாக முகப் பொலிவுடன் சிவப்புமாகத்தான் காணப்படுகிறார், படத்தின் பெரும் பகுதியில். ஆனால், அவர் பேச்சிலே அழுத்தம், ஜீவன் எதுவும் இல்லை. நடிப்பிலே விறுவிறுப்போ உணர்ச்சியோ கிடையாது. காரணம்; இப் பாதிரி கதாபாத்திரம் அவருக்குப் பொருத்தமற்றது என்ற எண்ணமே ஏற்படுகிறது. ஆனால், எல்லாவற்றுக்கும் சேர்த்து வைத்து ஈடு செய்து விடுகிறார். படத்தின் இறுதியில், கதகளி முறையிலே ருத்ர நடனம் ஆடி நம்மைப் பிரமிக்க வைத்து விடுகிறார் அவர். ''இவரால்



முடியாததே ஒன்றுமில்லையோ?'' என்ற வியப்பு ஏற்படுகிறது.

ராணி லலிதாங்கியாகப் பானுமதி நன்றாகவே நடிக்கிறார். ஆனால் அவர் பாகம் சோபிக்காமலே போகிறது. காரணம் அவர் இன்னும் பாவாடையும் தாவணியும் அணிந்து குமரியாக வந்து குதிப்பதை ரஸிக்க முடியாமல் இருப்பதுதான். வில்லனிடமிருந்து தப்ப அவர் பைத்தியம் போல் நடிப்பது பழைய கற்பனை. ஆனாலும் அந்தக் கட்டத்தில் நன்றாக இருக்கிறது அவர் நடிப்பு. இருந்தும் பானுமதியைப் பொறுத்தவரை கண்ணை மூடிக் கொண்டு அவர் சொந்தக் குரலில் பாடும் மூன்று பாட்டுகளைக் கேட்டு ரஸிக்கலாம் என்று மட்டுமே சொல்லத் தோன்றுகிறது.

முதலில் காதலியாகவும், பிறகு கதாநாயகியாகவும் நடிக்கும் ராஜசுலோசனா தம் பாகத்தை உணர்ந்து நன்றாக நடித்திருக்கிறார். ஆனால், இவர் நடனம் ஆடுவதைத்தான் ரஸிக்க முடியவில்லை. பாவம், 'ஐயோ பாவம்' என்று அவர் மீது பச்சாத்தாபப்படும்படி இருக்கிறது. தவிர, ஆடுவதற்கு ஏற்ற உடலமைப்பும் அவருக்கு இல்லை.

கொடியோன் காந்தீபனாக வீரப்பா வழக்கப்போல் சிறப்பாகவே நடித்திருக்கிறார். காங்கேய முனிவராக வரும் பழங்கால நடிகரான செருகளத்தூர் சாமாவின் நடிப்பிலே இன்னும் சிறப்பு மங்காமல் இருந்து வருவது தெரிகிறது. மன்னராக வந்து மடியும் ஆர். பாலசுப்பிரமணியத்தின் பேச்சு நடிப்பு எல்லாமே சப்பென்றிருக்கிறது. நன்மந்திரியாக பி. எஸ். வெங்கடாசலம் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார்.


ஒரு நல்ல நடிகரான கே. சாரங்கபாணிக்குத் 'தலையைக் காட்டும்' கதாபாத்திரங்களைக் கொடுக்கும் படாதிபதிகளை நினைத்து வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. சாரங்கபாணி தம் கௌரவத்தை நிலை நிறுத்திக் கொள்ள விரும்பினால், அவர் இம் மாதிரி 'சில்லுண்டி' வேஷங்களில் நடிப்பதை நிறுத்திக் கொண்டு விடுவதே நலம்.

மகாராணியாக எஸ். டி. சுப்புலக்ஷ்மி தம் பாகத்தை உணர்ந்து நடிக்கிறார். லலிதாங்கியின் தோழியாக வரும் பிரமீளாவுக்குப் படத்தில் அதிக சந்தர்ப்பமில்லை. எனினும் தமக்கு நல்ல நடிப்புத் திறமை இருப்பதை வெளியிட்டிருக்கிறார்.

தங்கவேலு, முத்துலட்சுமி, எம். சரோஜா கோஷ்டியினர் ஹாஸ்ய விருந்து அளித்துள்ளனர். இவர்கள் வரும் கட்டங்களில் ஒரு கலகலப்பு ஏற்படவே செய்கிறது. தங்கவேலு 'இமயமலை பக்கிரா'க வந்து புரியாத பாஷையில் பேசுவது தமாஷாகவே இருக்கிறது. ஆனால் அளவுக்கு மீறிப் பேசி 'போரடி'க்கிறார். இரண்டு பெண் டாட்டிக்காரர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும் ஹாஸ்ய நடிகர் தங்கவேலுவின் நடிப்பு.

படத்தைப் பார்க்கும் போது இந்தப் படத்துக்கு டைரக்டர் என்று ஒருவர் இருந்தாரா என்ற ஐயமே ஏற்படுகிறது. லலிதாங்கி பரீட்சிக்கப்படும் கட்டமும், அதை அடுத்து வருகிற சிவா நடனமும் விறுவிறுப்பாக இருக்கின்றன என்பது தவிர படம் முழுதும் ஆமை வேகத்தில்தான் ஓடுகிறது

மொத்தத்தில் எல்லாமே அளவுக்கு மீறி இடம் பெற்றிருக்கும் இந்தப் படத்துக்கு சிவாஜியின் சிவா நடனமும், சங்கீத அம்சமும், தங்கவேலு கோஷ்டியின் ஹாஸ்யமும் நல்ல பெயர் வாங்கிக் கொடுத்து ஈடு செய்வதாக அமைந்துள்ளன. — ஜாம்பவான்



ஆர்ட் அண்ணாசாமி



"சரஸ்வதி பூஜை, விஜயதசமி தினங்களில் என் வீட்டில் நடை பெறும் நவராத்திரிக்கொண்டாட்டத்துக்கு அன்புடன் அழைப்பு.

— ஆ. அண்ணாசாமி."

என்ற அழைப்பிதழ் ஒரு தாழை மடலில் சிரமப்பட்டுக் கையால் சித்திரக் கோலமாக மஞ்சள் குங்கும வர்ணங்களில் வரையப்பட்டு எனக்குக் கிடைத்ததும் திகைத்தேன். முதலில் என் பெயரும் பிறகு இல்லாள் பெயரும் விலாசத்தில் போட்டிருந்தது இன்னும் வியப்பாகத்தான் இருந்தது. வீட்டுக்கு வீடு நடைபெறும் நவராத்திரி. அதையொட்டிய சரஸ்வதி பூஜை முதலிய கொண்டாட்டங்களுக்குச் சேலை கட்டிய மாதர்தாம் உரித்தானவர் என்பது சம்பிரதாயம். அழைப்பாளிகளும் பெண்மணிகளே என்பதும் அனுபவத்தில் தெரிந்த விஷயம். (கொலுவுக்குப் படி கட்டுவதும், பொம்மைகள் வைப்பதும், மண்டபங்கள் அலங்கரிப்பதும் மின்சார ரயில்கள், மின்சார இயங்கிப் பொம்மைகள் முதலியவற்றை யெல்லாம் ஏற்பாடு செய்து வைத்துக் கொடுப்பதும் மீசை முளைத்த ஆண்மணிகள்தான் என்றாலும், அவர்கள் அந்தச் சமயத்தில் பின்னணியில்தான் இருப்பார்கள்!) ஆகவே அண்ணாசாமியின் சரஸ்வதி பூஜை விஷயம் கொஞ்சம் விசித்திரமாகவே இருந்தது. முதலில், இக் கொண்டாட்டம் நடத்துவது, பெயரளவில்கூட ஒரு ஆண் மகன்: அழைப்பு எனக்கும் வந்ததால் பெண்களோடு ஆண்களும் சரிநிகர் சமானமாக இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்ற புதுமையும் வெளிப்பட்டது!

அண்ணாசாமியிடம் இந்த மாதிரி ஏதாவது நூதனங்களையும் அதிசயங்களையும் காண்பதில் அதிசயமில்லை. இந்த முறை என்னதான் புது அதிசயத்தைச் செய்யப்போகிறார் என்ற ஆவலுடன் தம்பதி சமேதராக அண்ணாசாமியின் அழகு மாளிகைக்குக் குறிப்பிட்ட சரஸ்வதி பூஜையன்று மாலையில் சென்றேன்.

அண்ணாசாமி அலாதிப் பிறவி. கேவலம் பாமரரும் மற்றோரும் செய்யும் காரியங்களை அவர் செய்ய மாட்டார். அவருடைய உலகமே வேறு; சிந்தனையே தனி; கற்பனையோ நம் சாமான்ய அறிவுக்கு எட்டாதது.

அண்ணாசாமியின் பெயருக்கு முன்னால் இரண்டாவது நீண்ட உயிரெழுத்து பதிந்திருப்பதே அதற்கு அத்தாட்சி. 'ஆ' என்பது 'ஆர் ஆர் ஆசைப்பட்டார்' என்ற கருத்தல்ல. ஆ என்பது நுண்கலையைக் குறிப்பிடும் கருக்கெழுத்து. 'ஆ' என்பதின் அந்தரங்கத் தத்துவத்தைக் கேட்டால் 'ஆஹா!' என்பீர்கள். சுருங்கச் சொன்னால் அந்த நீண்ட உயிரெழுத்து 'ஆர்ட்' என்ற ஆங்கில பதத்தின் அடிப்படை எழுத்து. 'ஆர்ட் அண்ணாசாமி' எப்படி, எப்போது, ஏன், எதற்காக அந்த 'ஆர்ட்'டில் இறங்கினார் என்பது அவருக்கும் அந்தக் கலாதேவிக்கும்தான் தெரியும்! ஆனால் அவர் தம் வக்கீல் தொழிலை விட்டு விட்டு 'ஆர்ட்' என்னும் அகப்படாத அரிய கலையை மூலைமுடுக்குகளிலும் கோவில் குளங்களிலும் இடிந்த அரண்மனைகளிலும், ஒடிந்த தேர்களிலும், பாழ் மண்டபங்களிலும் தேடிக் கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரிந்த பகிரங்க ரகசியம்.

★

அண்ணாசாமியின் அழகு மாளிகையை அடைந்தோம்.

மாடிக்குப் போனோம். அங்கே தான் முக்கிய காட்சி அலங்காரங்களெல்லாம் காணப்பட்டன.

மண் பொம்மைகளும், பீங்கான் பொம்மைகளும் அங்கில்லை. ஆனால் முப்பது முக்கோடி தேவர்களும் அங்கு எங்களை வரவேற்கக் காத்திருந்தனர், விக்கிரக உருவங்களில். கால் அங்குல குட்டிப்பிள்ளையார் முதல் இரண்டடி அனுமார்





வரையில் இருக்க இருசான சராசரங்களையும் தேவாதி தேவர்களையும் தேவிகளையும் கண்டோம். ஆனால் இவர்கள் எல்லோரும் ரொம்பப் பழைய புள்ளிகள் என்று அவர்கள் மேல் கண்டிருந்த புள்ளி விவரங்களிலிருந்தும், ஏறியிருந்த பாசியிலிருந்தும் அறிந்தோம். அறிந்தோம் என்றால் எங்கள் சொந்த அறிவினால் அல்ல. ஆர்ட் அண்ணாசாமியின் அபார கலைஞானத்தின் சக்தியினால் அறிந்தோம். ஒரு வெண்கலப் பொம்மையை—அண்ணாசாமி மன்னிப்பாராக—விக்கிரகத்தைக் கையில் எடுத்தேன். அதன் கனம் தாங்காததாலும், என் கையில் அழுக்குப்பட்டதாலும், முக்கியமாக என் அறியாமையாலும் அதைத் தொப்பென்று இருந்த இடத்தில் வைத்து விட்டுக் கையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டேன். பிறகு அண்ணாசாமிக்கு என் அருமையான கருத்தை வெளியிடத் துணிந்தேன். "ஏன், ஸார்! இந்த 'பிராஸோ' என்ற மருந்து விற்கிறார்களே அதைப் போட்டு நன்றாக இந்தப் பொம்மையைத் தேய்த்துப் பளபள வென்று வைக்கலாமே? இந்தப் பாசி போக புளி, உப்பு, சாம்பல் மூன்றையும் கலந்து தண்ணீரில் ஒரு ராத்திரி ஊறவைத்தால் பளிச்சென்று விட்டுப்போகும்" என்று என் சிற்றறிவுக்கு எட்டிய யோசனையைச் சொன்னேன். அப்போது ஆர்ட் அண்ணாசாமியின் முகத்தைப் பார்த்த எனக்குத் திடுக்கிட்டது. அந்தப் பழம் விக்கிரகத்தின் பாசி வர்ணத்துக்கு அவர்முகம் மாறியது. என்னைப் 'பளீர்' என்று அறைவது போல் கண்ணால் பார்த்தார்.

"பிராஸோ! புளி! உப்பு, சாம்பல்! சிவ சிவா!" என்று காதைப் பொத்திக் கொண்டார். சிவனுக்கும் சாம்பலுக்கும் பிணைப்பதுண்டு. சாம்பசிவாவென்று. ஆனால் உப்பு, புளி இதெல்லாம் அரனின் அடையாளங்களாக நான் ஒரு புராணத்திலும் கேட்டதில்லை. ஆகவே சற்றுத் திகைத்தேன்!

"போச்சு, போச்சு!" என்றார் அண்ணாசாமி பரிதாபக் குரலில்.

'இதேதடா வம்பு' என்று நினைத்து, "என்ன போச்சு? என்ன போச்சு?" என்று திகிலுடன் கீழே தேட ஆரம்பித்தேன். நான் அந்த வெண்கலப் பொம்மை, மன்னிக்கவும், விக்கிரகத்தைக் கனமும் அழுக்கும் தாளாமல் கீழே தொப்பென்று வைத்ததில் ஏதாவது அதிலிருந்து உதிர்ந்து நஷ்டமாகப் போய் விட்டதோ என்று அஞ்சினேன்.

"இது எந்தக் காலத்து விக்கிரகம் தெரியுமா? பராந்தக சோழனின் கொள்ளுத் தாத்தாவுக்குக் கொள்ளுப்பாட்டிக்குச் சீதனமாக புஜவிக்ரம பாண்டியனின் மாமனாருக்கு மாமாத் தாத்தா கொடுத்ததாக்கும். அவ்வளவு புராதனமான புதை பொருளாக்கும் இது. இதைப்போய்ப் புளியையும் பிராஸோவையும் போட்டுத் தேய்த்தால் அதன் புராதன மகிமையே போச்சு. அதற்கு மதிப்பு, மகாத்மியம் எல்லாம் அது பழைய காலத்தது என்பதால்தான். அதைப் பளபளவென்று தேய்த்து வைத்தால் தற்காலத்து நவீன அறை அலங்காரப் பொருளாகி விடும்" என்றார் ஆர்ட் அண்ணாசாமி. 'ஆர்ட்'டில் அடி முட்டாளான எனக்கு அப்போதுதான் விஷயம் கொஞ்சம் விளங்கியது. இம்மாதிரி விக்கிரகத்தில் படர்ந்திருக்கும் பாசியும் அழுக்கும் எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாக இருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மகிமையும் மதிப்பும் அதிகம் என்று.

அடுத்தபடியாக ஒரு மயில் எங்கள் கண்ணைக் கவர்ந்தது.

"அந்த மயில் தோகைக்கு நல்ல காக்கைப் பொன் வர்ணங்களைத்தீட்டி, மயில் கண்களின் பின்புறமாக அணைந்து அணைந்து எரியும் மின்சார வர்ண விளக்குகளை வைத்தால் அழகாக இருக்குமே!" என்றாள் என் இல்லாள்.

அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் "இன்னொரு தடவை அந்த மாதிரி என்னுடைய கலைச் சின்னங்களைக் கேவலப்படுத்தாதீர்கள்" என்றார் அண்ணாசாமி.

அதன் பிறகு அண்ணாசாமியின் கலைப் பொருள்களைப் பற்றி வாய் திறந்து எதுவும் கூறாமல் தப்பினோம் பிழைத்தோம் என்று வெளியேறி



ளும். அத்துடன் எங்கள் தொடர்பு விட்டு விடவில்லை. அண்ணாசாமியின் அழகு மாளிகைக்கு முன்னைவிட அதிகமாக இப்போது என் கால்கள் இழுத்துச் சென்றன. ஒவ்வொரு முறையும் ஏதாவது விசித்திர விசித்திரமான புதை பொருள்கள் அவரைச் சூழ்ந்து கொண்டே வந்ததைக் கண்டேன்.

நான் பார்க்கப் போனபோதெல்லாம் உடைந்த கல்துண்டுகளும், பாசி விக்கிரகங்களும் அதிகரித்து வந்தன. தரை மட்டத்தில் இடமில்லாமல் இவற்றில் கந்தர்வர்களுடன் அப்ஸரசுகள் முதலிய பலவிதமான உருவங்களெல்லாம் சுவரில் ஏறி அமர்ந்து அந்தரத்தில் காட்சியளித்தன. நிலைவாசல்களிலும் கதவுகளிலும் பலவிதமான சக்கரங்களும், தேர்ச் சின்னங்களும், மண்டப அலங்காரங்களும் ஒன்றையொன்று முட்டிக் கொண்டு நின்றன. ஒரு சமயம் நான் மாலை நேரத்தில் அண்ணாசாமியின் அழகு மாளிகைக்குச் சென்றிருந்த போது ஒரு ராட்சஸப் பல்லியோ, தேளோ அறைக் கதவின் மேல் கட்டையில்



இருப்பதைப் பார்த்து, பக்கத்தில் வைத்திருந்த ஒரு கோவில்குடையின் கம்பால் அதை ஓங்கிப் போடப் போனேன். உள்ளேயிருந்து வந்த அண்ணாசாமி என் கையைக் கெட்டியாகப்பிடித்துக்குடைக் கம்பை வாங்கி அது இருந்த மூலையில் வைத்தார். பிறகு, "என்ன அப்பா! ஸாண்டோ வேலை பார்க்கிறாய்!" என்றார். பயந்து கொண்டு உதறிக் கொண்டிருந்த ஆள்காட்டி விரலால் ராட்சஸ தேளைக் கட்டிக் காட்டினேன்.

அவர் தைரியமாக அதைக் கையில் எடுத்து என்னிடம் கொண்டு வந்தார். நான், "ஆர்ட் ஸார், வேண்டாம், வேண்டாம்! அதைப் போட்டு விடுங்கள். கொன்று விடுங்கள். கடித்தால் விஷம்" என்று கதறினேன்.

"இது நம்மைக் கடிக்காது அப்பா! பாக்கைத்தான் கடிக்கும்" என்று அதன் கால்கள் போலிருந்த பிடிகளை அசைத்தார். அப்போது தான் அது ஒரு விசித்திரப் பாக்கு வெட்டி எனத் தெரிந்தது.

இப்படி ஆர்ட் அண்ணாசாமியின் புதை பொருள் சேகரிப்பு பெருகிக் கொண்டு போயிற்று. அவர் மனைவி என்னிடம் பல முறைகள் இதைப்பற்றிப் பிரலாபிக்கலானாள். "இதென்ன பித்துக்குளித்தனம்? இப்படி அவர் வீடு முழுவதும் ஓட்டை உடைசல் பித்தளை மரச் சாமான்களைக் கொண்டு வந்து நிரப்புகிறாரே! நீங்களாவது சொல்லக் கூடாதா?" என்று முறையிட்டாள்.

ஒரு நாள் நானும் தைரியத்தை இரண்டு கைகளிலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவரிடம் மெதுவாக என் அபிப்பிராயத்தை வெளியிட்டேன். "அண்ணாசாமி ஸார்! மன்னியுங்கள். சொல்கிறேனே என்று வித்தியாசமாக நினைக்க வேண்டாம். ஆர்ட் எல்லாம் சரிதான்; பிரமாத கலைதான்; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்த முப்பது முக்கோடி தேவர்களும், உயிரில்லா மிருகங்களும் பட்சி ஜாலங்களும் உங்களை வெளியேற்றித் தெருவில் நிறுத்தி விடுவார்கள் போலிருக்கிறதே!" என்றேன்.

"அந்த நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லி ஆர்ட் அண்ணாசாமி என் வாயை அடைத்து விட்டார். அன்றுதான் புதிதாக வந்த ஒரு பெரிய உடைந்த கண்டாமணி உத்தரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது. அது உத்தரத்துடன் கீழே விழுவதற்குள் அண்ணாசாமியே தெருவில் போய் நின்றால் பரவாயில்லை என்று தோன்றியது.

எனக்கு ஜோஸியம் கீஸியம் தெரியாது. ஆனால் பின்னால் நிகழ்ந்தது என்னவோ என்னையே தூக்கிவாரிப் போட்டது.

வழக்கம் போல ஒரு நாள் நான் அழகு மாளிகைக்குப் போனேன். வீட்டு வாசலில் நான் கண்ட காட்சி என்னை ஒரு கணம் பிரமிக்க வைத்தது. ஒரு பெரிய தேர் வாசல் முன் நின்று கொண்டிருந்தது. தேரில் பல பாகங்கள் உடைந்திருந்தன. ஒரு அச்சு முறிந்து தேர் ஒரு பக்கம் சாய்ந்திருந்தது.

"வந்தது ஆபத்து" என்று நினைத்து வீட்டுக்குள் சென்றேன். ஸ்ரீமதி அண்ணாசாமி பாக்கியம் என்னை வாசலிலேயே வரவேற்றாள்.

"உங்கள் சிநேகிதர் மேலே மாடியில் இல்லை. நீங்கள் சொன்ன ஜோசியம் பலித்தது. அவருக்கு அங்கே நிற்கக்கூட இடமில்லை. அதோ அந்தத் தேர்மேல் வாசம் செய்கிறார்" என்று முகவாட்டத்துடனும் கோபத்துடனும் சொன்னாள்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம்! நான் இதற்கு ஏதாவது வழி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு நானும் தேரின்மேல் தட்டுத் தடுமாறி ஏறினேன். ஆர்ட் அண்ணாசாமி உடைந்த தேர்ச் சிலைகளைப் பூதக்கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன, அண்ணாசாமி ஸார்! உங்கள் வாசத்தை இந்தத் தேருக்கு மாற்றிவிட்டீர்களா?" என்று கேட்டேன்.


"ஆமாம். முக்கால்வாசி நேரம் இதில்தான் வாசம் செய்கிறேன். இதைச் சல்லிசா ஏலத்தில் தட்டிவிட்டேன், நமக்குத் தெரிந்த ஒரு ஆசாமி மூலம்...என்ன விலை தெரியுமா? ஐந்நூறு ரூபாய்க்குச் சல்லிசா தட்டினேன். இதில் இருக்கும் சிற்பங்களே ஐயாயிரம் ரூபாய் பெறும்" என்றார்.



செலவு குறைய

சுந்தரம் TVS புதுப்பிக்க டயர்

பஸ், லாரி சொந்தக்காரர்கள்
செலவை குறைக்க முயல்வது அவசியம்.
பல செலவுகளில், டயர் செலவு மிக அதிக
மானது. டயர் தேய்ந்தால் புதிய டயர்
வாங்குவது சிக்கனமல்ல.
தேய்ந்து வழுக்கையான டயர்களை
சுந்தரம் (T V S) புதுப்பிக்கும்
முறையில் உருவாக்கி மீண்டும் உபயோ
கித்து சரிக்குச் சரி மிச்சம் காணலாம்.
பலகோடி மைல்கள் உபயோக
அனுபவத்தில் உருவானது



சுந்தரம் TVS புதுப்பிக்கும் முறை

சிக்கனம் பெரிது
உழைப்பும் உயர்ந்தது.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
(டி. வி. எஸ். ஸ்தாபனம்)
புதுக்கோட்டை • சென்னை

TVS 95

"ஐயாயிரம் ரூபாய் சிற்பமா? எங்கே?" என்றேன் வியப்புடன்.

"வா! காட்டுகிறேன்" என்று தேரின்மேல் வட்டத்தை ஒரு சுற்று சுற்ற வைத்தார். ஒரு மூலையில் நிறுத்தி. "ஸால பஞ்சிகா!" என்றார். புது பாஷையாக இருக்கிறதே என்று புரியாமல் விழித்தேன். "அதோ பார்! ஸாலபஞ்சிகா!" என்றார்.

"என்ன ஸார்! என்னென்னமோ சொல்கிறீர்கள்! மரத்தின் பெயரா?" என்றேன்.

"இல்லை! அதோ பார் அந்தக் கன்னிகை உருவம் செதுக்கி இருக்கிறதே! என்ன அருமையான வேலைப்பாடு பார்! ஆகா! அந்தக் கைகளை அவள் உயரத் தூக்கி வளைத்து நிற்கும் அந்த 'போஸ்' இருக்கிறதே. பிரமாதம்! "ஸால பஞ்சிகா" என்றால் இது தான்!" என்றார்.

"இதுதானா?" என்று மூக்கில் கை வைத்தேன். என் மூக்கில்தான். ஸாலபஞ்சிகா மூக்கு உடைந்திருந்தது!

அன்றிரவு எனக்குத் தூக்கம் சரியாக வரவில்லை. தூக்கம் வந்தபோது ஸாலபஞ்சிகாக்கள் கூட்டம் கூட்டமாகச் சொப்பனத்தில் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று பாதி ஜாம வேளைக்குமேல் ஒரு அபார யோசனை தோன்றியது.

மறுநாள் காலையிலேயே என்னுடைய அரிய யோசனையைச் சொல்வதற்கு ஆர்ட் அண்ணாசாமியிடம் சென்றேன். அவர் இரவு முழுவதும் தேர்த் தட்டிலேயே படுத்து உறங்கி விட்டு அப்போதுதான் கீழே வந்திருந்தார். அவரிடம் பரமரகசியமான என் யோசனையைச் சொன்னேன்.

"பேஷ்! பலே பேஷ்! இது எனக்கு இவ்வளவுநாள் தோன்றாமல் போயிற்றே! மேற்கொண்டு நீயே இதை நிறைவேற்றி வை" என்று கூறினார்.

கதையை வளர்த்துவதில் பயன் என்ன? என்னுடைய முயற்சியால் ஆர்ட் அண்ணாசாமியின் அழகுமாளிகைக்கும் அதில் உள்ள அதிசயப் பொருள்களுக்கும் பத்திரிகைகளின் மூலமும், மற்றத் தனி மனிதர்கள் வாயிலாகவும் பிரமாத விளம்பரம் கிடைத்தது. அழகு மாளிகை பத்திரிகைகளின் பக்கங்களை அலங்கரிக்க ஆரம்பித்தது. கலைஞானமே இல்லாதவர்கள்கூட "என்னதான் இருக்கிறது பார்க்கலாம்" என்று ஒரு ஆர்வத்தில் அழகு மாளிகைக்குள் புகுந்தார்கள்.

மேல்நாட்டிலிருந்து வரும் யாத்ரீகர்கள், உள்நாட்டில் வசிக்கும் மேல்நாட்டார் அனைவரும் ஆர்ட் அண்ணாசாமியை நாடினார்கள். சிறிது காலத்தில் பாசி படிந்த விக்கிரகங்களும் பின்னமான பொம்மைகளும், தேர்ப் பாகங்களும் ஓட்டை உடைசல் பித்தளை வெண்கல மணிகளும் 'க்யூரியோ''ஸாக சப்த சமுத்திரங்களைக் கடந்து அக்கரைச் சீமைகளுக்குக் குடியேறின. ஆர்ட் அண்ணாசாமியின் அழகு மாளிகை உலகப் பிரசித்தி யடைந்தது.

★

ஒரு சமயம் நான் வெளியூர் போய் வர வேண்டியிருந்தது. இரண்டு மூன்று வாரம் ஆயிற்று, வருவதற்கு. திரும்பிவந்ததும் அழகு மாளிகைக்கு வழக்கம்போல் கால்கள் இழுத்தன. அங்கு போய்ச் சேர்ந்ததும் வீடு பூட்டியிருந்தது கண்டு திடுக்கிட்டேன். அக்கம் பக்கத்தில் விசாரித்ததில் ஆர்ட் அண்ணாசாமி தம்பதிகள் மூட்டையும் முடிச்சுமாகக் கிளம்பிப் போய் ஒரு வாரம் ஆனதாகத் தெரிந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை.

விசனத்துடன் வீடு திரும்பினேன். அன்று தபாலில் ஒரு கடிதம் வந்தது; ஆர்ட் அண்ணாசாமியிடமிருந்துதான். அவர் பம்பாயிலிருந்து எழுதியிருந்தார். அவசரமாக ஜெர்மனியிலிருந்து ஒரு தந்தி வந்ததாகவும், அங்கு ஒரு புதை பொருள்களைக் காட்சி நடைபெறுவதாகவும், அதற்கு அவருக்கு அழைப்பு வந்ததாகவும், அதனால் அவர் தம்மிடம் மிஞ்சியிருந்த விசித்திரச் சாமான்களை எடுத்துப் போவதாகவும், மனைவியும் கூட வருவதாகவும், ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்குப் போவதாகவும், பிறகு எனக்கு விவரமாக எழுதுவதாகவும், எனக்குத் தெரிவிக்க முன்னாலேயே அவகாச மில்லாததால் மன்னிக்கும்படியும் எழுதியிருந்தார். அத்துடன் ஒரு செக் ஐயாயிரம் ரூபாய்க்கு வைத்திருந்தார். நான் அவருக்குச் செய்த உதவிக்கு ஒரு சிறு அடையாளமாக அனுப்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நான் அப்படியே பிரமித்துப் பேசவும் மூச்சில்லாமல் சிறிது நேரம் இருந்தேன்.

ஜெர்மனியில் ஆர்ட் அண்ணாசாமியின் காட்சிப் பொருள்கள் பிரமாதமாகப் பாராட்டப்பட்டதாக அவரிடமிருந்து தகவல் வந்தது. அடுத்த மாதம் அமெரிக்காவிலிருந்து அவர் கடிதம் எழுதினார்.

அமெரிக்காவில் தம்முடைய தேவர்களிடமும் மிருகங்களிடமும், ஸால பஞ்சிகாக்களிடமும் அபார அன்பு வளர்ந்து வருவதாகவும் தம் 'ஸ்டாக்அவுட்' ஆகிக்கொண்டிருப்பதால் உடனே என்னை இன்னும் ஸாலபஞ்சிகாக்களையும், மற்ற விக்கிரகங்களையும் கண்டு பிடித்து, அனுப்பும்படியும் உத்தரவிட்டிருந்தார். முன்பணமாக ஐயாயிரம் டாலர் அனுப்பியிருந்தார். நான் ஏ. ஏ. சாமி ஸ. இ. ஆ. ஆ. அகாடமிக்கு ஏஜண்டானேன்.

அதிகம் சொல்வானேன்! அமெரிக்கர்கள் ஒரு விஷயத்தில் மனம் வைத்தால் பிரளயமாக்கி விடுவார்கள் என்பது பிரசித்தம். ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான நடராஜர்களுக்கும், கிருஷ்ணர்களுக்கும், ஸாலபஞ்சிகாக்களுக்கும் நான் எங்கே போவது? அதுவும் ஆயிரம் வருஷங்களுக்குக் குறைவில்லாமல் வயதானவர்களுக்கு? ஆர்ட் அண்ணாசாமியையும் கைவிட முடியவில்லை.

ஒரு சின்னப் பட்டறையும் உருக்குச்சாலையும் வைத்தேன். அச்செடுத்து நூற்றுக்கணக்கில் விக்கிரகங்கள் செய்தேன். அவற்றைத் திராவகத்தில் தோய்த்தேன். மண்ணில் புதைத்தேன். ஆ. அ. சாமியின் ஆர்டர் வர வரப் புதைபொருள்களை எடுத்துக் காற்று வாக்கில் (ஆகாயக் கப்பல் மூலம்) அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தேன். தொழிலில் இறங்கிய பிறகு தொழிற்சாலை நுட்பம் தெரிய வேண்டாமா?


புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
சார்மிஸ்
டால்கம் பவுடர்

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

34. தூவானம்

பெரியதோர் தொல்லை தீர்ந்தது. 'அம்மாடி!' என்று நிவர்த்தியால் ஏற்பட்ட சுகத்தை அனுபவிக்கச் சாத்தியமாவதில்லை. ஏன்? தீர்ந்துபோன தொல்லையின் தொந்தமாக ஏற்படும் குட்டித் தொல்லைதான் இதற்குக் காரணம்.

பெரிய தொல்லையை எதிர்த்துப் போராடவும் அதில் வெற்றி காணவும் எப்படியோ முடிந்தது. இந்த வெற்றியைக் காணும்போதுதான் அதற்காகப் போரிட்டதினால் உண்டான உடல் களைப்பும் மனச் சலிப்பும் தோன்றத் தொடங்கும். அந்நேரத்தில் இந்தக் குட்டித் தொல்லையைச் சகிக்கத் திறன் போதியிருப்பதில்லை; அற்ப விஷயம் பிரமாதமானதாகத் தோன்றும்; அதைப் பொறுத்துக் கொள்ளவும் இயலாது; போராடவும் இயலாது. ஆகவே பெருந் தொல்லையுடன் போராடிப் பிழைத்தவன் சிறிய தொல்லைக்கு இலக்காகும்போது தோல்வியுறுகிறான். பெருந் தொல்லை தீர்ந்த பிறகு தொடரும் சிறிய தொல்லையின் இன்னலைச் சொல்லும்போதுதான் மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது வழக்கம்.

ஃப்ளூ ஜுரத்துக்குப் பின் ஏற்படும் பலஹீனம் இவ்விதத் தூவானத்தை ஒத்ததெனலாம். ஜுரத்துடன் போராடினதால் சரீரத்தின் சகிப்புத் தன்மை மிகப் பெரும்பாலும் தேய்ந்துவிட்டிருக்கும். இந்நிலையில் — படுமோசமான பலஹீனம் இருப்பது இயல்புதானே! 'பொலையடிச்சமாடு மாதிரி இந்தக் காலும் கையும் துணியாய்க் கிடக்கிறதே!' என்று ஜுரத்திலிருந்து விடுபட்டவர் சொல்வதைக் கேட்க மிகவும் பரிதாபமாக இருக்கும்.

'இரண்டு மூணு ஜலம் தலைக்கு விட்டாச்சானால் படிப்படியாய்ச் சரியாகப் போகும்' என்று அனுபவம் மிக்கவர் ஒருவர் சொல்வார். இதன் பொருள் காலக்கிரமத்தில் வியாதியுடன் போராடின களைப்பு தீர்ந்து பழைய நிலை சரீரத்துக்கு வரும் என்பதாகும்.


இப்படி துர்ப்பலனாகவிருக்கும் நிலையில்தான் மிகவும் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும். அற்பமான அபத்யம் நேர்ந்தாலும் மறுபடியும் ஜுரம் திரும்பிக் கொள்ளலாம். அல்லது வேறொரு புதிய வியாதி உண்டாகலாம். ஜுரம் குணமான பிறகு ஏற்படும் பலஹீனத்திலிருந்து சீக்கிரத்தில் விடுபடவும், அந்தப் பலஹீன நிலையில் வேறு வியாதிகள் உண்டாவதற்கான வாய்ப்பைத் தடுக்கவும், ஜுரம் இருக்கும்போதே சிறிது கவனம் செலுத்துவது அவசியம்.

ஜுரத்தின் ஆரம்ப காலத்திலும், ஜுரம் வருவதற்கு ஒன்றிரண்டு நாட்கள் முன்னதாகவும் ஆகாரத்தில் ருசியும்—சாப்பிடவேணுமென்ற ஆவலும் இராது. பசி குறைந்திருக்கும். அப்போது சிறிது ஆகாரத்தை மட்டுப்படுத்திவிடலாம்—கஞ்சியாகவாவது ஏற்கலாம்—அல்லது ஒன்றிரண்டு வேளை ஆகாரம் வேண்டாமென்று உபவாசமாவது இருக்கலாம். ஆனால், இதனால் சரீரபலம் பாதிக்கப்படவிடக் கூடாது!

''லங்கணம் பரமௌஷதம்!' என்று இரண்டு நாள் பட்டினி போட்டேன்...'' என்று சிலர் ஸ்வப்ரதாபத்தைச் சொல்வதையும் கேட்டிருப்போமல்லவா? அவ்வாறு 'இரண்டுநாள் மூணுநாள்' என்றெல்லாம் நிச்சயிக்க முடியாது. ஏதோ ஓரளவு லங்கணம் நல்லதுதான். ஆனால் அதன் காரணமாகச் சரீர பலத்தைப் பணயம் வைத்திடலாகாது. ஒரு வேளையோ - மறு வேளையோ - ஆகாரத்தைத் தவிர்க்கலாம்-ஓரளவாவது வயிற்றில் கனம் குறைந்து இலேசான நிலை ஏற்படுமானால் போதும். அப்போது முதல் பசியைச் சிறிது சிறிதாக அதிகப்படுத்திக் கொள்ளவும்-சரீர பலத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும்-ஏதேனும் ஆகாரத்தைக் கொடுக்கத் தொடங்குவது அவசியம்.



ஜுரத்தின் ஆரம்பத்தில்-ஓரளவு பசிவந்ததும் ஆகாரமாகக் கொடுக்கக்கூடிய சிறந்த கஞ்சி, நெற்பொரி அல்லது நொய்க் கஞ்சிதான். இவற்றிலும் நல்லது. ''நம்முடே பொடியரிசிக் கஞ்ஞியுண்டல்லோ......அ!'' என்று தலையை ஆட்டியொரு வெட்டு வெட்டி, கையினால் ஒரு வின்யாஸ முத்திரையையும் பரதப்படி பிடித்துக் காட்டுவர் நமது



கறுப்பு நாய் :—சரி, அப்போ நான் வரேன்.. கோடி வீட்டு மீனாட்சியம்மா குழந்தைக்குச் சோறு ஊட்டுவதற்காக எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள் !

சகோதரருள் ஒரு சார்பார். இது உண்மை. அதிலும் ஒரு பருக்கையும் இல்லாமல் கஞ்சித் தெளிவைக் குடித்தால் எவ்வளவு எளிதில் ஜெரிக்கும்! எத்தனை பலத்தையும் மனத் தெம்பையுமூட்டும், தெரியுமோ? ஏன்-குருணை நொய்யும் ஏறத்தாழ இதே குணம் உள்ளதுதான்.

நெற்பொரியை மெல்லிய சுத்தமான சீலையில் சிறிய மூட்டையாகக் கட்டி ஜலத்திலிட்டுக் கொதிப்பித்தால் - சிறிது நேரத்தில் பொரியின் பசை நீரில் ஊறி விடும். துணி முடிச்சை எடுத்துக் களைந்து விட்டுக் கஞ்சியைப் பார்த்தால் வைத்தியனுக்கு 'நமக்கு ஜுரம் வந்தாலென்ன' என்று தோன்றும். நாக்கில் ஜலம் ஊறும். தெளிவான இக் கஞ்சிதான் ஆரம்பத்தில் கொடுக்கத்தக்க—எளிதில் ஜீர்ணமாகக் கூடிய-பலமும் உற்சாகமும் தரத்தக்க சிறந்த ஆகாரம்.

சுக்கு-தனியா, இவற்றின் கஷாயத்தில் இப் பொரிக் கஞ்சியைத் தயாரித்து ஒரு சிட்டிகை திப்பிலிப் பொடியும்- தேவைக்குத் தக்கப்படி உப்புக்குப் பதிலாக - இந்துப்புவும் கூட்டித் தயாரித்த கஞ்சியானால் எத்தனையோ நல்லது.

இதைத் தொடர்ந்து சிறிது சிறிதாக ஆகாரத்தின் தரத்தை உயர்த்திக் கொண்டே வந்து ஜுரம் நின்ற பிறகு இரண்டு முறை சமைத்த சாதத்தில் ஒரு கல் உப்பும் சிறிது பருப்புக் கூட்டும் சேர்த்துச் சிறிதளவு சாப்பிட ஆரம்பிக்கலாம். 2, 3 தினங்களில் ரஸம் சாதம் சாப்பிடுமளவுக்குக் கொண்டு வருவதும் வேணும். குடிப்பதற்கு வெந்நீரோ - அல்லது முன் கட்டுரையில் சொன்ன ஷடங்க நீரோ - அல்லது தனியாவும் ஜீரகமும் ஒவ்வொரு ஸ்பூன் அளவு இட்டுக் காய்ச்சிய ஒரு படி ஜலத்தில் சிறிது சிறிதாக ஏற்றல் நல்லது.

முதலில் கழுத்து வரையில் வெந்நீரில் குளிக்கச் செய்து, ஒன்றிரண்டு தினங்களுக்கு பிறகு இஞ்சி யிட்டுக் காய்ச்சிய எண்ணெயைத் தலைக்குத் தேய்த்து எண்ணெய்க் குளி செய்வித்து, ஒரு சூடாய்க் காய்ந்த நீரில் முழுகி, தலை துவட்டி ஈரம் போக்கிச் சாம்பிராணி புகை காட்டி-சூடாக-புளி நீக்கிய-ரஸஞ் சோறு உண்டு—பகல் துயிலாமல் அன்று பத்தியமாயிருத்தல் அவசியம்.

"புலர்த்திய பின்பருந்தும்
போசனந்தனிற்புளிப்பு
ஜலத்துறுததி பால் பாகல் சாகம்
மீனிறச்சி யெச்ச
நிலத்தெழு பிரமபத்திரி நித்திரை
மடவாரென்னும்
நலத்துருவகையை நீக்கிப்
பின்னுநாளும்
பத்தியத்து நில்லே"

என்ற விதியை அனுஷ்டித்தல் நலமென்று சுருக்கத்தில் சொல்லலாம்.

இவ்விதம் 3, 4 எண்ணெய்க் குளிகள் வரையில் கடந்தால் ஜுரத்துக்குப் பின்னுண்டாகும் தூவானம் ஏற்படாது. விரைவில் சரீரம் தன்னிலை பெறும்.

"'என்னய்யா! ஒரு 'டானிக்' சொல்லப்படாதோ?' என்கிறீர்களா?"

"அதற்கென்ன? ஒன்றுக்குப் பத்தாய்ச் சொல்கிறேன்.

"மண்டூர பஸ்மம், கரிசலாங்கண்ணி லேஹியம் என்னும் கரிசாலை லேஹியம், பஞ்சதீபாக்கினி லேகியம், லோஹாஸவம் திராக்ஷாரிஷ்டம்....

"'என்னய்யா! நாம் செய்து கொள்ளக் கூடியதாகச் சொல்லுமய்யா' என்கிறீர்களா? இதோ, சுக்கு (தோல் சீவியது) ஒருபங்கு, பறங்கிச் சக்கை இரண்டு பங்கு, அமுக்கிளங் கிழங்கு மூன்று பங்கு, மூங்கிலுப்பு நாலு பங்கு என்று எடுத்துச் சேர்த்த சூர்ணத்துடன் பத்து பங்கு சர்க்கரையைக் கூட்டிக் கலந்து வைத்துக் கொண்டு, அரை அல்லது ஒரு டீஸ்பூன் அளவைச் சிறிது பாலுடன் தினம் இரண்டு வேளை சாப்பிட்டால் இருபது தினங்களில் கடோத்கஜன் பலம் வந்து விடும்."

"வேறு ஏதாவது?....."


"வேறு என்ன? தினமும் இரண்டு வேளையும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று. ஆனால் நான்கு மாதம் வரையில் பிரம்மச்சாரி-பிரம்மச்சாரிணியா யிருத்தல் அவசியம்." (தொடரும்)


22·10·57 முதல் சென்னையெங்கும்
புதுமைகள் நிறைந்த
திரை ஓவியம் .....
புகழேந்தியின் பைந்தமிழ்
காவியம்....
ஆரவல்லி
மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பு
BALU BROS

“காட்டலிடிக் க்ராக்கிங் - பிறகு மென்மையாகுதல்”

கிறுகிறுக்கும் அடிபோவர்





நான் வெகு தூரம் வந்துவிட்டேன்! துளையிட்டு பூமியினடியிலிருந்து வெளிக்கொண்டுவந்து, ரிபைனரிக்கு அனுப்பப்பட்டு, அங்கு பலவகை முறைகளுக்கு உட்படுத்துகிறார்கள்—'ப்ராக்ஷனல் டிஸ்டிலேஷன்' இம்முறைகளில் ஒன்று.

இப்பொழுது, என்னுடன் சேர்ந்திருக்கும் மற்ற பொருள்கள் அதிகப்படியான பலனடையச் செய்யும், 'காட்டலிடிக் க்ராக்கிங்' எனும் மற்றோர் முறைக்கு உட்படுகிறேன். எனது யாத்திரை பூர்த்தியடைய இன்னும் இருவகை முறைகள்தான் பாக்கி—ஒன்று 'ட்ரீடிங்' மற்றவை 'ஸ்வீட்டனிங்'. இம்முறைகளால், என்னிடத்திலிருக்கும் தூய்மையற்றவைகளையும், நாற்றங்களையும் நீக்கிவிடுகிறார்கள். நான் என்னுடைய இறுதியான ரூபத்தை—ஏன் ரூபங்களை. இதுமுதல் அடைகிறேன். பழைய சிநேகிதனாகிய என்னை. இனி உங்களால் அடையாளங்கூட கண்டுபிடிக்கமுடியாது. ஏனெனில் நாகரீகமடைந்துவிட்டேன்!

பூர்த்தி செய்து வகைவகையான பெட்ரோலிய பொருள்களை 'டாங்க் பார்' கிடங்குகளில் வைக்கிறார்கள். அங்கிருந்து விற்பனை ஸ்தலங்களுக்கு லாரிகள், வாகன்கள் மூலம் ஏற்றிச் செல்லுகிறார்கள். இந்த விருந்திலிருந்து நகர்ந்தவண்ணமாகவே இருப்பேன். சமுதாய சக்தியில் முன்னேற்றமடையும் எவ்வற்றிற்கும் உதவி புரிய எப்பொழுதும் தயாராகவே நான் இருந்துவருவேன்.

எதாவது ஒரு தோற்றத்தில் சஞ்சரித்துக்கொண்டே, உங்களை சந்திப்பேன் எப்படி என்பதை அடுத்த இதழை படித்து தெரிந்துகொள்ளுங்கள்.

ஸ்டான்வாக் - வளர்ச்சிக்கென்றே நிற்கும் பெயர்

FHYOC—46-4/57



பக்ரீத் பண்டிகையைக் கோலாகலத்துடன் கொண்டாட வாலாஜா பேட்டையிலுள்ள முஸ்லிம் பாய்மார்கள் தட புடலான சுப காரியங்களில் மிகவும் உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தனர். அவ் வேளையில் நவாப் இமாம் தௌலா சந்தில் ஓட்டு வீட்டில் குடியிருந்த தபால்காரர் ஹுஸேன் மாத்திரம் ''அந்த நன்னாள் ஏனோ இவ்வளவு விரைவில் வருகிறது?' என்று ஏங்கிய வண்ணம் சோகம் கப்பிய வதனத்துடன் யாவற்றையும் இழந்த அகதியைப் போல் திண்ணையில் சிரம் கவிழ்த்து அமர்ந்திருந்தார். அந்த வருஷத்துப் பெருநாளை மகிழ்ச்சியுடன் கழிக்க அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்காதபடி பொல்லாத காலதேவன் கொடுமை புரிந்துவிட்டான். கடந்த மாதத்தில் நிகழ்ந்துவிட்ட ஒரு சோகம் தோய்ந்த சம்பவம் ஹுஸேனின் மாசற்ற உள்ளத்தில் வட்டமிட்டு வதைக்கவே, அந்த எளியவரின் வேதனை பன்மடங்காயிற்று.

எந்த ஜீவனிடமிருந்து தப்பி ஒதுங்கியிருக்க அவர் துடித்தாரோ, அந்தப் பாலகன் பின்புறமாக வந்து அவர் கழுத்தை ஆசையுடன் கட்டிக்கொண்டதும் ஹுஸேன் விதிர் விதிர்த்துப் போனார்.

''பாவாஜான்! எனக்குச் சொக்காய் எப்போது வாங்கிட்டு வரப் போறீங்க?'' என்று பாசத்துடன் அஹமத் மிழற்றியதும் ஹுஸேன் ஒருகணம் மௌனம் சாதித்தார்.

''அதற்கென்ன என் கண்ணு! நாளன்னைக்குத்தானே பண்டிகை? இன்று ராவுக்கே சொக்காயும், பைஜாமாவும், தொப்பியும் வாங்கிட்டு வந்துடறேன்'' என்று சொல்லிக் கலகலவென்று உரக்கச் சிரித்துத் தம் வதனத்தில் தாண்டவமாடிய கலவரத்தை இருட்டடிக்க முயன்றார் ஹுஸேன்.

''அண்ணனுக்கும் வாங்கிட்டு வருவீங்களா?'' தனயனின் நாவிலிருந்து ஊடுருவிக் கிளம்பிய இந்தக் கேள்வியைச் செவிமடுத்த ஹுஸேன் துக்கத்தில் ஆழ்ந்து விட்டார். அவர் விழிகள் ரங்கராட்டினம் போல் சுழன்றன. நெடுமூச்சு அடிவயிற்றை உலுக்கிக் கொண்டு வெளிக் கிளம்பியது.



ஒருவாறு மனப் பதற்றத்தைச் சமாளித்துக் கொண்டு, ''நஸீருக்குத் தானே கேட்கிறே? அவனுக்கும் நல்ல பைஜாமாவும் குஞ்சம் ஆடும் துருக்கிக்குல்லாவும் வாங்கிட்டு வரத்தான் போகிறேன், அஹ்மத்!'' என்றார் ஹுஸேன், வறட்டு முறுவலை அதரங்களில் எழுப்பி விட்டு. அவர் நெஞ்சம் எரிமலை போல் குமுறிக் கொண்டிருந்தது.

''அண்ணன் ஊர்லேயிருந்து வருவான்னு சொன்னீங்களே, இன்னும் அது வரலியே! பஸ்ஸில் குந்திக்கிட்டு வருமா, இல்லாட்டி ரயிலில் ஏறி வருமா, பாவாஜான்?'' என்று வினவினான் அஹ்மத். அம்மதலையின் சொற்கள் ஹுஸேனின் உள்ளத்தை ஒன்றன்பின் ஒன்றாகத் துளைத்து விட்டன. அவர் நெற்றி வியர்த்தது. இமைகள் நீராடின. அங்கங்கள் உணர்வை இழந்தன.

''நஸீர் கட்டாயம் வருவான். பக்ரீத் நாளன்று இங்கேதான் இருப்பான். இப்போ என்னைப் 'பேஜார்'ப் படுத்தித் தொந்தரவு கொடுக்காதே, என் கண்ணு!'' என்று மிக்க சிரமத்துடன் ஈனத் தொனியில் நவின்று விட்டுப் படபடத்த மார்பைக் கையினால் அழுத்திக்கொண்டு எழுந்தார் ஹுஸேன். அவர் பற்கள் தந்தியடித்தன. கால்கள் தள்ளாடின. வாசற்படியிடம் ஒருகணம் மதிமருண்டு நின்று விட்டுத் தத்தித்தத்தி வீட்டுக்குள் நடந்து 'அல்லாஹ்' என்று ஈனக் குரலில் சொல்லிக் கொண்டே, நாடாக் கட்டிலின் மீது சோர்வுடன் சாய்ந்தார்.

தபால்காரர் ஹுஸேனின் நெஞ்சை வாட்டி வதைக்க அந்தத் துயரச் சம்பவம் இதுதான்!

ஹுஸேனுக்கு நிக்காஹ் ஆகிப் பதினொரு வருஷங்களுக்கு மேலாகி விட்டன. இந்தக் காலத்துக்குள் ஹுஸேன் தம்பதிகள் தங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு எத்தனையோ புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று அங்குள்ள அவுலியாமார்களின் 'தர்க்கா'க்களில் தொழுகை நடத்தியிருக்கின்றனர். அத்தகைய விஜயங்களில் கடந்த மாதம் ஆந்திராவிலுள்ள மங்களகிரியில் ஷேக்பீர் சாஹேப் தர்க்காவுக்கு ஹுஸேன் குடும்பம் போன போது அங்கு எதிர்பாராமல் நிகழ்ந்து விட்ட பயங்கரச் சம்பவம் அந்த இளம் தம்பதிகளின் உள்ளங்களில் ஆறாத ரணத்தை உண்டாக்கி விட்டது.

தாத்தாவும் பாட்டியும் கெஞ்சிய கெஞ்சலுக்கு மயங்கிவிட்ட அஹ்மத், பெற்றோர்கள் திரும்பி வரும் வரையில் அவர்களிடமே இருந்து விடுவதாக ஒப்புக் கொண்டான்.

ஆகவே, அஹ்மத்தைத் தாத்தா பாட்டியிடம் விட்டு விட்டு, ஹுஸேன் தம் இல்லக் கிழத்தி ஜுலேகா, மூத்த மகன் நஸீர் ஆகிய இவர்களை அழைத்துக் கொண்டு மங்களகிரி போய்ச் சேர்ந்தார்.

தொழுகை முடிந்தபின் கிருஷ்ணா நதிக் கரையோரத்தில் நிலவியிருந்த இன்ப மயமான இயற்கைக் காட்சிகளைக் கண்டு ஆனந்திக்கப் புறப்பட்டார்கள். ஹுஸேன் தம் பதிகள் தங்களை மறந்து உரையாடிக் கொண்டிருந்த வேளையில், நஸீர் தன் இஷ்டம் போல் ஆசைதீரப் புனலுடன் விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு பெரிய மீன் துள்ளிக் குதித்ததும், "அட, நஸீர்! இங்கே வந்து பார் வேடிக்கையை!" என்று பெற்றவள் தன் செல்வனைச் செல்லமாகக் கூப்பிட்டுக் கொண்டே திரும்பினாள்.

ஆனால் அந்தோ! அவள் கண்ட காட்சி!

ஆற்றின் சுழற்சியில் சிக்கிப் பிஞ்சுக்கரங்களை உயரே தூக்கிப் பெற்றோரிடம் 'இறுதி சலாம் வைத்து' விடைபெற்றுக்கொண்டு மூத்தமகன் தங்கள் மங்கிய பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்ததைக் கண்டதும் ஹுஸேனும் ஜுலேகாவும் வெலவெலத்துப் போனார்கள்.

போன இடத்தில் புத்திரனை இழந்த அந்தப் 'பாவிகள்' கண்ணீரும் கம்பலையுமாக நடைப் பிணம் போல் ஊர் திரும்பினார்கள். இல்லத்தில் காலடி வைத்தபோது அங்கு பரவி நின்ற சூழ்நிலை அவர்களைத் திக்குமுக்காடச் செய்து விட்டது. இளையவன் அஹ்மத் ஜுரத்தின் கடுமையைத் தாளாது பிதற்றிக் கொண்டு கயிற்றுக் கட்டிலில் புரண்டு கொண்டிருப்பதைக் கண்டதும் ஹுஸேன் வெறி பிடித்தவர் போல் மாறிவிட்டார். ஈடு செய்ய முடியாத பெருநஷ்டம் ஒருபுறம் சித்திரவதை புரியக் குடும்பத்துக்கு ஒளி தந்து எஞ்சி நிற்கும் மகனின் தேக நிலையைப் பார்த்த ஜுலேகா 'ஓ' வென்று கதறி அழுது விட்டாள். துயரத்தை வெளிக் காட்டாது அஹ்மதைக் கவனிப்பதில் பெற்றோரின் நாட்டம் சென்றது.

அல்லாவின் பெருங் கருணையால் ஒரு வாரத்துக்குப் பிறகு கட்டிலை விட்டு எழுந்து நின்ற மகன் வினவிய முதல் கேள்வி, "பெரிய பாய் எங்கே?" என்பதுதான். வேதனை வெள்ளத்தில் தத்தளித்த பெற்றோர் 'காமுச' வென்று இரகசியமாகப் பேசி ஓர் முடிவுக்கு வந்து விட்டார்கள்.

"நஸீர் அந்த ஊரிலேயே தங்கிவிட்டான். அப்புறம் வருவான்" என்று நெஞ்சறியப் பொய் சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்குவதற்குள் அவர்கள் பட்ட மன வேதனையைச் சொல்லி முடியாது.

"அண்ணன் வருவான். பக்ரீத் பண்டிகைக்கு இங்கு கட்டாயம் வந்து சேருவான்" என்று நாள்தோறும் மகனிடம் சொல்லி ஹுஸேன் மழுப்பிக் கொண்டு வந்த சமயத்தில் உண்மையிலே பக்ரீத் பண்டிகையும் சமீபித்து விட்டதை அறிந்ததும் அந்தத் தபால்காரரின் நெஞ்சு பகீரென்றது.

அந்தி நேரம் அக்கூடத்தை அரவணைப்பதைப் பார்த்துக் கட்டிலை விட்டு எழுந்தார் ஹுஸேன். கோட்டை மாட்டிக் கொண்டார். துருக்கிக் குல்லாவைத் தலையில் வைத்துக் கொண்டு பாதையில் நடக்கலானார்.

இரவு அவர் மனைக்குத் திரும்பியபோது அண்டை வீட்டாரின் சுவர்க் கடியாரம் மணி எட்டு என்பதைத் தனது சங்கீத ஒலியின் மூலம் அறிவித்தது.

'அஹமத், அஹமத்' என்று பாசம் பொங்கக் கூவிக்கொண்டே உள்ளே வந்து வாசற் கதவைச் சாத்தினார் ஹுஸேன்.

பிறகு மகனை இறுகத் தழுவிக் கொண்டு, "இதோ பார். எவ்வளவு சாமான்கள் உனக்குக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார்.

"அஹமத்! இந்தக் குஞ்சம் போட்ட குல்லா உனக்கு. அந்தச் சிவப்புத் தொப்பி உன் அண்ணனுக்கு. இந்தப் பைஜாமா உன்னுடையது! அது நஸீருக்கு..." என்று அடுக்கிக் கொண்டே போனபோது ஹுஸேனின் கருமணிகள் கண்ணீரிலே தத்தளித்தன.

"பாவாஜான்! அண்ணன் நாளைக்கு வந்துடும்லே" என்றான் அஹ்மத். பால் வடியும் அவன் வதனத்தில் கவலை ரேகைகள் இலேசாகப் படர்ந்திருந்தன.

ஹுஸேன் கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டு மௌனம் சாதித்தார். "சொல்லேன், பாவாஜான்! பெரிய பாய் கட்டாயம் வந்துடும்லே?"

"இந்தப் பக்ரீத் பண்டிகைக்கு வர முடியவில்லை என்று அண்ணன் கடிதம் போட்டு விட்டான்" என்றார் ஹுஸேன் தட்டுத் தடுமாறிக் கொண்டு.

"ஏன்?" இடுக்கிட்டான் அஹமத்.

"அவன் இருக்கிற ஊர் ரொம்ப ரொம்பத் தொலைவில் இருக்கு, கண்ணு!"—கைகளைப் பிசைந்து கொண்டு திரு திருவென்று விழித்தார் தந்தை.

"அந்த ஊரின் பெயர் என்ன பாவாஜான்?" விழிகளைச் சுழற்றினான் மகன்.


"நஸீர் இருக்கிற ஊரின் பெயர் சொர்க்கம்."—கைகளை உதறிக் கொண்டு அங்கலாய்த்தார் ஹுஸேன். அவர் இதயம் படக் படக்கென்று மௌனி அடித்துக் கொண்டது.


"சொர்க்கம் பெரிய ஊரா பாவாஜான்?" சாவதானமாகக் கேட்டான் அஹமத்.

"ஆமாப்டா, என் தங்கம்!"

"கடுதாசி போருமா?"

"ஏன் போக முடியாது? அதிருக்கட்டும். உன் அண்ணன் தான் வரலியே, அவனுக்காகக் கொண்டு வந்த சொக்காய், பனியன், பைஜாமா, தொப்பி இவற்றை நீயே எடுத்துக் கொள். என் கண்





ஹுக் குட்டி." மேல் துண்டினால் நீர் மல்கிய நயனங்களைத் துடைத்துக் கொண்டார் ஹுஸைன்.

பவித்திரமான பக்ரீத் நன்னாள் பலபல என்று புலர்ந்ததும் ஊரும் கலகலப்புடன் விழித்துக் கொண்டது. புத்தம் புதிய ஆடைகளையும் பஞ்சவர்ணக் கைலிகளையும்பளிச்சிட்ட ஷேர்வானிகளையும், பளபளத்த வண்ணக்குல்லாக்களையும் தரித்த சாயபுமார்கள் மிக்க களிப்புடன் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தார்கள் எவ்வளவோ முயன்றும் இல்லத்தில் அமைதியைக் காண முடியாமல் இனறிய ஹுஸைன் அல்லாஹுத்தாலாவின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு மணிகளை உருட்டிக் கொண்டிருந்தார்.

பொன்னிறச் சொக்காயையும், வெண்ணிறப்பைஜாமாவையும், குஞ்சம் தவழ்ந்தாடும் கண்ணைப் பறிக்கும் சிவப்பு நிறக் குல்லாயையும் அணிந்து கொண்டு தந்தையின் முன்னால் காட்சியளித்தான் அஹமத்.

"பாவாஜான்! என்னைப் பாருங்கோ" என்று ஆசையுடன் எதிரில் வந்த மைந்தனை அப்படியே அலக்காகத் தூக்கித் தம் தோள் மீது வைத்துக்கொண்டார் உஸேன்: "அண்ணன் உடைகளை நான் தொடவேயில்லை" என்று அஹமத் கூறினதும் ஹுஸேனின் மனநிலை அடியோடு மாறி விட்டது. முகம் விகாரமடைந்தது. கண்களில் காரிருள் சூழ்ந்து கொண்டது. 'உன் அண்ணனுடையது. அவன் வருவதாவது?' என்று மனத்துக்குள் முணுமுணுத்துக் கொண்டார். அவர் நெற்றியை இறுகப் பிடித்துக் கொண்டார். அவர் இதயத்தில் உருவாகிய சண்டமாருதம் உக்ரகோஷத்துடன் அடிக்கத் தொடங்கியவுடன் வெறி பிடித்தவர் போல் அவ்விடத்தை விட்டு மறுகணத்தில் மறைந்து விட்டார்.

எத்தனையோ வீதிகளிலும் சந்துகளிலும் மனம் போனபடி கால்கள் சோர்வடைய நடந்து சென்றார். அவர் மனத்திலுள்ள பதற்றம் சிறிதும் அடங்கவில்லை. உலகமே அவருக்கு அழுது வடிந்து கொண்டிருப்பது போல் அவருக்குப் பிரமை ஏற்பட்டது. இனி அவர் போக வேண்டிய பாக்கி இடம் அவர் ஊழியம் புரிந்து வந்த தபால் நிலையம் ஒன்றேதான்.

"என்ன சாஹேப்! இன்று பண்டிகையாச்சே! எதற்காக ஆபீஸ் வந்தீர்? இன்று விடுமுறையல்லவா!" என்றார் போஸ்ட்மாஸ்டர் சீதாராமய்யர் ஒரே வியப்புடன்.

"ஸார்!" என்று தொடர்ந்தவர் அப்படியே செயலற்று நின்றுவிட்டார் ஹுசேன்.

"சொல்லுங்கோசாஹேப்! என்னவிசேஷம்?"



கௌரி கல்யாணம்

எவ்வளவு பெரிய சம்பளத் தொகையையும் எளிதில் வெளியேற்றி, இளைத்துப் போன பர்ஸின் மூலமாக மாதா மாதம் நெருக்கடி விளைவிக்கும் கடைசி வாரம்! குமாஸ்தா பஞ்சுவின் பர்ஸிலிருந்து சில்லறைகள் கூட விடை பெற்றுக்கொண்டு போய்விட்டன. போதாக் குறைக்கு, பெண் பார்ப்பதற்காக மறுநாள் பட்டணம் துரைசாமியவர்கள் தமது பிள்ளை சகிதம் செய்யப் போகும் திருவிஜயம் வேறு. பஞ்சுவின் மனைவி மங்களத்தின் வலதுகை விரலொன்று முறிந்துவிட்ட காரணத்தினால் சமையல் செய்வது நாளுக்கு நாள் சிரமமாகி வந்தது. பெண் கௌரியின் கைவிரல்களோ, அற்புதமாக வீணை மீட்டப் பழகியவையேயொழிய, அடுப்பு மூட்டப் பழகியவை அல்ல. இவ்வளவுக்கும் மேலாக பாழும் பண நெருக்கடி!

அடுத்த வீட்டு டாக்டர் சுந்தரத்தின் சம்சாரத்தை பலமுறை கைமாற்றாகப் பணம் கேட்டாள் மங்களம். அதற்கு டாக்டரின் மனைவி, ''நீங்கள் எதற்காக உடம்பை அலட்டிக்கொள்ள வேண்டும். நாளைக்கு எங்கள் குழந்தைக்கு ஆண்டு நிறைவாச்சே. இங்கிருந்தே காப்பி, பலகாரம் எல்லாம் அனுப்பி வைக்கிறோம். இதுவிஷயம் காதும் காதும் வைத்தாற்போலிருக்கட்டும்!'' என்று பாலை வார்த்தாள்.

இதையறியாத பஞ்சுவோ, கஷ்டப்பட்டுக் கடன் புரட்டிக்கொண்டு ரவை, சீனி, ஏலக்காய், முந்திரிப் பருப்பு, நெய் இத்யாதிகளுடன் வந்து சேர்ந்ததும் திகைத்துப்போன மங்களம் அடுத்த வீட்டு உதவியைப் பற்றிப் பேச்செடுக்க இயலாதவளானாள். வாங்கி வந்திருந்த நெய்யின் தரமும் திருப்திகரமாக இல்லாமற் போகவே, மங்களம் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

மறுநாள், தாம்பூலம், சந்தனம், கற்கண்டு, சர்க்கரை முதலிய அம்சங்களுடன், பட்டணம் துரைசாமி கோஷ்டியினருக்கு சுமுகமான உபசரிப்பு ஜரூராக நடந்தது. பெண் கௌரியும் பதவிசாக வந்து பிள்ளையை நமஸ்கரித்து விட்டு, கேசரியும் காப்பியும் கொணர்ந்து வைத்தாள். கேசரியை அருந்தியபடி துரைசாமி பேசினார்:

''இந்தக் காலத்துப் பெண்களிடம் தேக வளர்ச்சியைக் காண்பதே அபூர்வமாயிருக்கிறது. சமைக்கத் தெரியும் அளவுக்குக் கூட அவர்களுக்கு சாப்பிடத் தெரியவில்லை—அதுசரி, இந்த கேசரி இருக்கிறதே, இது . . .''

பஞ்சுவுக்கு பகீரென்றது. கேசரியில் ஏதோ குறை சொல்லப் போகிறார் என்று பயந்து பேச்சை மாற்ற முயன்றார். ''நன்றாகப் பாடுவாள் கௌரி. எங்கே, கௌரி, ஒரு பாட்டுப் பாடு'' என்றார் பஞ்சு.

துரைசாமியோ திடீரென்று ஒரு வெடிகுண்டை தூக்கிப் போட்டார்:

''ஞாபகம் வருகிறதே. அடுத்த வீட்டிலதானே டாக்டர் சுந்தரம் குடியிருக்கிறார். அவரது குழந்தைக்கு ஆண்டு நிறைவு என்று அழைப்பு அனுப்பியிருந்தார். வந்த பிறகு சிற்றுண்டிக்குப் போகாமல்...''

டாக்டர் வீட்டு சிற்றுண்டிக்குப் போகும்பட்சத்தில் அதே கேசரியை சாப்பிட நேரிட்டு, குட்டு வெளியாகி விட்டால்? மறுபடியும் பேச்சை மாற்றினார் பஞ்சு.

''உங்கள் தம்பி சௌக்கியமா? நாடகத்தில் நடித்து வந்ததாக ஞாபகம்'' என்றார்.

''ஆமாம். சீக்காளியாக குசேலரைப் போல இருந்தவன் என் தம்பி. நாலே மாதங்களில் அவனை உடம்பு தேற வைத்தவர் டாக்டர் சுந்தரம். ஊசியும் ஒரு 'டானிக்' கூட கொடுக்கவில்லை அவர். விதவிதமான ஆகாரங்களாக வேளா வேளைக்கு சரியான

HVM. 312A-X29 TM

சாப்பாடும் அன்றாடம் பாலும் சாப்பிடும்படி திட்டம் போட்டுக் கொடுத்தார்...''

''ஒங்க தம்பி இப்போ என்ன பண்றான்?''
''இப்போ நாடகங்களிலே பீமசேன வேஷம் போடறது அவன்தான்! எல்லாம் நம்ப டாக்டர் சுந்தரத்தோட.''
''நீங்க...''

''இவ்வளவு நெருங்கி வந்தபிறகு தேநீர் விருந்துக்குப் போகாதபோனால் என்ன நினைப்பார் டாக்டர்?''

இக்கட்டான இந்த நிலையில் சமய சந்தியாக சகன ராகத்தில் கௌரியின் வீணையொலி எழும்பியதால், பேச்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி விழுந்தது.

பாட்டு முடிந்தபின், ''உங்கள் சம்சாரத்தின் கைவிரலில் என்ன?'' என்று கேட்டார் துரைசாமி.

''விரல் முறிந்துவிட்டது''

''இந்த விரலோடேயா சமையல்...?'' என்றார் விடாக்கண்டர்.

''ஆமாம். ஒரு தினுசாக சமாளித்து...''

''நம்ப முடியவில்லையே.''

''என்ன?''

''இந்த சொஜ்ஜியைப் பார்க்கும்போது...''

''சொஜ்ஜி'' என்றதும் பதறியே போனார் பஞ்சு. காரியமாகவே நடந்து பழக்கப்பட்ட அவர், இனியும் மூடி வைப்பது உபயோகப்படாது என்று கைவிட்டு, தன்னையும் அறியாமல் உண்மையை உடைத்துச் சொல்லத் தீர்மானித்துவிட்டார்.

''தெரியாத்தனம் செய்து விட்டேன், துரைசாமி, மன்னிக்க வேண்டும். டால்டாவிலும் செய்ததுதான் இது. ஆனாலும் பக்கத்து வீட்டில் தயாரானது. நாங்கள் செய்ததில்லை...''

''ஏன் பதறுகிறீர் பஞ்சு. டால்டாவிலும் செய்ததானால் என்ன தப்பிதம். நன்றாயிருக்கிறது சொஜ்ஜி என்றல்லவா சொல்ல இவ்வளவு நேரம் முயற்சி செய்து கொண்டிருந்தேன். நீங்களானால் இப்படி...''

''என்ன நினைப்பீர்களோ என்ற சந்தேகம்''

''நினைப்பதற்கு என்ன இருக்கிறது. எங்கள் வீட்டிலும் டால்டாதான் உபயோகிக்கிறோம். என்னைப் பாருங்கள். சௌக்கியமாக இருக்கவில்லையா? சமையலுக்கு மிகவும் சிறந்தது டால்டா வனஸ்பதி; புத்தம்புதிய தாவர எண்ணெய்கள் சுகாதார முறையில் பரிசுத்தமாகி அடக்கமான டின்களில் கிடைப்பது டால்டா. நெய்யிலுள்ள அதே அளவு வைட்டமின் 'ஏ' டால்டாவிலும் சேர்க்கப்பட்டுள்ளதால், நோய்நொடி வராமல் பாதுகாக்கக்கூடியது. பற்களையும் எலும்புகளையும் பலப்படுத்த உதவும் வைட்டமின் 'டீ'யும் டால்டாவில் உள்ளது.

''அப்படியா, கேட்க சந்தோஷம்!''

''கடைகளில் விற்கும் எண்ணெயை நம்ப முடியுமா?''

''வாஸ்தவம். சுத்தமாகக் கிடைப்பதே அபூர்வம்தான்.''

''ஆனால், நீங்கள் பார்த்திருப்பீர்கள், பச்சை மரம் படமும், டால்டா என்ற பெயரும் உடைய டின்களை. அடக்கமான டின்கள் ஆதலால், எப்பொழுதும் டால்டா சுத்தமாகவே இருக்கும்.''

''வீணாக வனஸ்பதிமீது தப்பபிப்பிராயம் கொண்டிருந்தேன், துரைசாமி.''

''எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை, பஞ்சு. அரசாங்கமே மூன்று வருஷ காலம் வனஸ்பதியைப் பரிசீலனை செய்து விட்டு, ஆரோக்கியத்திற்கு உத்தமமான கொழுப்பு அதுவே என்று தீர்ப்பளித்து விட்டது. எவ்விதமான பண்டமும் டால்டாவில் தயாரிக்கலாம், ஒவ்வொன்றும் தனது இயல்பான ருசியோடு பரிமளிக்கும்!'' என்று அழுத்தமாகக் கூறி முடித்தார் துரைசாமி.


''உங்கள் தம்பிக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே புதிய ஆரோக்கியத்துக்கு வழிகாட்டி விட்டார் டாக்டர் சுந்தரம்!'' என்று பூரிப்படைந்தார் பஞ்சு.

அன்று மாலை, வரன் பார்க்க வந்த பட்டணம் துரைசாமி விடைபெற்றுக் கொண்டபோது எல்லோர் வதனமும் மலர்ந்திருந்தன. பர்ஸ் காலியாகும் மாதக் கடைசி என்றாலும், கல்யாண வரவைக் கட்டியம் கூறிய குதூகலத்தால் எல்லோர் உள்ளங்களும் நிரம்பியிருந்தன!

HVM. 312B-X29 TM

கல்வி யாத்திரை

"செய்வன திருந்தச் செய்" என்பதில் வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களுக்குப் பரிபூர்ண நம்பிக்கை. அதனால் அவரது பல்வேறு கலாசாலைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் அயல் நாடு சென்று அநுபவம் பெற வசதி செய்வார். வெளிநாட்டு அநுபவம் பெற்ற பல பேராசிரியர்கள்



அழகப்பரின் கலாசாலைகளில் பணியாற்றியும் வருகிறார்கள். இந்த கோஷ்டியில் இடம் பெறச் சென்ற மாதம் 16வ டில்லியிலிருந்து கானடாவுக்கு அழகப்ப செட்டியார் பொறி இயல் கல்லூரிப் பேராசிரியர் திரு பி.எஸ். மணி சுந்தரம் அவர்கள் பிரயாணமானார்.

திரு பி.எஸ். மணி சுந்தரம் கட்டட நிர்மாணம் என்ற பொறி இயல் பிரிவில் மிகுந்த ஆர்வமும் தேர்ச்சியும் பெற்றவர். வள்ளல் அழகப்பர் அவர்களின் தீவிர முயற்சி காரணமாக இந்திய சர்க்காரால் "கொழும்புதிட்டத்"தின்கீழ் திரு மணி சுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கானடாவுக்குச் சென்றிருக்கிறார். அவரது கல்வி யாத்திரை வெற்றி பெற்றுத் தமிழகத்துக்குத் துணை புரியப் பிரார்த்திக்கிறோம்.

"இனிமேல்தான் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட வேண்டும் ஸார். பள்ளி வாசலில் 'நமாஸ்' தொழுது விட்டு நேராக இங்கு வந்து சேர்ந்தேன்."—ஹுஸேனின் தொனியில் நடுக்கம் ஊர்ந்தது. விழிகள் கலங்கின.

"ஹூம். அப்புறம்?" என்றார் சீதாராமய்யர், வெற்றிலையின் காம்பைக் கேலியாகக் கிள்ளியெறிந்து விட்டு.

உங்கள் ஊழியனுகிய நான் நல்ல நாளன்று உங்களை நேரில் கண்டு என் மரியாதையைத் தெரிவிக்க வேண்டாமா ஸார்?"

"சாஹேப்! இந்த கலிகாலத்தில் நீர் ஓர் கர்ம வீரரய்யா! உம்முடைய செயலைப் பார்த்ததும் இந்த லோகத்தில் மரியாதை, அடக்கம், பணிவு இன்னும் உசுரோடு இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டேன்!"

"அநேகருக்குப் பண்டிகை வாழ்த்துக் கடிதங்கள் இன்று வந்திருக்கும்; அவற்றை இன்றைக்கே பட்டுவாடாச் செய்து விட்டால் நல்லது என்று எண்ணியும் இங்கே வந்தேன், ஸார்"—விரல்களை நொடித்தார் ஹுஸேன்.

"பதினைந்து வருஷ சர்வீஸ் ஆகியும் இந்தக் கடமை உணர்ச்சி உம்முடைய ரத்தத்தில் கலந்து விட்டது, சாஹேப்!" என்று உணர்ச்சியுடன் சொல்லிக் கொண்டு துயரமே உருவெடுத்தாற் போல் தம் முன் நிற்கும் தபால்காரரை மேலும் கீழும் பேரன்புடன் பார்த்தார் சீதாராமய்யர். தபால் பெட்டியைத் திறந்து அதிலிருந்த கவர்களையும், கார்டுகளையும் மேசையின் மீது குவித்த போது ஹுஸேனின் நெஞ்சில் அமைதி பரவலாயிற்று. வீதி வாரியாகக் கடிதங்களைப் பாகுபடுத்திக் கொண்டிருந்த போது ஓர் விசித்திரமான விலாசமிட்ட கார்டைப் பார்த்ததும் ஹுஸேன் அப்படியே மலைத்துப் போய் விட்டார்.

"பெரிய பாய்,
சொர்க்கம்"

என்ற விலாசத்தை மறுமுறை படித்ததும் ஹுஸேனின் தலை கிறுகிறுத்தது. "சொர்க்கத்துக்குக்கடிதமா! எந்தப் பைத்தியக்காரன் எழுதி விடுப்பான்?" என்று எண்ணித் திகைப்படைந்ததும் அவர் உள்ளத்தை ஒரு பளுவான வஸ்து தாக்கியது போல் பிரமை உண்டாயிற்று. கார்டைத் திருப்பினார். எழுதியவர் விலாசம் தென்படவில்லை! கடிதத்தைப் படித்தாவது அனுப்பியவர் விலாசத்தைக் கண்டு பிடிக்கக் கடமை உணர்ச்சி வற்புறுத்தியதும் ஹுஸேன் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். இழந்த தைரியத்தை வலுவில் வரவழைத்துக் கொண்டு அக்கடிதத்தின் வரிகள் மீது பார்வையை ஓட்டலானார்!


"அன்புள்ள பெரிய பாய்க்கு,
சந் மூபாரக்.

பண்டிகைக்கு வருவே வருவேன்னு சொல்லிக் கடைசியில் ஏமாந்திப் புட்டே. உன் ஊர் ரொம்பத் தூரம்னு பாவாஜான் சொன்னார். அதனால்தான் நீ வரலேன்னு பாவாஜான் சொன்னார். உனக்குப் பாவாஜான் வாங்கித் தந்த சட்டை, தொப்பியை நான் பத்திரமாக வச்சிருக்கேன். சீக்கிரம் வந்து வாங்கிக்கோ. சட்டென்று வா, பெரிய பாய். — அஹமது"

கடிதத்தைப் படித்து முடித்ததும் தன் மீது கோடானுகோடி பேரிடிகள் வீழ்ந்து விட்டவை போல் ஹுஸேனுக்குப் பட்டது! உதிர ஓட்டம் நின்று விடவே கண்களில் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. இமைகளை இறுக மூடிக் கொண்டும், அவற்றை உடைத்துக் கொண்டு பீறிட்டெழுந்தது கண்ணீர்.

"அல்லாவே! நீயே சிருஷ்டித்த ஜீவனிடமிருந்து உன் செயலை மறைத்து வந்த குற்றத்துக்கு இவ்வளவு பெரிய தண்டனையா அளித்து விட்டாய்? இந்த ஏழையை இன்னும் சோதிக்காதே" என்று இதயம் இரு கூறுகளாகப் பிரிந்து விம்மிப் பிரலாபித்துக் கொண்டு சிறு குழவியைப் போல் விக்கிவிக்கி அழலானார் ஹுஸேன். அந்தத் தபால்காரரின் நேத்திரங்களிலிருந்து பொலபொலவென்று பொழிந்த விழிநீர் எதிரே குவிந்திருந்த அத்தனை வாழ்த்துக் கடிதங்களையும் நனைத்து விட்டது!

அலமுவின் காதலன்



கையெழுத்து மறையும் நேரம்.

ஒரு அரை வட்டம் அடித்துவிட்டுப் பஸ் வந்து நின்றது.

அந்தப் பஸ்ஸிலிருந்து பையை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினேன். காற்று தாடியைப் பிய்த்துக் கொண்டுபோயிற்று. இடது பக்கம் திருநீர்மலை கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது; வலது பக்கம் தெப்பக்குளம்.

கிளைத்துத் தழைத்திருந்த ஆலமரத்தினடியில் உள்ளமெல்லாம் பரபரக்க நின்றேன்.

எதிரே தெப்பக்குளத்தில் தண்ணீர் அலை மோதியது கரையில். மாடவீதியில், ஏழெட்டுப் பிள்ளைகள் 'கிட்டிப்புள்' விளையாடிக் கொண்டிருந்தார்கள். நூறு அடி தூரத்திலேயே அந்த வீடு வீதிக்கே முதலும் கடைசியுமாக நின்று கொண்டிருந்தது.

குளக்கரைப் படிக்கட்டில் கைப்பையை வைத்து விட்டு உட்கார்ந்து கொண்டேன். பையன்களின் விளையாட்டைப் பார்ப்பது போலப் பாவனை செய்தேன். ஆனாலும் என் கவனமெல்லாம் அந்த வீட்டின்மீதுதான் நிலைத்திருந்தது.

திடீரென்று பையன்கள் ஆட்டத்தை நிறுத்தி விட்டு நிமிர்ந்தார்கள்.]

''அம்மாச்சுடோய

அத்தனை பையன்களும் ஒருமிக்க எந்தத் திசையில் பார்த்தார்களோ, அங்கே நானும் பார்த்தேன்.

அந்தத் தனி வீட்டின் காமிரா அறை ஜன்னலில் ஒரு பூர்ண சந்திரன் உதயமாகியிருந்தது. கன்னங் கரிய இரு வண்டுகள் அதில் சுழன்றன.

ஒரு பையன் திடீரென்று,

'' அம்மாச்சு, அம்மாச்சு—உனக்கு
எப்பக் கல்யாணம்?''

என்று பாடினான். உடனே அத்தனை பையன்களும் ஒரே குரலில், பாடிக் குதித்தார்கள். ''ஓஹோய்'' என்று சீட்டியடித்தார்கள். என்ன அர்த்தமற்ற பாட்டு?

பார்த்துக் கொண்டே இருந்தேன். கரு வண்டுகள் இரண்டும் உருகி வழிவது தெரிந்தது. சட்டென்று அந்த முகம் ஜன்னலிலிருந்து மறைந்தது.

பையன்களைப் பிடித்துத் தலைக்கு இரண்டு அறை விடலாமா என்று ஆத்திரமாக வந்தது. ஆனால் முடியுமா?

பையைத் தூக்கிக்கொண்டு மலை மீது ஏற ஆரம்பித்தேன். மேல் விளிம்புக்கு வந்ததும், அந்த வீடு சின்னஞ்சிறு பொம்மை வீடு மாதிரி தோன்றியது. அதன் விஸ்தாரமான தோட்டத்தில்—யார் ?

வெளிர்ப் பச்சைப் புடவையின் தலைப்பு காற்றில் படபடத்தது.

அம்மாச்சுவா ?

★

பின்னால் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினேன். ஏற முடியாமல் ஏறி வந்து கொண்டிருந்தார் பட்டாச்சாரியார்.

''யாரு....யாத்திரீகரா ?''

''ஆமாம்!''

''எவ்விடமோ?''

''வடக்கே ஜலந்தர்!''

''தமிழ் பேசுகிறீர்களே?''

''பிறப்பு தெற்கே! உழைப்பு வடக்கே!''

''கோவிலைத் திறக்கிறேன். ஆனந்தமா தரிசனம் செய்யுங்கள்...அபூர்வமாகத்தான் ஜனங்கள் வருகிறார்கள் ...ஆனால் மகிமைவாய்ந்த ஸ்தலம்.''

பேசிக் கொண்டே கதவுகளைத் திறந்தார். சன்னதியில் விளக்கு மினுமினுத்தது.

''அர்ச்சனை ஏதாவது உண்டோ?''

''ஆமாம். இரண்டு!''

''பெயர், நட்சத்திரம் சொல்லுங்கள்.''

எப்படிச் சொல்லுவது என்று தயங்கினேன்! பிறகு ''விசாக நட்சத்திரம் ரங்கநாதன். இன்னொன்று ...இன்னொன்று...பரணி நட்சத்திரம் .... பெயர் ....பெயர் ....அம்மாச்சு, இல்லை, அலமேலு!'' என்றேன்.

திகைத்துப் போனவர்போல் அவர் என்னையே பார்த்தார். ''நீங்க....நீங்க... நீ....நீ ரங்குவா?'' என்று குழறினார்.

மென்று விழுங்கினேன். ''இல்லை. நான் ரங்கு இல்லை. ரங்கு என்றது என் சிநேகிதன். ராணுவத்திலே என்கூட இருந்தான். அவன் விருப்பப்படித்தான் இங்கே வந்து அவன் சொன்ன இரண்டு நட்சத்திரத்துக்கு அர்ச்சனை செய்கிறேன்!'' என்றேன்.

புஷ்பத் தட்டைக் கீழே வைத்து விட்டுப் பட்டாச்சாரியார் என் அருகில் வந்தார். ''நீங்கள் எந்த ரங்குவைச் சொல்கிறீர்கள்? டி. எஸ். ரங்கநாதனையா?'' என்று அவர் கேட்டபோது அவர் குரல் பதறியது.

''ஆமாம்!''

''அவனுக்குச் சொந்த ஊர் திருநீர்மலைதானே? தகப்பனார் பெயர் சௌந்தர ராஜன்தானே!''

''ஆமாம்!''

''சுவாமி! அவன் என் பிள்ளை, சுவாமி!'' என்று பட்டாச்சாரியார் கதறினார். அப்படியே உட்கார்ந்து விட்டார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாகப் பெருகி வழிந்தது. ''இந்த வயசில் என்னை எப்படித் தவிக்க விட்டுப் போய்விட்டான், பார்த்தீர்களா ?'' என்று விம்மினார். பிறகு ''இப்போது என் குழந்தை எங்கே இருக்கிறான்?





சௌக்கியமாக இருக்கிறானா?'' என்று ஆவலுடன் கேட்டார்.

என் கண்களிலும் நீர் துளித்தது. துக்கம் தொண்டையை அடைக்க, ''ஸ்வாமி! அதை மட்டும் கேட்காதீர்கள். அவனைப்பற்றி யாருக்கும் சொல்வதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கிறேன்!'' என்றேன்.

''ஏதாவது சமாசாரம் சொன்னானோ?''

''உங்கள் தங்கை பெண்ணுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்றால் அவளிடம் சேர்ப்பிக்கும்படி ஒரு கடிதம் கொடுத்திருக்கிறான்.''

''ரங்குவா? எங்கே?'' என்று பரபரப்புடன் கையை நீட்டினார் கிழவர். ''அவன் கையெழுத்தையாவது பார்க்கிறேன்'' என்றார்.

''உங்களிடம் எப்படித் தருவது? அலமேலுவிடம்தான் கொடுக்கும்படி உத்தரவு.''

' அவளுக்குத்தான் அவன் போனதிலிருந்து சித்த ஸ்வாதீனமே இல்லையே! இந்த நிலையில் ரங்குவின் கடிதத்தை அவள் படிக்க முடியுமா? என்னிடம் தாருங்கள். பார்க்கிறேன்'' என்றார் கிழவர்.

கடிதத்தை நீட்டியபோது என் கைகள் நடுங்கின; அதை வாங்கின கிழவரின் கரங்களும் நடுங்கின. பைத்தியம் பிடித்த அலமேலு அருகில் வந்து நின்றாள்.

ரங்குவின் கடிதம்

சௌபாக்கியவதி அலமேலுவுக்கு, உன் அத்தான் ரங்கநாதன் ஆசீர்வாதம்.

இந்தக் கடிதத்தைக் கொண்டு வருபவர் என்னைப் போலவே வாழ்வில் வெறுப்புற்று ராணுவத்துக்கு ஓடிவந்தவர்.

இந்த நாள்வரையில் உனக்குக் கல்யாணம் ஆகவில்லை என்றால்தான் இந்தக் கடிதத்தை உன்னிடம் சேர்ப்பிக்கும்படி சொல்லியிருக்கிறேன். இன்னும் உனக்குக் கல்யாணம் ஆகியிருக்காது என்று என் மனசில் எதுவோ சொல்லிக் கொண்டே இருக்கிறது. எப்படி ஆக முடியும்? இந்த உலகத்தில் எந்த ஆண் பிள்ளையும் உன்னைக் கைப்பிடிக்கக் கூசும்படியாக அல்லவா செய்துவிட்டு வந்தேன்?

குழந்தைப் பருவத்தில் நடந்ததானாலும் நீயும் நானும் சந்தித்த முதல் காட்சி இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. நீயும் உன் அம்மாவும் அன்றைக்கு வண்டியில் வந்து வாசலில் இறங்கினதும் நான் ''அத்தை! எனக்கு என்ன கொண்டு வந்தாய்?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

அத்தை உன்னை எனக்குச் சுட்டிக் காட்டினாள். உன் கையிலிருந்த குஞ்சாலாடுதான் என் கண்களில் பட்டது. இயற்கையிலேயே முரடனுகையினால் நான் சட்டென்று பாய்ந்து உன் கையிலிருந்த பண்டத்தைப் பிடுங்கிக் கொண்டேன். ஐயோ! இப்போது மட்டும் நான் ஓடி விடாமல் இருந்து, உன் அம்மாவும் உயிர் வாழ்ந்து, அவ்விதம் காட்டுவாளேயானால் நான் அப்படிச் செய்வேனா? உன் சௌந்தர்ய முகத்துக்கு இன்னும் அழகுனூட்டும் உன் நீண்ட மூக்கைப் பிடித்தல்லவா இழுத்து வேடிக்கை செய்வேன்?

அந்த வருஷம் ரதோற்சவத்தை முன்விட்டுக் கொண்டு ஆழ்வார்திருநகரியிலிருந்து என் சித்தப்பா பிள்ளைகளான சாரங்கனும் வேதவல்லியும் வந்தார்கள். சாரங்கன் மோட்டாரிலிருந்து அட்டகாசம் செய்து கொண்டு இறங்கினான்.

அவர்கள் வருகை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஸூட்டையும் பூட்டையும் போட்டுக் கொண்டு சாரங்கன் ''என்ன மிஸ்டர் பெரியப்பா, சௌக்கியமா? பி. ஏ. இப்போது எழுதியிருக்கிறேன், அத்தை... மிஸ் அலமேலு!..., மிஸ் ஜிம்மி பாய் என்று உடனே பெயரை மாற்றிக் கொள். உன் முகத்துக்கும் காது ஜிமிக்கிக்கும் ரொம்பப் பொருத்தமாக இருக்கும்'' என்று பொரிந்து தள்ளியபோது என் மனசுக்குள் பொறாமை பொங்கிப் பெருகியது.

வந்த இரண்டே நாட்களில் சாரங்கன் உன் அம்மாவை வசப்படுத்தி விட்டான். ''நீ ஏன் கவலைப்படுகிறாய், அத்தை! இன்னும் இரண்டே மாசத்தில் ரிஸல்ட் போட்டு விடுவான். வந்ததுமே உத்தியோகம் போட்டுத் தர மெட்ராஸ் கம்பெனி ஒன்றும் காத்திருக்கிறது. அப்புறம் முகூர்த்தம் வைச்சுடலாம். அம்மாச்சுவுக்குச் சம்மதமா என்று மட்டும் கேட்டுக் கொள்'' என்றான்.

''அவளை என்னடா கேட்கிறது, குழந்தை!'' என்றாள் அத்தை.

இது காதில் விழுந்த போது சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். கையை அப்படியே உதறிவிட்டுக் கொல்லைப்புறம் சென்றேன். கொல்லைக்கட்டில் நின்று நீயும் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறாய் என்று தெரிந்ததும், ''காதில் விழுந்ததா?'' என்று உறுமினேன். வேதனையா, வெற்றிக் களிப்பா என்று இனம் கண்டு பிடிக்க முடியாத சிரிப்பு ஒன்றை நீ சிரித்தாய். அந்தச் சிரிப்பு என் நெஞ்சை எரித்தது. சுட்டு விடுகிறாற் போல ஒரு பார்வையை உன் மேலே வீசி விட்டுத் தெப்பக் குளத்தின் கரையில் வந்து உட்கார்ந்தேன்.

திடீரென்று என்னுள் எதுவோ எழுந்து உட்கார்ந்து கொண்டது. ''எப்படியானாலும் சரி! இந்தச் சாரங்கன் மட்டுமல்ல; எந்தச் சாரங்கன் வந்தாலும் அம்மாச்சுவைக் கண்டாலே வெறுப்புற்று ஓடும்படி செய்துவிட வேண்டும்!'' என்று கூறியது.


பயங்கரமான — இல்லை, மிகமிக மோசமான—திட்டம் ஒன்று என்னுடைய மூளையில் உருவாகியது.

நம் வீட்டுக் கொல்லையிலே விஸ்தாரமானதொரு நந்தவனம் இருந்ததல்லவா?

அந்த நந்தவனத்தின் மேலண்டைப்புறத்துச் சவுக்கண்டியில், குளுகுளுவென்ற கூரையினடியில், நீ தினமும் பிற்பகலில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருப்பாய்.

சாரங்கனும் வேதமும் ஏற்கெனவேயே தோட்டத்துக்குள் ரோஜா பதியன்களைப் பார்க்கப் போயிருந்தது எனக்குத் தெரியும். அலறு உள்ளே நுழைந்த சில நிமிஷத்துக்கெல்லாம் நான் அவர்களை நோக்கிச் சென்றேன்.

சாரங்கனும் வேதமும் எந்த எந்தப் பதியன்களை ஊருக்குக் கொண்டு போகலாம் என்று விவாதம் செய்து கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் சென்று, ''அம்மாச்சு இங்கே வந்தாளா?'' என்று கேட்டேன்.


குடும்பத்தினர் யாவரையும் மகிழவைப்பதும்
பண்டிகைக்கேற்றதுமான அன்பளிப்பு...
ஒரு ஆல்-வேவ் நேஷனல்-எக்கோ ரேடியோ
ரூ. 200/00-லிருந்து பல்வேறு விலைகள்
மாடல் 241:
மாடல் பி-703:
மாடல் பி-712:
மாடல் 187:
நேஷனல்-எக்கோ

"அலமுவா? இல்லையே" என்ற சாரங்கன், என்னை ஒரேமாதிரியாகப் பார்த்தான்.

அலமு! நீ அந்தப் பக்கமாகப் போகவில்லை. எனக்குத் தெரியாதா? இருந்தாலும் என் திட்டத்தின் அடுத்த கட்டத்தை வெற்றிகரமாக நடித்தேன். தலையைச் சொறிந்து கொண்டே, அவன் காதில் விழும்படியாக, "மத்தியானம் தோட்டத்தில் சந்திக்கச் சொன்னாளே!" என்று முணுமுணுத்தேன். பிறகு "சரி! சவுக்கண்டியில் இருப்பாள்; போய்ப் பார்க்கிறேன்!" என்று சொல்லி விட்டு நகர்ந்தேன். ஐயோ! அப்போது சாரங்கன் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

இரண்டு பக்கம் பசலைக்கொடிகள் பின்னிக் கிடந்தன. அதன் வழியே பார்க்கையில், அலமு! நீ பொற்கொடியைப் போல் சவுக்கண்டியில் படுத்திருந்தாய். உன் கண் இமைகள் மூடியிருந்தன. அதன் ஓரத்தில் முத்துப் போல இருதுளி நீர் நின்றது.

தங்கச் சிலை போன்ற உன் மேனியின் மோகன லாவண்யத்தை அந்தக் கோலத்தில் பார்த்ததும், 'ஐயோ! இது அந்தப் பாவி சாரங்கனுக்கா?' என்று என் மனம் அலறியது.

"நம் இருவர் உள்ளத்தையும் யாராலும் பிரிக்க முடியாது" என்று கூறி உன் கரத்தை இறுகப் பற்றினேன்.

ஒரு கணத்தில் உன் கண்கள் விழித்தன. ஆனால் சத்தமிடுவதற்குத் திறந்த உன் வாய் நின்றே போய் விட்டது. "அம்மாஞ்சி! அம்மாஞ்சி! விடு அம்மாஞ்சி! யாராவது வரப் போகிறார்கள்!" என்று ஈனக் குரலில் கதறிவிட்டு என்னை உதற முயன்றாய்.

அதே சமயம் பின்னாலிருந்து "ஓஹோ!" என்று குரல் கேட்டது. இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம். சாரங்கனும் வேதமூர்த்தி அர்த்தபுஷ்டியான பார்வையுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அங்கே திடீர் என்று மின்னித்த அப்பாவின் பார்வை. "சீ நீ இவ்வளவு அற்பனா?" என்பது போல் இருந்தது. என்னால் அதைத் தாளவே முடியவில்லை. சர்வ சௌபாக்கியத்தையும் இழந்துவிட்ட அபாக்கியைப் போல 'ஹோ!' என்று கதறிக் கொண்டு, சூழ்ந்து வந்த இருளில், வயல் வெளியில் தெறிகெட்டு ஓடினேன்.

அலமு! சென்னைப் பட்டணம் வந்து சேர்ந்தேன். ராணுவத்துக்கு ஆள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டேன்.

ஆறு வருஷ காலம் ஓடிப்போய் விட்டது. இந்த ஆறு வருஷ காலத்தில் சொல்லி முடியாத சித்திரவதையை என் உள்ளம் அநுபவித்து விட்டது. ஆனாலும் அத்தனை துன்பத்தினிடையிலும் உன் உருவத்தை என்னால் கணமும் மறக்க முடியவில்லை.

அலமு! என் பாவத்தை நீ ஒருநாளும் மன்னிக்க முடியாதுதான். ஆனால் என்னால் உன் வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்த முடியும். இறைவன் அதற்கு ஒரு மார்க்கம் காட்டியிருக்கிறார். இந்தக் கடிதத்தைக் கொண்டு வருகிற கோவிந்தராஜன்தான் அது.

நம்முடைய கதையை யெல்லாம் ஒன்று விடாமல், ஒன்றையும் மறைக்காமல் இவனிடம் சொன்னேன். சொல்லிவிட்டு விம்மி



கணவன் : அவ்வளவு விலை உயர்ந்த புடவையை எடுத்துக் கொள்ளாதே! அதை நீ உடுத்திக்கொண்டு வரும்போது நான் உன் கூடக் கிழிசல் சொக்காயைப் போட்டுக்கொண்டு வந்தால் நன்றாக இருக்குமா?

oooooooooooooooooooooooooooooooo

அழுதேன். "யார் இனி என் அலமுவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வார்கள்?" என்று கதறி அழுதேன். "நான் செய்து கொள்கிறேன்" என்று கோவிந்தராஜன் முன் வந்தான்.

அலமு! நீ கோவிந்துவை மணந்துகொண்டு மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பது என் ஆசை. மனப்பூர்வமாக உன்னை அவனிடம் ஒப்புவிக்கிறேன். இந்த உலக வாழ்வைப் பொறுத்தவரையில் ரங்கநாதனை யாரும் இனி காணவே முடியாது. ஆனாலும் நீயும் கோவிந்தராஜனும் இணைந்து சந்தோஷமாக வாழ்ந்தால் அதுவே எனக்கு அளவற்ற மகிழ்ச்சி தரும்.

என் பெற்றோர்களைப் பற்றி நான் இதில் ஒன்றுமே சொல்லவில்லை. காரணம் அவர்கள் பிள்ளை என்று சொல்லிக் கொள்ள எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

உன்னை மறவாத
ரங்கு

கடிதத்தின் பிற்பகுதியைப் படித்தபோது கிழவரின் குரல் தடுமாறிற்று. படித்த பிறகு என்னைச் சற்று நேரம் பார்த்தார். பிறகு விழி ஓரத்தைத் துடைத்துக் கொண்டு அலமேலுவைப் பார்த்தார். அவள் தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ரங்குவின் விருப்பத்தை நான் நிறைவேற்றி வைக்கிறேன், அப்பா! ஆனால் இந்தப் பைத்தியத்தை.." என்று கிழவர் இழுத்தார்.

நான் அலமேலுவை ஒருகணம் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்தாள். அவள் விழிகளில் நிறைந்து நின்ற ஒளி வெள்ளம் என் நெஞ்சின் இருளைப் போக்கியது.

"நானும் ரங்குவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் தயார். இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறேன்" என்றேன்.

கிழவர் வியப்புடன் என்னைப் பார்த்தார். 'ரங்குவிடம் உனக்கு இத்தனை அன்பா?' என்பது போலிருந்தது அவர் பார்வை.

"இதோ பாருங்கள்; நாளை இரவு கல்கத்தா மெயிலில் நாங்கள் புறப்படவேண்டும். ஊரை அழைத்து ஆடம்பரம் ஒன்றும் வேண்டாம். சுருக்கமாக, தாயார் சன்னதியில் விவாகத்தை முடித்து அனுப்பி விடுங்கள்" என்றேன்.

* * *

அன்று இரவு சாப்பாட்டுக்கு மேலே கிழவரும் நானும் திண்ணையிலேயே படுத்துக் கொண்டோம். கிழவர் ரங்குவைப் பற்றியே நெடுநேரம் பேசினார்.

கடைசியில் கிழவர் மெய்மறந்து குறட்டை விடத் தொடங்கினார்.

ஆகாயத்தில் கன்னங்கரிய இருள் போர்வையைப் போர்த்தியிருந்தது; நட்சத்திரங்களின் மங்கல ஒளியில் எதிரே குன்றும் கோவிலும் கரும்பூதம் போல நின்று கொண்டிருந்தன. அம்மாச்சுவின் இணையற்ற பேரழகு ததும்பும் முகார விந்தத்தை நினைத்தபடியே தூக்கம் வராமல் படுத்துக் கிடந்தேன். தலையணைக்குப் பின்னால் காமிரா அறை ஜன்னல் கதவுகளின் இடுக்குகள் வழியாக மல்லிகையின் மணம் கம்மென்று வந்தது.

ஆம்; அலமேலுதான் வெளியே வந்தாள். ஒரு நிமிஷம் நிலைப்படியிலேயே தயங்கி நின்றாள். பிறகு வீதியில் இறங்கி நடக்கலானாள்.

எங்கே போகிறாள்? ஒரு வேளை...? ஐயோ! இந்தக் கல்யாணம் பிடிக்காமல்....

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தேன். அவளைப் பின்தொடர்ந்து போனேன். கிழக்கே நடந்து மலையின் மீது ஏறத் தொடங்கினாள்.

திருநீர்மலைக்கு விஜயம் செய்திருப்பவர்கள், அந்த மலையின் மேல்தளத்தில், மேலண்டைப் புறம் பாறை செங்குத்தாக இருப்பதையும் கீழே கிடுகிடு பள்ளத்தையும் பார்த்திருக்கலாம். அலமு இந்த இடத்துக்கு வந்ததும் நின்றாள். காற்றிலே பறந்த புடவைத் தலைப்பை இடுப்பிலே வரிந்து கட்டினாள். இரண்டு கைகளையும் ஆகாயத்தில் தலைக்கு மேலே தூக்கினாள். "சுவாமி!...பகவானே?"

ஒரு கணத்தில் அவள் உத்தேசம் எனக்குத் தெரிந்து விட்டது. அடுத்த கணம் பாய்ந்து சென்று அவளைப் பிடித்துப் பின்னுக்கு இழுத்து விட்டேன்.

படபடக்கும் குரலில், "அலமு! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?" என்றேன்.

"கெக் கெக்கே" என்று அவள் சிரித்தாள். பிறகு, "கல்யாணம்...கல்யாணம்" என்று முணு முணுத்தாள்.

"அலமு" என்று உறுமி அவள் கையை இறுகப் பிடித்து அழுத்தினேன். என் பிடிக்குள் அவள் கை சிலிர்ப்பது தெரிந்தது.

"அலமு! நீ உண்மையில் பைத்தியமில்லை. பைத்திய வேஷம் போட்டு ஊரைத்தான் ஏமாற்றி வருகிறாய். இனியும் என்னை ஏமாற்ற முயல வேண்டாம்!" என்றேன்.

அலமு முதல் தடவையாக வாய் திறந்து பேசினாள். "ஐயா! மன்னியுங்கள். உங்களை ஏமாற்ற முயன்றது தப்புத்தான்!" என்றாள்.

"அலமு! உன்னைப் பற்றி ரங்கு ஆயிரக் கணக்கான தடவைகள் சொல்லியிருக்கிறான். உனக்கு அழகு அதிகமா, புத்திசாலித்தனம் அதிகமா என்று அவனுக்கு எப்போதும் சந்தேகம்தான். புத்திசாலித்தனம்தான் அதிகம் என்று இப்போது தெரிகிறது."

"ஐயோ! இந்தப் பாவியால் அல்லவா அவர் ஓடிப் போனார்?" என்றாள்.

"அலமு! நிஜமாகவா சொல்கிறாய்? நீ சாரங்கனுடைய பணத்திலும், பட்டத்திலும் மயங்கவில்லையா? ரங்குவை-முரட்டு ரங்குவையா—விரும்பினாய்?" என்று கேட்டபோது என் குரல் எனக்கே இடி முழக்கம் போல் கேட்டது.

அலமேலு ஒரு நிமிஷம் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிறகு கனவிலிருந்து விழித்தவள் போல், "என்ன கேட்கிறீர்கள்? ரங்குவை நேசித்தேனா என்றா? அவரை நேசிக்கவில்லை என்றால் எதற்காக இத்தனை வருஷகாலம் பைத்திய வேஷம் போட வேண்டும்?" என்றாள்.

'அலமு! நீ உத்தமி! நீ உத்தமி!' என்று என் இதயம் பொங்கியது.

"அலமு! நல்லது! ஒன்று சொல்கிறேன். கேள். ரங்குவுக்காக உயிரைவிட நீ இங்கே வந்தாய்; உன்னை அடையா விட்டால் நானும் உயிரை விட்டுவிடப் போவதாகச் சொன்னேன். வா! சாவின் சன்னதியிலாவது இரண்டு பேரும் கையைக் கோத்துக் கொண்டு விழலாம்! என்ன சொல்கிறாய்?" என்றேன்.

"வேண்டாம், வேண்டாம்!" என்று கூறிக் கொண்டே அலமு என் மார்பில் சாய்ந்தாள். அவள் விம்மல் மட்டும் அந்தப் பிரதேசத்தில் கேட்டுக்கொண்டே இருந்தது.

நெடுநேரம் அங்கேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். தூரத்தில் விடி வெள்ளி பளிச்சென்று தெரிந்தது. மணி ஐந்து.

நானும் அலமுவும் கைகளைக் கோத்துக் கொண்டு மலையிலிருந்து கீழே இறங்கினோம்.

★

எனக்கும் சௌபாக்கியவதி அலமேலுவுக்கும் கல்யாணம் ஆனதும், கிழவருடைய வில் வண்டியில் நாங்கள் புறப்பட்டபோது, "என்னை மணந்துகொள்ள எப்படிச் சம்மதித்தாய்?" என்று கேட்டேன்.

"உங்கள் அன்பும் அம்மாஞ்சியின் அன்பும் சமமானது என்று தெரிந்து கொண்டதினால் தான் சம்மதித்தேன்! நேற்றைக்கு மலை மீது என் கைகளை இறுகப் பிடித்தீர்கள் அல்லவா? அத்தனை முரட்டுத்தனமாக வேறு யாரால் பிடிக்க முடியும்? அப்போதே தெரிந்து கொண்டு விட்டேன், உங்களை!"

அலமுவின் கைகளைப் பிடித்து ஆதுரத்துடன் அழுத்தினேன். "நம் இரண்டு பேருடைய அன்புச் சோதனைகளும்தான் முடிந்து விட்டனவே! இனி மேல் உங்களுக்கு இந்தத்தாடி எதற்கு? சென்னை போனதும் எடுத்து விடலாமல்லவா!" என்றாள்.

இந்தக் கோவிந்தராஜனுக்குத்தான் பூர்வாசிரமத்தில் 'முரட்டு ரங்கு' என்று பெயர்!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.



பளபளப்போடு
நறுமணமோங்கும் கேசத்திற்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட்
ஹேர் ஆயில்
(கேசத்திற்கு பரிமள தேங்காயெண்ணெய்)
ரோஜா அல்லது மல்லிகை மணமூட்டியது
PERFUMED
COCONUT
HAIR OIL
ROSE
இலவசம்...

ECH. 2-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

